» தொகுதி 3, இதழ் 1

» ஜூலை 1-15, 2022

» இலவச விநியோகத்துக்காக

நியூ இந்தியா சமாச்சார்

NEW INDIA SAMACHAR

Volume 3, Issue 1

July 1-15, 2022

FOLLOW US @NISPIBIndia

திறனாக்குவோம் இந்தியாவை
திறம்படச் செய்வோம் இந்தியாவை

புதிய விடியல், புதிய செழிப்பு.... நமது நாடு
தற்சார்புடைய நாடாக மாறுவதற்கு

டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி

'ஒரே தேசம், ஒரே சட்டம், ஒரே தேசத்தின் தலைவர், ஒரே சின்னம்' ஆகியவற்றின் முன்னோடி

டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் 122-வது பிறந்த நாளான ஜூலை 6-ம் தேதி அவருக்கு இதயப்பூர்வ அஞ்சலி

டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி பாரதிய ஜனசங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும், ஜம்மு-காஷ்மீரில் திணிக்கப்பட்ட 370 வது பிரிவை எதிர்த்த முன்னணி ஆளுமையாகவும் இருந்தார். அவர் தனது வாழ்நாள் முழுவதையும் இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தார். அவர் தனது உயர்ந்த இலட்சியங்களால் நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்களுக்கு உத்வேகம் அளித்தார். அதே நேரத்தில், அவர் ஒரு சிறந்த அறிஞராகவும், அறிவுஜீவியாகவும் தனது அழியாத அடையாளத்தை காண்பித்துவிட்டு, தேசத்தைக் கட்டமைப்பதற்காக தனது வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தார்.

“இந்தியாவின் புகழ் அதன் அரசியல் அமைப்பு சார் நிறுவனங்கள் மற்றும் இராணுவ வலிமையில் தங்கியிருக்கவில்லை, மாறாக அதன் ஆன்மீக மகத்துவத்தில், சத்தியம் மற்றும் சுயம் பற்றிய அதன் சிந்தனைகளில், பாதிக்கப்பட்ட மனிதகுலத்தின் சேவையில் வெளிப்பட்ட உன்னத சக்தியின் எல்லையற்ற தன்மையில் அதன் நம்பிக்கையின் மீது தங்கியுள்ளது.

- டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி

“டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் ஜெயந்தியை முன்னிட்டு அவருக்கு நான் தலைவணங்குகிறேன். ஒரு பக்தியுள்ள தேசபக்தரான அவர், இந்தியாவின் வளர்ச்சிக்கு முன்மாதிரியான பங்களிப்புகளைச் செய்தார். இந்தியாவின் ஒற்றுமையை மேம்படுத்த அவர் துணிச்சலான முயற்சிகளை மேற்கொண்டார். அவரது சிந்தனைகள் மற்றும் லட்சியங்கள் நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கானவர்களுக்கு வலிமையைத் தருகின்றன.

-நரேந்திர மோடி* பிரதமர்

நியூ இந்தியா
சமாச்சார்

தொகுதி 3, வெளியீடு 1 ஜூலை 1-15, 2022

EDITOR
JAIDEEP BHATNAGAR,
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

SENIOR CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
VIBHOR SHARMA

ASST. CONSULTING EDITOR
CHANDAN KUMAR CHOUDHARY
AKHILESH KUMAR

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (English),
JAY PRAKASH GUPTA (English),
ANIL PATEL (Gujarati),
NADEEM AHMED (Urdu),
PAULAMI RAKSHIT (Bengali)
HARIHAR PANDA (Odia)

SENIOR DESIGNERS
SHYAM SHANKAR TIWARI
RAVINDRA KUMAR SHARMA

DESIGNERS
DIVYA TALWAR, ABHAY GUPTA

CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES
https://newindiasamachar.pib.gov.in/news.aspx

TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK:
https://newindiasamachar.pib.gov.in/archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'

[illegible]ர்பக்[illegible]ங்[illegible]ளில். . .

திறன் மேம்பாட்டு மை[illegible]ரு[illegible]டுத்து [illegible]ரும் இந்தி[illegible]

அட்டைப்பக்க கட்டுரை

திறன் மேம்பாடு என்பது வேலைவாய்ப்பின் புதிய தாரக மந்திரமாக மாறியுள்ளது, இதன் மூலம் நாட்டின் இளைஞர்கள் தங்களுக்கான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் கதவுகளைத் திறந்து வருகின்றனர். 14-25

செய்தி சுருக்கங்கள் 4-5

விக்ரம் பத்ரா: கார்கில் சிங்கம் 6

அரசியலமைப்பு சட்டம் மற்றும் பண்பாட்டின் சந்திப்பு
குடியரசு தலைவர் தனது சொந்த கிராமத்தில் பிரதமர் மோடிக்கு வாழ்த்து 7-9

புதிய தீர்மானங்கள், புதிய அபிலாஷைகள்
உ.பி. முதலீட்டாளர் மாநாடு 3.0 10

விண்வெளித்துறையில் தனியார் துறை வெற்றியாளராக பங்காற்றும்
பிரதமர் நரேந்திர மோடியின் குஜராத் பயணம் 11-13

சுற்றுச்சூழல் பாதுகாப்பு: இந்தியாவின் முன்னுதாரணம் 26-27

கடன் பெறுவதற்கான ஒற்றை சாளரம்-
ஜன் சமர்த் போர்டல் 28

உலகின் பயோடெக் மையமாக மாறுவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது
பயோடெக் ஸ்டார்ட்அப் எக்ஸ்போ-2022-ல் பிரதமர் ஆற்றிய உரை 29

வளர்ச்சியும் மரபும் கைகோர்த்துச் செல்கின்றன
ஸ்ரீசாந்த் துக்காராம் மகாராஜின் பாறைக் கோயிலின் திறப்பு விழா 30–31

'அக்னிபத்' பாதுகாப்புத் துறையில் புதிய பணிச்சூழல் வாய்ப்பை
திறக்கிறது அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் 32-33

ஒரே நாடு, ஒரே வரி
சரக்கு மற்றும் சேவை வரி.. 5 ஆண்டு நிறைவு 37-38

மனிதகுலத்தின் தேவதை
மருத்துவர் தினத்தில் உயிர்காப்போருக்கு மரியாதை 39-40

'என் அன்னையின் வாழ்க்கையை காணும் போது அவரது தவ வாழ்க்கை, தியாகங்கள் மற்றும் இந்தியாவின் தாய்மை குணம் ஆகியவை குறித்து நான் உரைக்க இருக்கிறேன்' 45-56

[illegible]ற்ஏமையில் [illegible]ற்ஏமை [illegible]ன்னு[illegible]ந்தி[illegible]த்துடன் இந்தி[illegible] சுதந்தி[illegible]ம் அடைந்தது

சுதந்திரத்தின் அமிர்த பெருவிழா தொடரில், இந்த முறை சுமந்த் மேத்தா, சுஷிலா செயின் ட்ரேஹான், அமரேந்திர நாத் சாட்டர்ஜி மற்றும் அலெக் பத்ரா ஆகியோரின் கதைகளைப் படிக்கலாம் 41-44

டிஜிட்டல் இந்தியா
சுயசார்பை நோக்கிய இந்தியாவின் உறுதிப்பாட்டின் சின்னம்

டிஜிட்டல் இந்தியா கடந்த 7 ஆண்டுகளில் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கிறது 34-36

Published & Printed by Satyendra Prakash, Principal Director General, on behalf of Central Bureau of Communication **Printed at** Infinity Advertising Services Pvt. Ltd., FBD-One Corporate Park, 10th Floor, New Delhi- Faridabad border, NH-1, Faridabad-121003. **Communication Address :** Room No–278, Central Bureau and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003. **e-Mail:** response-nis@pib.gov.in, **RNI No. :** DELTAM/2020/78809

ஆசிரியர் மேசையிலிருந்து...

வாழ்த்துக்கள்

மகாபாரதத்தில் உள்ள சுலோகங்களில் ஒன்று பின்வருமாறு கூறுகிறது

विश्वकर्मा नमस्तेस्तु, विश्वात्मा विश्व संभवः॥

இதன் பொருள் விஸ்வகர்மாவுக்கு வணக்கம், அவரால்தான் உலகில் எல்லாம் சாத்தியமாகிறது. அவர் விஸ்வகர்மா என்று அழைக்கப்படுகிறார், ஏனெனில் அவரது திறமைகள் இல்லாமல் சமூகத்தின் இருப்பு சாத்தியமற்றது. துரதிருஷ்டவசமாக, நமது சமூகக் கல்வி முறையில் திறன் மேம்பாட்டு முறை படிப்படியாக பலவீனமடைந்தது. அதன் சாராம்சத்தை புரிந்து கொண்ட பிரதமர், 2014 ஆம் ஆண்டு முதல் இந்தியாவை தற்சார்பு நாடாக மாற்றும் கனவைப் பேணி வருகிறார், இது இன்று ஒவ்வொரு இந்தியரின் தீர்மானமாகவும் மாறியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு தலைமையின் கீழ் தொடங்கப்பட்ட கௌஷல் பாரத் மிஷன், நாட்டின் இளைஞர்களை திறமையானவர்களாகவும், அதிகாரமிக்கவர்களாகவும் மாற்றியது. இந்த பணி வேலை தேடுபவர்கள் முதலாளிகளாக ஆவதற்கு ஊக்குவித்தது.

இதன் விளைவாக, கோவிட் போன்ற பேரழிவுகரமான தொற்றுநோயை உலகின் வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவால் சமாளிக்க முடிந்தது. தொழில்நுட்பம் என்பது மத்திய அரசு தனது நல்லாட்சிக்கான தொலைநோக்கு பார்வையை ஸ்தாபிக்க முற்படும் பீடமாகும். திறன், மறுதிறன் மற்றும் திறன் மேம்பாடு என்ற மந்திரம் தொழில்நுட்ப யுகத்தில் ஒரு முன்நிபந்தனையாக மாறியுள்ளது, மேலும் கடந்த ஏழு ஆண்டுகளாக பாபாசாகேப் அம்பேத்கரின் கனவை நிறைவேற்றும் கோடி கணக்கான இளைஞர்களுக்கு கௌஷல் பாரத் மிஷன் புதிய வேலை வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

இந்தியா மாறி வருகிறது, இந்தியாவின் அந்தஸ்தும் உலகளவில் அதிகரித்து வருகிறது, இதன் மையத்தில் நாட்டின் மகத்தான மனிதவளம் உள்ளது, இது துன்பங்களை ஒரு வாய்ப்பாக மாற்றுவதில் நிபுணத்துவம் வாய்ந்தது. இதன் விளைவாக, இந்தியா இப்போது உலகில் திறன் மேம்பாட்டிற்கான மையமாக வளர்ந்து வருகிறது. கௌஷல் பாரத் மிஷன் எனும் திறன் மேம்பாட்டு முனைப்பு இயக்கம் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்யும் தருணத்தில், அதன் முழுமையான பயணம் இந்த பதிப்பின் கவர் ஸ்டோரியாக உள்ளது.

இதேபோல், கடந்த 5 ஆண்டுகளில் சரக்கு மற்றும் சேவை வரியின் முன்னேற்றம், டிஜிட்டல் இந்தியாவின் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்தல் மற்றும் குடியரசு தலைவரின் பூர்வீக கிராமமான பாரவுன்க்கிற்கு பிரதமர் மோடியின் விஜயம் ஆகியவை இந்த பதிப்பின் ஒரு பகுதியாகும். ஆளுமைப் பிரிவில் விக்ரம் பத்ராவின் எழுச்சியூட்டும் கதை, பாதுகாப்புத் துறையில் ஆட்சேர்ப்புக்கான வாயிலை திறக்க அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புதிய அமைப்பு, சுதந்திரத்தின் அமிர்த பெருவிழா, கொரோனாவுக்கு எதிரான போராட்டம், பிரதமரின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் பரிசு ஆகியவை இந்த பதிப்பின் பிற சிறப்பம்சங்களாகும்.

உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு அனுப்புங்கள்

இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 பிற மொழிகளில் கிடைக்கும்
இதழைப் படிக்கவும் / பதிவிறக்கவும்
https://newindiasamachar.pib.gov.in/

(ஜெய்தீப் பட்நகர்)



மின்னஞ்சல் பெட்டி

ஜூன் மாதத்தில் வெளியான புதிய வெளியீட்டின் (1-15) அட்டைப்படக் கதை, தேர்ந்தெடுக்கப்பட்ட 14 துறைகளில் பல்வேறு திட்டங்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு உத்வேகம் அளித்துள்ளன என்பதை நிரூபிக்கிறது. சுவாமிநாராயண் பிரிவை நிறுவிய சகஜானந்த் சுவாமியின் கதை ஒரு சிறப்பு ஈர்ப்பாகும்.

சந்திர காந்தா பிரதான்
chandrakantapradhan2014@gmail.com

கடந்த 8 ஆண்டுகளில், மோடிஜி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் நலனுக்காக பல வரலாற்று முடிவுகளை எடுத்துள்ளது, இதன் காரணமாக இந்தியா இப்போது வளர்ச்சியின் புதிய உயரங்களைத் தொட்டு, நாட்டின் வறுமையை சாதனை வேகத்தில் ஒழித்து வருகிறது. இது "புதிய இந்தியா சமாச்சார்" ஆசிரியர் குழுவால் ஒரு அட்டைப்படக் கதையாகவும், ஜூன் 1-15 இதழில் உள்ள பிற கட்டுரைகள் மூலமாகவும் அவர்களின் அயராத முயற்சிகளுடன் மிக அழகாக வெளியிடப்பட்டுள்ளது, இதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

சி.எச். சக்தி சிங் வழக்கறிஞர், கர்னால்.
shaktisinghadv@gmail.com

சமீபத்தில் நான் உங்கள் பத்திரிகையைப் பார்த்தேன். இது உண்மையில் ஒரு நல்ல பத்திரிகை. அத்தகைய ஒரு நல்ல பத்திரிகையை வெளியிட்டதற்காக நான் உங்களைப் பாராட்ட விரும்புகிறேன். உங்கள் பத்திரிகை தகவல்கள் மிகுந்ததாகவும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றதாகவும் உள்ளதாக நான் கண்டுகொண்டேன்.

ஜஸ்வந்த் எஸ். பிரசாத்
jaswantshepherdprasad@ gmail.com

புதிய இந்தியா சமாச்சார் உண்மையான இதழியலின் அடித்தளமாகும். இது நமது அரசாங்கத்தின் சிறந்த பணிகளைப் பற்றி நிறைய பேசுகிறது. கடந்த சில ஆண்டுகள் இந்தியாவுக்கு மிகவும் அசாதாரணமானது என்பது உண்மைதான்.

விக்ரம் அரோரா
theonlyvikramarora@gmail.com

நான் (ஜூன் 1-15)பதினைந்து நாட்களுக்கு உங்கள் என்ஐஎஸ் இதழைப் படித்தேன். பிரதமர் மோடி நாட்டிற்கு அற்புதமான முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளார் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் அவர் தனிப்பட்ட முறையில் கண்காணித்து வருகிறார்.

எம்.பி. சந்திரசேகர்
chandrasekar@mookambikainfo.com

FOLLOW US @NISPIBIndia

தொடர்பு முகவரி : அறை எண்-278, மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு அலுவலகம், 2வது தளம், சூச்னா பவன், புது தில்லி -110003
e-Mail: response-nis@pib.gov.in

கின்னஸ் உலக சாதனை: 105 மணிநேரத்தில் 75 கி.மீ நெடுஞ்சாலையை அமைத்தது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

“சாலைகள் மற்றும் பாலங்களைக் கட்டும் போது நாங்கள் நகரங்களையும் கிராமங்களையும் மட்டும் இணைப்பதில்லை. நாங்கள் வெற்றியை அபிலாஷைகளுடனும், வாய்ப்பை விசுவாசத்துடனும், மகிழ்ச்சியை நம்பிக்கையுடனும் தொடர்பு படுத்துகிறோம். பிரதமர் நரேந்திர மோடியின் இந்த நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில், இந்திய தேசிய நெடுஞ் சாலை ஆணையம் (என்.எச்.ஏ.ஐ) உலகிலேயே முதல் முறையாக இத்தகைய பணிகளை முடித்து, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. அமராவதிக்கும் அகோலாவுக்கும் இடையே 75 கி.மீ., தூரத்திற்கு கான்கிரீட் சாலை, 105 மணி நேரம், 33 நிமிடங்களில் கட்டப்பட்டது. அமராவதிக்கும் அகோலாவுக்கும் இடையிலான பாதை தேசிய நெடுஞ்சாலை -53 இன் ஒரு பகுதியாகும். இது கொல்கத்தா, ராய்ப்பூர், நாக்பூர் மற்றும் சூரத் போன்ற முக்கிய நகரங்களை இணைக்கும் ஒரு முக்கியமான கிழக்கு-மேற்கு வழித்தடமாகும். இந்த 75 கி.மீ சாலை ஒரு ஆலோசனைக் குழு உட்பட 720 தொழிலாளர்களால் கட்டப்பட்டது. 75 கி.மீ., தூரமுள்ள தார்ச்சாலை, 37.5 கி.மீ., தூரத்திற்கு இருவழிப்பாதையை அமைப்பதற்கு இணையானதாகும். ஜூன் 3 ஆம் தேதி காலை 7 மணியளவில் தொடங்கிய இந்த சாலையின் கட்டுமானப் பணிகள் ஜூன் 7 ஆம் தேதி மாலை 5 மணிக்கு முடிக்கப்பட்டன. முன்னதாக, பிப்ரவரி 2019 இல் கத்தாரின் தோஹாவில் தார் சாலை கட்டுமானத்திற்கான கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டது. இங்கு 25.275 கி.மீ., தூரத்திற்கு சாலை அமைக்கப்பட்டது. இதை அமைத்து முடிக்க பத்து நாட்கள் ஆனது.

விவசாயிகளுக்கு பரிசு

/ 2 ரவீப் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை ஆர்வு

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் முன்னேறிச் செல்லும் அரசாங்கம் அவர்களுக்கு மற்றொரு பரிசை வழங்கியுள்ளது. ஜூன் 8 ஆம் தேதி நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் கூட்டத்தில், 2022-23 ஆம் ஆண்டிற்கான பல்வேறு காரீப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (எம்.எஸ்.பி) உயர்த்த ஒப்புதல் அளித்தது. 14 காரீப் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை 4 சதவீதத்தில் இருந்து 9 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பயிர்	எம்.எஸ்.பி (விதைவிண்டால்) 0. 00-03	ஆர்த்தப்பட்ட எம். எஸ். பி. ரூபாயில்
நெல் (பொது)	2040	100
நெல்(பொது ஏ-வகை)	2060	100
சோளம் (கலப்பினம்))	2970	23
சோளம்(மல்தாந்தி)	2990	232
தினை	2350	100
கேழ்வரகு	3578	201
மெக்கா	1962	92
துவரம்	6600	300
மக்	7755	480
உளுந்து	6600	300
வேர்க்கடலை	5850	300
சூரியகாந்தி விதைகள்	6400	385
சோயாபீன்ஸ் (மஞ்சள்)	4300	350
எள்ளுச்செடி	7830	523
ராம்டில்	7287	357
பருத்தி (நடுத்தரம்)	6080	354
பருத்தி (நீளம்)	6380	355

இந்தியா-வங்கதேசம் இடையே மூன்றாவது ரயில் சேவை தொடக்கம்

1971 ஆண்டு முதல், இந்தியா பங்களாதேஷுடனான உறவுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது, மேலும் இந்த உறவுகள் சமீபத்தில் விரிவடைந்துள்ளன. மிதாலி எக்ஸ்பிரஸ் இப்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உணர்ச்சி ரீதியான உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியின் பங்களாதேஷ் பயணத்தின் போது இது அறிவிக்கப்பட்டது. நியூ ஜல்பாய்குரி மற்றும் டாக்கா இடையே இயக்கப்படும் இந்த ரயிலை ஜூன் 1 ஆம் தேதி இந்தியாவின் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் பங்களாதேஷ் ரயில்வே அமைச்சர் முகமது நூருல் இஸ்லாம் சுஜன் ஆகியோர் கூட்டாக தொடங்கி வைத்தனர். கொல்கத்தா-டாக்கா மைத்ரீ எக்ஸ்பிரஸ் மற்றும் கொல்கத்தா-குல்னா பந்தன் எக்ஸ்பிரஸ் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரு நாடுகளையும் இணைக்கும் மூன்றாவது ரயில் இதுவாகும். இந்த ரயில் வாரத்திற்கு இரண்டு முறை இயக்கப்படும். இது பங்களாதேஷை வடக்கு வங்காளம் மற்றும் இந்தியாவின் வடகிழக்குடன் இணைக்கிறது. இந்த ரயில் இந்தியா வழியாக நேபாளத்திற்கு பங்களாதேஷ் பயணத்தை எளிதாக்கும்.

தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது

இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக செழிப்பிலிருந்து பயனடைவதை உறுதி செய்வது முக்கியம். இருந்தபோதிலும், இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 9% மற்றும் அதன் மொத்த நிலப்பரப்பில் 15% உள்ள பழங்குடி சமூகங்கள் கடந்த ஆறு தசாப்தங்களில் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் முழு நன்மைகளையும் பெறவில்லை. முதல் தடவையாக, இந்த வர்க்கத்தின் நிலைமையை மேம்படுத்த அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பழங்குடியினர் பெருமை தினம் முதல் ஏகலவ்யா பள்ளி வரை கலை மற்றும் திறன் பயிற்சித் துறையில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஜூன் 7 ஆம் தேதி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை தொடங்கி வைத்தார். இந்த தேசிய அளவிலான நிறுவனம், கல்வி, நிர்வாக மற்றும் சட்டமன்ற துறைகளில் பழங்குடி பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களுக்கான முதன்மை மைய புள்ளியாக உருவெடுத்துள்ளது. இது புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வள மையங்களுடன் ஒத்துழைத்து ஒருங்கிணைப்பு செய்யும். பழங்குடியின ஆராய்ச்சி நிலையங்கள், சிறப்பு மையங்கள் மற்றும் ஆராய்ச்சி திட்ட கண்காணிப்பு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கான அளவுகோல்களை இது உருவாக்கும்.

சூரத் விமான நிலையத்திற்கு ரூ.353 கோடியில் தரம் உயர்வு கிடைக்கும்



இந்தியாவின் வைரம் மற்றும் ஜவுளி மையமான சூரத், விமானப் பயணிகளுக்கு ஒரு பிரபலமான இடமாகும். பயணிகள் போக்குவரத்தின் அதிகரிப்பு காரணமாக, நாடு முழுவதும் 16 நகரங்களை இணைக்கும் சூரத் விமான நிலையத்தில் 353 கோடி ரூபாய் செலவில் இந்திய விமான நிலைய ஆணையம் வசதிகளை விரிவுபடுத்தி வருகிறது. முனையக் கட்டடத்தை விரிவுபடுத்துதல், ஐந்து முதல் 18 விமானநிறுத்துமிடங்கள் மற்றும் விமான நிறுத்துமிட இடத்தை விரிவுபடுத்துதல் மற்றும் இணை நிறுத்துமிட தடங்களை நிர்மாணித்தல் ஆகியவை அபிவிருத்தித் திட்டத்தில் அடங்கும். இந்த புதிய அதிநவீன விரிவாக்கப்பட்ட முனையக் கட்டிடம் 1,200 உள்நாட்டு மற்றும் 600 சர்வதேச பயணிகளுக்கு உச்சக்கட்ட நேரங்களில் இடமளிக்கும், இது முனையத்தின் வருடாந்திர பயணிகள் திறனை 2.6 மில்லியனாக ஆக்கும். முனைய கட்டிடத்தில் அனைத்து நவீன பயணிகள் வசதிகளும் வழங்கப்படும். இது 20 செக்-இன்(பயணிகள் தரவு) மேசைகள், ஐந்து விமான இணைப்பு வழிகள், உள் பயணிகளுக்கான சரக்குகள் கையாளுதல் அமைப்பு மற்றும் பிற வசதிகளைக் கொண்டிருக்கும். புதிய முனைய கட்டிடத்தில் 475 கார்கள் நிறுத்தும் திறன் கொண்ட வாகன நிறுத்துமிடம் அடங்கும். விமான நிலையத்தின் புதிய உலகத்தரம் வாய்ந்த முனையக் கட்டிடம் இந்த தொழில்துறை நகரத்துடனான இணைப்பை மேம்படுத்தும், இது பிராந்தியத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை விரைவுபடுத்தும்.

இப்போது ஐ.நா.வின் தகவல்களும் இந்தியில் வெளியிடப்படும்

1977 ஆம் ஆண்டில், அடல் பிஹாரி வாஜ்பாய் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் முதன்முறையாக இந்தியில் உரையாற்றினார். இந்த பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லும் பிரதமர் நரேந்திர மோடியும் ஐ.நா.வில் இந்தியில் பல முறை உரையாற்றினார். இப்போது, இந்தியில் தகவல்களைப் பரப்புவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, அது தொடர்பான இந்தியாவின் முன்மொழிவுக்கு முதல் முறையாக ஒப்புதல் அளித்துள்ளது. ஐ.நா.வின் அனைத்துத் தகவல்களும் இந்தி போன்ற அதன் அலுவல் மொழிகளைத் தவிர மற்ற மொழிகளில் வெளியிடப்பட வேண்டும் என்று தீர்மானம் கூறுகிறது. அதே நேரத்தில், ஐ.நா.வின் தேவையான அனைத்து செய்திகளும் இப்போது இந்தியிலும் அனுப்பப்படும். ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பாங்களா மற்றும் உருது மொழிகளும் அடங்கும். ■

விக்ரம் பத்ரா: 'கார்கில் சிங்கம்'

பிறப்பு: 9 செப்டம்பர், 1974, இறப்பு: 7 ஜூலை, 1999

ஜூன் 1, 1999 அன்று, விக்ரம் பத்ரா தனது பட்டாலியனுடன் கார்கில் போருக்கு அனுப்பப்பட்டார். இந்தப் போரில், விக்ரம் பத்ராவுக்கு தனது அசைக்க முடியாத தைரியத்தையும் வீரத்தையும் காட்டியது மட்டுமல்லாமல், 1999-ம் ஆண்டு ஜூன் 20 அன்று அதிகாலை 3:30 மணிக்கு தனது தோழர்களுடன் அணுக முடியாத பகுதியில் இருந்த போதிலும், பாகிஸ்தானியர்களிடமிருந்து குறியீடு 5410 சிகரத்தை விடுவித்தார். விக்ரம் பத்ரா தனது வெற்றி முழக்கமான 'யே தில் மாங்கே மோர்' என்று ரேடியோவில் இந்த சிகரத்தில் இருந்து சொன்னபோது, அவரது புகழ் இராணுவத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பரவியது. கார்கிலின் ஐந்து மிக முக்கியமான சிகரங்களை வென்றதில் முக்கிய பங்கு வகித்த விக்ரம் பத்ரா, ஜூலை 7 அன்று வீர மரணம் அடைந்தார்.

பாகிஸ்தான் ராணுவத்திடம் இருந்து 5,140 சிகரத்தை கைப்பற்றிய பின்னர், விக்ரம் பத்ரா ஜூலை 7, 1999 அன்று பாயின்ட் 4,875 ஐ வெல்ல அடுத்த இலக்கு வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் அவருக்கு உடல்நிலை சரியில்லை. அவருக்கு நெஞ்சு வலி இருந்தது, கண்கள் சிவந்திருந்தன. அவரது அதிகாரிகள் அவரை பணிக்கு அனுப்ப தயக்கம் காட்டினர், ஆனால் பத்ராவே அந்தப் பணியை முடிப்பதாக வலியுறுத்தினார். இந்த சிகரத்தை விடுவிக்கும் போது அவர் தனது இறுதி மூச்சு வரை போராடி உயிர்த்தியாகத்தை செய்தார். சில நாட்களுக்கு முன்பு, ஜூன் 16 அன்று, கேப்டன் பத்ரா டிராஸ் செக்டாரில் இருந்து தனது இரட்டை சகோதரர் விஷாலுக்கு எழுதிய கடிதத்தில், 'அன்புள்ள குஷ், தாயையும் தந்தையையும் கவனித்துக் கொள்ளுங்கள். இங்கு எதுவும் நடக்கலாம்.“ என்று உருக்கமாக குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில், 1999 ஆம் ஆண்டில் கார்கிலின் பல சிகரங்களை பாகிஸ்தான் மோசடியாக கைப்பற்றியபோது, அந்த சிகரங்களை விடுவிக்க இந்திய இராணுவம் ஆபரேஷன் விஜய் என்ற ராணுவ நடவடிக்கையை தொடங்கியது. இந்தப் போரில் மிக முக்கியமான பங்கை கேப்டன் விக்ரம் பத்ரா என்ற 24 வயது இளைஞனே வகித்தார். கார்கில் போரின்போது வீரமரணம் அடைவதற்கு முன்பு, விக்ரம் பத்ரா பல பாகிஸ்தான் வீரர்களைக் கொன்று தனது தோழர்கள் பலரைக் காப்பாற்றினார். அவரது துணிச்சலுக்காக, இந்திய அரசு அவருக்கு மரணத்திற்குப் பிறகு மிக உயர்ந்த மற்றும் மதிப்புமிக்க விருதான பரம் வீர் சக்ரா விருதை வழங்கியது.

இமாச்சலப் பிரதேசத்தின் பாலம்பூரில் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி பிறந்த விக்ரம் பத்ரா, தனது குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு ராணுவ வீரராக வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருந்தார். 1985 ஆம் ஆண்டில் தூர்தர்ஷனில் ஒளிபரப்பான 'பரம்வீர் சக்ரா' சீரியலைப் பார்த்த பிறகு அவர் இராணுவத்தில் சேர விரும்பினார். அதனால்தான் ஹாங்காங் கப்பல் நிறுவனத்தில் வணிகக் கப்பல் சிப்பந்தி வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் விக்ரம் ஒரு இராணுவ வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தார். விக்ரம் ராணுவத்தில் சேர்க்கப்பட்டபோது, ஒரு நண்பர் அவரிடம், “இப்போது நீங்கள் ராணுவத்தில் இருக்கிறீர்கள். ஜாக்கிரதையா இருங்க...” அதற்கு அவர், “கவலைப்படாதே. ஒன்று வெற்றிக்குப் பிறகு நான் மூவர்ணக் கொடியை அசைத்து வருவேன் அல்லது அதே மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்டு வருவேன். ஆனால் நான் கண்டிப்பாக வருவேன்.” என்றார்.

> **விக்ரம் பத்ராவுக்கு சிறுவயது முதலே ராணுவ வீரராக வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. 1985 ஆம் ஆண்டில் தூர்தர்ஷனில் ஒளிபரப்பான 'பரம்வீர் சக்ரா' சீரியலைப் பார்த்த பிறகு அவர் இராணுவத்தில் சேர விரும்பினார்.**

“விக்ரம் பத்ராவின் துணிச்சலின் தாக்கம், அப்போதைய இந்திய இராணுவத் தளபதியே அவரைப் பற்றி ஒரு முறை 'அவர் உயிரோடு வந்திருந்தால், அவர் இந்திய இராணுவத் தளபதியாக ஆகியிருப்பார்' என்று கூறினார்.

“விக்ரம் பத்ராவின் தைரியம் மற்றும் குணாதிசயங்களை கருத்தில் கொண்டு, கார்கில் போரின் போது அவருக்கு ஷெர்ஷா என்ற குறியீட்டுப் பெயர் அதாவது சிறப்பு பட்டப்பெயர் வழங்கப்பட்டது, மேலும் பாகிஸ்தானில் உள்ள மக்கள் இன்னும் இந்த பெயரைக் கொண்டு அவரை அறிவார்கள். 'கார்கில் சிங்கம்' என்றும் அழைக்கப்படும் விக்ரம் பத்ராவின் தியாகத்திற்குப் பிறகு, பாயிண்ட் 4875 சிகரம் பத்ரா டாப் என்று பெயரிடப்பட்டுள்ளது.

சங்கமித்த அரசியல் அமைப்புச் சட்டமும் பண்பாடும்

அரசியல் அமைப்புச்சட்ட ரீதியாக நாட்டின் மிக உயர்ந்த பதவியான குடியரசுத் தலைவரின் பதவிக்கான தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டு விட்டது. குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் வழக்கமான தேர்தல் நடைமுறை குறித்த அறிவிப்பு வெளியாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக உத்திரப் பிரதேச மாநிலத்தின் பரவங்க் கிராமத்தில் அனைவரின் கவனத்தையும் கவர்ந்த மிக வசீகரமான ஒரு காட்சியை நாடு கண்டது. தற்போது குடியரசுத் தலைவராக உள்ள ராம்நாத் கோவிந்த் மரபுமுறைகளை எல்லாம் மீறி பிரதமர் நரேந்திர மோடியை பரவங்க் கிராமத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே தன் பூர்வீக கிராமத்திற்கு வருகை தந்த பிரதமரை குடியரசுத் தலைவர் வரவேற்றார். அத்தருணத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கண்ணியம், மிக அரிதாகவே கிடைக்கும் இந்திய பழக்கவழக்கங்களின் தனிச்சிறப்புகள் குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோரின் உரைகளில் மிகச் சிறந்த முன்னுதாரணமாகச் சுட்டிக் காட்டப்பட்டன.

இத்தகையதொரு கிராமத்திற்கு தேசியத்தலைவர் ஒருவர் வருகை தந்தது சுமார் 50-55 ஆண்டுகளுக்கு முன்பே ஆகும். அந்த கிராமத்து மக்களில் பலரும் ஒரு ஜீப்-ஐ தங்கள் வாழ்க்கையில் முதன்முதலாகப் பார்த்ததும் அப்போதுதான். கான்பூர் அருகில் உள்ள பரவங்க் கிராமத்தில்தான் அது நடந்தது. டாக்டர் ராம் மனோகர் லோஹியாதான் அந்தத் தலைவர். மிகச் சாதாரண பின்னணியைக் கொண்டவரும் இந்த மண்ணின் மைந்தருமான ஒருவர் அரசியல் அமைப்புச் சட்ட ரீதியாக நாட்டின் மிக உயர்ந்த பதவியில் சென்று அமர்ந்ததும், அவரது வேண்டுகோளின்பேரில் அதே கிராமத்திற்கு நாட்டின் பிரதமர் வருகை புரிந்ததும் அந்த கிராமத்திற்கு மட்டுமின்றி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தருணம் ஆகும். இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவில் இத்தகைய நல்லியல்பு மிகவும் வித்தியாசமான இந்தக் காட்சியில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதைப் பார்க்கலாம்.

“உத்திரப் பிரதேசம் இந்த நாட்டிற்கு ஒன்பது பிரதமர்களை வழங்கியுள்ளது; ஆனால் இப்போதுதான் இந்தப் பகுதியிலிருந்து ஒருவர் குடியரசுத் தலைவராக ஆகியிருக்கிறார். இதற்கான பெருமை பிரதமரையே சேரும்.”

- எனது வேண்டுகோளை ஏற்று எனது மூதாதையரின் இந்த மிகச்சிறிய கிராமத்திற்கு வருகை தந்துள்ளீர்கள். இது உங்கள் கருணையையும் பெருந்தன்மையையுமே காட்டுகிறது.
- இந்த மாநிலத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னைப் போன்ற ஒருவருக்கு குடியரசுத் தலைவர் பொறுப்பை வழங்க நீங்கள் முன்முயற்சி எடுத்தபோது உத்திரப்பிரதேசம் அன்றே உங்களுக்கு விசுவாசமாக இருந்தது.
- இந்த மாநிலம் நாட்டிற்கு ஒன்பது பிரதமர்களை வழங்கியுள்ளது; எனினும் ஒரு ஜனாதிபதியை கூட வழங்கவில்லை. உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கு நாட்டின் மிக உயர்ந்த அரசியலமைப்பு ரீதியான பதவி முதன்முறையாக வழங்கப்பட்டுள்ளது என்று உத்தரபிரதேச மக்கள் பெருமை கொள்கின்றனர். இதற்கான பெருமை பிரதமரையே சாரும்.
- நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையையும் எளிதாக்கவும் மகிழ்ச்சியானதாக்கவும் பிரதமர் தொடர்ந்து முயற்சி செய்து வருவது நாட்டிற்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்றே நான் கருதுகிறேன். பாரதமாதாவிற்கு சேவை செய்வது என்ற பொருளுக்குப் புதிய பரிமாணங்களை அவர் வழங்கியுள்ளார்; நாட்டுக்கான சேவை- பொதுநலம் என்ற கருத்தாக்கத்திற்கும் புதியதொரு பொருளை அவர் வழங்கியுள்ளார்.
- இந்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் அமைந்த அனைவரையும் உள்ளடக்கிய, இணக்கமானதொரு சமூகத்தை உருவாக்கவும் ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர், புறக்கணிக்கப்பட்ட பிரிவினர் ஆகியோரின் மேம்பாட்டிற்காகவும் பாபாசாஹேப் அம்பேத்கர் தன் வாழ்நாள் முழுவதும் போராடினார். அவரது லட்சியங்களை பிரதமர் செயல்படுத்திய விதம் நம் அனைவருக்குமான முன் உதாரணம் ஆகும்.
- எனது கிராமத்திற்கு வரும்போதெல்லாம், உடனே இந்த மண்ணை எடுத்து என் நெற்றியில் இட்டுக் கொள்வேன். பிரதமரின் வாழ்க்கையிலும் இத்தகைய தாயின் வலிமையின் மீது சிறப்பான அன்பும் மரியாதையும் நிலவி வருவதையும் நான் பார்த்திருக்கிறேன்.
- பிரதமரின் வலுவான மன உறுதியையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் ஜப்பானுக்கு சென்றிருந்தபோது, அங்கு வசித்து வரும் இந்திய மக்களிடையே அவர் உரையாற்றிய நேரத்தில் தான் கல்லின் மீது செதுக்கிய அடையாளத்தை விட்டு செல்லவே விரும்புவதாகவும் வெண்ணை மீது வரைந்த அடையாளத்தை அல்ல என்று கூறினார்.
- பிரதமரின் இந்த நீடித்த உறுதிதான் இன்று உலக அரங்கில் இந்தியாவின் வலிமையை மீண்டும் நிலைநாட்டி வருகிறது.
- அவரது தனிச்சிறப்புமிக்க ஆளுமை மற்றும் கவனம் ஆகியவற்றின் மூலம் நாட்டின் அடையாளம் மற்றும் பெருமை ஆகியவற்றிற்குப் பெருமை தேடித் தந்துள்ளார். பாரதமாதாவின் இத்தகையதொரு புதல்வர் குறித்து நம் நாட்டு மக்கள் அனைவருமே பெருமை கொள்ள வேண்டும்.

“இந்திய கிராமத்தில் பிறந்த மிக ஏழ்மையானவரும் கூட குடியரசுத் தலைவராக, பிரதமராக, ஆளுநராக, முதல்வராக வரமுடியும்”

- குடியரசுத் தலைவரின் குழந்தைப் பருவத்தையும் அவர் வளர்ந்ததையும் இந்தக் கிராமம் பார்த்திருக்கிறது. ஒவ்வொரு இந்தியனின் பெருமைக்குரியவராகவும் அவர் மாறியிருக்கிறார். 5ஆம் வகுப்பிற்குப் பிறகு 5-6 மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ள பள்ளியில் அவர் சேர்ந்திருக்கிறார். வெறும் காலோடு அவர் பள்ளிக்கு ஓடுவது வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் இந்த ஓட்டம் அவரது உடல்நலம் கருதி அல்ல; பாதை காலுக்கு எரிச்சலூட்டுவது தெரியாமல் இருக்கவே இந்த ஓட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இந்த பரவங்க் கிராமத்தில் இந்திய கிராமங்களின் மிகச் சிறந்த பல தோற்றங்களையும் நான் பார்த்தேன். முதலில் பதாரி மாதாவின் ஆசிகளை பெறுவதற்கான வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இந்த கிராமத்தின் அடையாளமாக, இந்தப் பகுதியின், மகத்தான இந்தியாவின் ஆன்மீக ஒளியாக இந்தக் கோயில் விளங்குகிறது. எங்கே பக்தி இருக்கிறதோ, எங்கே நாட்டுப் பற்று இருக்கிறதோ அங்கே ஒரு கோயில் இருக்கிறது என்று கூட நான் சொல்வேன்.

- மாண்புமிகு குடியரசுத் தலைவரின் தந்தையின் நினைவிற்கு, அவரது கனவுகளுக்கு நான் தலை வணங்குகிறேன். அவர் பல்வேறு புனித யாத்திரைகளை மேற்கொண்டார். சில சமயம் பத்ரிநாத், சில சமயம் கேதார்நாத், சில சமயம் அயோத்தியா, சில சமயம் காசி, சில சமயம் மதுரா என பல்வேறு புனிதத் தலங்களுக்கும் அவர் யாத்திரை சென்றார்.

- இந்தப் புனிதத் தலங்களில் இருந்து ஊர் மக்கள் எல்லோருக்கும் பிரசாதம் கொண்டுவரும் அளவிற்கு அவரது பொருளாதார நிலை அப்போது வலுவாக இல்லை. என்றாலும் புனிதத் தலங்களில் இருந்து ஒரு சில கற்களை அவர் எடுத்து வருவது வழக்கம். அந்தக் கற்கள் எல்லாம் ஒரு மரத்தின் கீழே வைக்கப்படுவது வழக்கம். இங்கே சேர்ந்துள்ள கற்கள் எல்லாமே இந்தியாவின் ஒவ்வொரு மூலையில் இருந்தும் வந்தவை தான். அவற்றையே இந்த கிராமத்து மக்கள் ஒரு கோயிலாக வழிபடுகின்றனர்.

- இந்த கிராமத்து மண்ணில் இருந்து குடியரசுத் தலைவர் பெற்ற பண்பாட்டையே இன்று உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒரு கையில் அரசியல் அமைப்புச் சட்டம், மற்றொரு கையில் பண்பாடு என, அந்தப் பதவி உருவாக்கியிருந்த மரபுகள் அனைத்தையும் குடியரசுத் தலைவர் இன்று உடைத்தெறிந்ததைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன்.

- ஹெலிகாப்டர் இறங்கு தளத்திற்கு வந்து அவர் என்னை வரவேற்றார். எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. அவரது வழிகாட்டுதலின் கீழ்தான் நாங்கள் வேலை செய்கிறோம். அவரது பதவி பெருமை மிக்கது; முன்னுரிமை மிக்கது. அப்போது நான் குடியரசுத் தலைவரிடம் இன்று நீங்கள் எனக்கு அநியாயம் செய்து விட்டீர்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் உடனடியாகச் சொன்னார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளை நான் பின்பற்றுகிறேன். இருந்தாலும் சில நேரங்களில் நமது பண்பாட்டிற்கும் அதற்கே உரிய வலிமை உள்ளது. ■

புதிய உறுதிப்பாடுகளும் புதிய தீர்மானமும்

கொரோனா பெருந்தொற்றுக் காலகட்டத்தில் உலகம் செயலற்று நின்றிருந்தபோது இந்தியா அவ்வாறில்லை. முன்னேறிச் செல்லவும், சுயச்சார்பினை அடையவும் இந்தியா உறுதி பூண்டது. இந்தத் துணிவு தான் இதுவரை கண்டிராத அளவிற்கு வெற்றியை தேடித் தந்தது. இந்தக் கால கட்டத்தில் இந்தியா பல மேல் நிலைகளை எட்டியது: முதல்முறையாக இந்தியாவின் ஏற்றுமதி ரூ. 30 லட்சம் கோடி என்ற அளவை எட்டியது; முதல்முறையாக நேரடி அந்நிய முதலீட்டின் அளவு 84 லட்சம் டாலராக உயர்ந்தது. பதிவு செய்யப்பட்ட 70 ஆயிரம் புதிய தொழில்முனைவுகள், அதிக முதலீடு கொண்ட யூனிகார்ன் அந்தஸ்தைப் பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட தொழில்முனைவுகள் ஆகியவை உலகத்திலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக, உலகத்திலேயே மின்சார நுகர்வில் மூன்றாவது பெரிய நாடாக இந்தியாவை மாற்றியுள்ளன. ஆனால் நின்று யோசிப்பதற்கான நேரம் இதுவல்ல. விரைவாகச் செயல்பட வேண்டிய நேரம் இது. லக்னோவில் நடைபெற்ற உத்திரப் பிரதேச மாநில முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டின் முதல் கட்டத்தில் ஜூன் 3ஆம் தேதியன்று ரூ. 80,000 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய 1406 புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டியதன் மூலம் புதிய இந்தியாவின் உறுதிப்பாட்டினை பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

நாட்டிலேயே அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட உத்திரப் பிரதேசம் அதற்கேயுரிய மிக நீண்ட, பெருமை மிக்க கலாச்சார வரலாற்றைக் கொண்டதாகும். ஏற்கனவே இந்த மாநிலத்தில் யமுனா அதிவேக நெடுஞ் சாலை, பூர்வாஞ்சல் அதிவேக நெடுஞ்சாலை, லக்னோ-ஆக்ரா அதிவேக நெடுஞ்சாலை ஆகியவை உள்ளன. புந்தேல்கண்ட் அதிவேக நெடுஞ்சாலை நிறைவடையும் தருவாயில் உள்ளது. கங்கா அதிவேக நெடுஞ்சாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்தருணத்தில் ஒன்பது விமான நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன; மேலும் ஐந்து விமான நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதுபோக, மேலும் ஏழு கூடுதல் விமான நிலையங்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் இரண்டு பாதுகாப்பு தளவாடப் பாதைகளில் ஒன்று உத்திரப்பிரதேசத்தில் உள்ளது. இந்த மாநிலம் மிக நீண்ட நாட்களாகவே முயற்சித்து வரும் வளர்ச்சிக்கான புதிய அளவீடுகளாக இவை அமைகின்றன. ஜூன் 3ஆம் தேதியன்று ரூ.80,000 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய 1406 புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டிய போது பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்: "இந்திய மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் உத்திரப் பிரதேசத்தில் உள்ளனர்."அதாவது உத்திரப் பிரதேசத்தில் ஒருவர் முன்னேறும்போது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ஆறாவது மனிதரும் பயனடைவார். 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வளர்ச்சியை உத்திரப் பிரதேசம் மேலும் தீவிரப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

பிரதமர் மோடியின் உரையிலிருந்து பத்து முக்கிய அம்சங்கள்:

- நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு கூட்டாளி என்ற உலக நாடுகளின் எதிர்பார்ப்பை இன்று நிறைவேற்றும் திறன் நமது ஜனநாயக இந்தியாவிற்கு மட்டுமே உள்ளது. உலகின் பிற நாடுகள் இன்று இந்தியாவின் திறனை அங்கீகரிக்கின்றன.
- இந்தியா ஒரு வலுவான உற்பத்தி சூழலை உருவாக்கவும், வலுவான, மாறுபட்ட மதிப்பு மற்றும் விநியோகச் சங்கிலியை உருவாக்கவும் அனைவரின் பங்களிப்பும் தேவைப்படுகிறது. அரசு தனது பங்கிற்கு புதிய கொள்கைகளை அமல்படுத்தி, பழைய கொள்கைகளை மேம்படுத்தி வருகிறது.
- நிலையான கொள்கை, ஒருங்கிணைப்பு மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்குவதை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். கடந்த காலங்களில் நடைபெற்ற ஆயிரக்கணக்கான விதிமீறல்கள் மற்றும் காலாவதியான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் அனைத்தும் எங்களின் குறிப்பிட்ட, நன்கு வரையறுக்கப்பட்ட கொள்கைகளின் விளைவே ஆகும். ஒரு தேசம்-ஒரே வரி எனும் சரக்கு மற்றும் சேவை வரி, ஒரு நாடு-ஒரே மின்பகிர்வு, ஒரு நாடு-ஒரே இயங்குநிலை அட்டை மற்றும் ஒரு நாடு-ஒரே ரேஷன் அட்டை ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.
- 2014 இல் நமது நாட்டில் 6 கோடி அகன்ற அலைக்கற்றை நுகர்வோர் மட்டுமே இருந்தனர். இப்போது அந்த எண்ணிக்கை 78 கோடியை கடந்துள்ளது. 2014 இல் ஒரு ஜிபி தரவுக்கான விலை சுமார் 200 ரூபாயாக ஆக இருந்தது. இப்போது அது 11-12 ரூபாயாக ஆக குறைந்துள்ளது.
- உலகில் தரவுகளுக்கான விலை மிகக் குறைவாக உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. 2014இல் நாட்டில் 11 லட்சம் கிலோமீட்டர் நீளத்திற்கு ஒளியிழை வசதி இருந்தது. இப்போது நாட்டில் பதிக்கப்பட்டுள்ள ஒளியிழையின் மொத்த நீளம் 28 லட்சம் கிலோமீட்டரையும் கடந்துள்ளது. ■

விண்வெளித் துறையில் தனியார் துறையின் பெரும் வெற்றிகளை எதிர்பார்க்கிறீர்களா?

விண்வெளி மற்றும் ராக்கெட் ஆகியவை மனிதகுலத்தின் எதிர்காலம் மற்றும் நிலைப்பெறுவதற்கு முன்னோக்கிய பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இரண்டு துறைகளாகும். இந்த கவர்ச்சிகரமான வாய்ப்புகளை இந்தியாவின் நலனில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப விண்வெளித் துறை தனியார் மயமாக்கலுக்குத் திறக்கப்படுகிறது. ஜூன் 10 அன்று அகமதாபாத் நகரின் போபாலில் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்த இன்-स्पेस் அமைப்பின் தலைமையகம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் வசதிகளையும் தொழில்நுட்பங்களையும் தனியார் துறை அணுகுவதற்கான வாய்ப்பை வழங்கும். தனது குஜராத் பயணத்தின் போது நவ்சாரியில் உள்ள ஏம்நாயக் ஆராய்ச்சி நிலையத்தை வளாகம், மிராழிபஞ்சக மருத்துவமனை ஆகியவை உள்ளிட்ட ரூ. 3050 கோடி மதிப்பிலான பல வளர்ச்சி திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் எல்லையற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும் இந்த எல்லையற்ற சாத்தியக்கூறுகளை வரையறுக்கப்பட்ட முயற்சிகளால் ஒருபோதும் அடைய முடியாது. 21 ஆம் நூற்றாண்டின் வளர்ச்சிப் புரட்சியின் மிகப்பெரிய தூணாக இருக்கும் விண்வெளித் துறைக்கும் இது பொருந்தும். இந்தியாவின் விண்வெளித் துறையில் இருக்கும் இந்த வரம்பற்ற சாத்தியக்கூறுகளைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு புதிய துவக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகமதாபாத்தில் உள்ள போபாலில் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகாரம் (H M-SP@B d) தொடங்கப்பட்டது இந்த திசையில் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். ஜூன் 10 அன்று இதனைத் தொடக்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, “21ஆம் நூற்றாண்டில் நவீன இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு அற்புதமான அத்தியாயம் இன்று இணைக்கப்பட்டுள்ளது. விண்வெளித் துறையில் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கான மேம்பாட்டுக் கொள்கையை விரைவில் வெளியிட உள்ளோம்.”

இந்தத் திட்டம் ஜூன் 2020 இல் மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இது இந்திய அரசாங்கத்தின் விண்வெளித் துறையின் ஒரு சுயாதீன முன்னோடி முகமையாகும். போபாலில் இதன் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, “மிக நீண்ட காலமாகவே விண்வெளித் துறையில் தனியார் துறையானது ஒரு விற்பனையாளராக மட்டுமே பார்க்கப்படுகிறது. ஆனால் இப்போது தனியார் துறை வெறும் விற்பனையாளராக மட்டும் இல்லாமல், விண்வெளித் துறையில் ஒரு பெரிய பங்கை வகிப்பதாகவும் இருக்கும்.

பொது விண்வெளி நிறுவனங்களின் பலமும், இந்திய தனியார் துறையின் ஆர்வமும் இணையும் போது, அதன் எல்லையற்ற

இந்திய விண்வெளித்துறையில் அதிகரித்து வரும் செயல்திறன்கள்

□□□□ாதனை□

ஒரே பயணத்தில் 104 விண்கலங்களை ஏவி சாதனை படைக்கப்பட்டுள்ளது. ஒரே பயணத்தில் பூமியை சுற்றிவரும் 3 செயற்கைக் கோள்கள் ஏவப்பட்டுள்ளன.

செ□□ற்கைக்□ோள்□ள்

அதிவேக தகவல் தொடர்பை அதிகரிக்க இந்தியாவின் மிகவும் முன்னேறிய செயற்கைக் கோள்களான ஜிசாட் 11 மற்றும் ஜிசாட் 29 ஆகியவை விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

கடந்த எட்டு ஆண்டுகளில் சாதனை மிக்க விண்வெளி முயற்சிகள். 2014க்கு முன்பு சராசரியாக ஆண்டுக்கு 1.7 விண்வெளி முயற்சிகள் நடைபெற்றனயெனில், 2014லிருந்து ஆண்டுக்கு 5.4 விண்வெளி முயற்சிகளாக இது அதிகரித்துள்ளது.

ஐஆர்□ன்□ஸ்□ஸ் -/ஜி

செயற்கைக் கோள்களை கட்டுப்படுத்தும் அமைப்பினை தனக்கென உருவாக்கிக் கொள்ளும் திறமையையும் இந்தியா பெறுவதற்கு ஐஆர்என்எஸ்எஸ் - 1ஜி உதவியுள்ளது.

அதைப் போன்றே 2014க்கு முன்பு விண்கலத்தை அனுப்பி வைக்கும் முயற்சிகளை எடுத்துக் கொண்டால் அது ஆண்டுக்கு 2.15 என்பதாக இருந்தது; 2014லில் இருந்து அது ஆண்டுக்கு 5.9 ஆக உயர்ந்துள்ளது.

2014க்கு முன்பு 35 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டது எனில், 2014க்குப் பின்பு அது 307ஆக உயர்ந்துள்ளது.

இஸ்பா

இந்திய விண்வெளிக் கழகத்தைத் தொடங்கியதென்பது வணிகரீதியான விண்வெளி பயணத்தில் இந்தியாவை ஓர் உலகத் தலைவராக மாற்றுவதற்கான ஒரு முன்முயற்சி ஆகும்.

முற்போக்கான விண்வெளி சீர்திருத்தங்கள், திட்டங்கள், இயக்கங்கள் ஆகியவற்றின் மூலம் முக்கியமானதொரு பெரும் சக்தியாக இந்தியா உருவாகி வருகிறது.

மங்கள்யான் இயக்கத்தின் மூலம் தனது முதல் முயற்சியிலேயே இந்தியா செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையை அடைந்துள்ளது.

இதுவரையில் 34 பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட

342

செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

இந்தி□விண்□ெளிக் □ழ□ம் □ழங்கும் □□தி□ள்

கைபிடித்து அழைத்துச் செல்ல வேண்டிய தேவை நமது தொழில் துறைக்கு உள்ளது. இந்திய விண்வெளிக்கழகம் அதைத்தான் செய்கிறது. முன்முயற்சி எடுப்பவராகவும், வசதிகளை செய்து தருபவராகவும், அங்கீகாரம் அளிப்பவராகவும், மேற்பார்வையாளராகவும் அது செயல்படும். செயற்கைக்கோள்களின் வடிவமைப்பு, உருவாக்கம், அவற்றை இணைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் சோதனை செய்வதற்கான உபகரணங்கள் ஆகியவை இந்திய நிறுவனங்களுக்கு H M-SP@B d தொழில்நுட்ப ஆய்வகத்திலும் சுத்தமான அறையிலும் கிடைக்கும். விண்வெளித் துறையின் திறனை அதிகரிக்க உதவும் மேலும் பல நவீன வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளும் இங்கு உருவாக்கப்படும்.

> விண்வெளித் துறையில் சீர்திருத்தங்கள் தடையின்றி தொடரும் என்று தனியார் துறைக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். பெரிய யோசனைகள் மட்டுமே பெரிய வெற்றியாளர்களை உருவாக்க முடியும். 'இன்-ஸ்பேஸ்' விண்வெளித் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் ஆற்றலை கொண்டுள்ளது. ஒரு வகையில் இந்தியாவின் விண்வெளித் திட்டம் 'சுயச்சார்புமிக்க இந்தியா' என்பதன் மிகப்பெரிய அடையாளமாகும். இந்தத் திட்டம் இந்திய தனியார் துறையிலிருந்து ஊக்கத்தைப் பெறும்போது, அது எவ்வளவு வலிமையை சேர்க்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்யலாம்.
>
> - நி□ந்தி□மோடி* பி□தர்

வாய்ப்புகள் திறக்கப்படும். இளைஞர்களுக்கான அனைத்து தடைகளையும் அரசு நீக்கி வருகிறது. அரசு பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் தனியார் துறையில் தொழில் தொடங்குவதற்கான அதிகபட்ச வசதியை உருவாக்குவது அரசின் முயற்சியாகும். இதனால் நாட்டின் தனியார் துறையானது நாட்டு மக்களுக்கு வாழ்க்கை வசதியை சமமாக மேம்படுத்த உதவுகிறது.

விண்வெளித் துறையின் திறனை அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவேதான், அது தொழில்நுட்பத்தையும் நிபுணத்துவத்தையும் இப்போது பங்கிட்டுக் கொள்கிறது.”

அகமதாபாத் நகரில் இந்திய விண்வெளிக் கழகத்தின்

ஆ□ோக்? □ந□ன் □ாக்கும் □ளா□ம் மற்ஏம் மருத்து□ை தொடங்□ப்பட்டது

ஆயு| மான் பா□தசு□ாதா□திட்டத்தின் விளை□ா□குஜ□ாத்தில் 5 □ோடி ரூபாய் □ேமிபு

சுகாதார வசதிகளை அணுகுவது மற்றும் நவீன மயமாக்கல் ஆகியவை ஏழைகளுக்கு அதிகாரமளிக்க மிகவும் முக்கியமானவை ஆகும். இதை கருத்தில் கொண்டே, நாட்டின் சுகாதாரத் துறையில் வசதிகளை மேம்படுத்த கடந்த எட்டு ஆண்டுகளாக முழுமையானதொரு அணுகுமுறையில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. நோயிலிருந்தும் உடல்நலக் குறைவிலிருந்தும் ஏழைகளை, நடுத்தர வர்க்கத்தினரை காப்பாற்றுவதே அரசின் நோக்கமாகும். இதற்கான செலவைக் குறைப்பதே நமது இலக்காகும். நவ்சாரியில் ஏ.எம்.நாயக் ஆரோக்கிய நலன் காக்கும்வளாகம் மற்றும் நிராலி பன்முக மருத்துவமனை ஆகியவற்றை தொடங்கி வைக்கும்போது பிரதமர் நரேந்திர மோடி இந்த வார்த்தைகளைத்தான் கூறினார். ஆயுஷ்மான் பாரத் சுகாதார திட்டத்தின்கீழ் குஜராத்தில் 41 லட்சம் நோயாளிகள் இலவச சிகிச்சையை பெற்றுக் கொண்டனர். இது நோயாளிகளுக்கு 7 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தை மிச்சப்படுத்தியது. பிரதமர் குறிப்பிட்டார்: "உடல்நலமும் சேவையுமே குஜராத் மக்களின் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். சேவையே நாட்டின் வலிமை என்பதாக மாற்றிய மகத்தான மனிதரான காந்திஜியிடமிருந்தே நாங்கள் உத்வேகம் பெறுகிறோம். குஜராத்தின் இந்த உற்சாகம் இப்போதும் முழுமையாக நீடிக்கிறது.

இருபதாண்டு□ளில் ம□த்தா□□ளர்ச்சிப் பா□ம்பரி□ம்

33 திட்டங்□ஓக்கு தொடக்□விழா* அடிக்□ல் நாட்டுவிழா மற்ஏம் பூமிபூஜை

குஜராத் மாநிலம், நவ்சாரியில் உள்ள பழங்குடியினர் பகுதியான குத்வேலில் ஜூன் 10 அன்று நடைபெற்ற 'குஜராத் கவுரவ் அபியான்' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இதில் 3050 கோடி ரூபாய் மதிப்பிலான 7 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன; 12 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது; மேலும் 14 திட்டங்களுக்கு பூமி பூஜை போடப்பட்டது. இந்தத் திட்டங்கள் அப்பகுதியில் நீர் விநியோகத்தை மேம்படுத்துவதோடு, இணைப்பை மேம்படுத்தவும், வாழ்க்கை வசதியை மேம்படுத்தவும் உதவும். இத்தருணத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி "கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்டுள்ள அனைவரையும் உள்ளடக்கிய துரிதமான வளர்ச்சியும், இந்த வளர்ச்சியின் மூலமாக ஏற்பட்டுள்ள புதிய ஆர்வமும், குஜராத் மாநிலத்தின் பெருமிதமாகும். இன்று தொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் தெற்கு குஜராத்தின் சூரத், நவ்சாரி, வல்சாத், டாபி ஆகிய மாவட்டங்களில் வாழ்க்கையை மேலும் எளிதாக்கும்" என்று குறிப்பிட்டார்.

தொடக்கத்தோடு கூடவே, அதன் தொடக்க நிகழ்வின் போதே தனியார் துறை மற்றும் பல்வேறு இதர முகமைகளுடன் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் 10 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. உலகளாவிய விண்வெளி தொழிலின் மதிப்பீடு என்பது 400 பில்லியன் ஆகும் எனவும், 2040க்குள் இது ஒரு ட்ரில்லியன் டாலராக உயரும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உலகளாவிய கூட்டணிக்கு தனது பங்கை அதிகரிக்க இந்தியா விரும்புகிறது. இந்திய விண்வெளிக் கழகம் இந்த திசைவழியிலான ஓர் நடவடிக்கையாகும் ஆகும்.

2021 அக்டோபரில் இந்திய விண்வெளிக் கழகத்தின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மோடி குறிப்பிட்டார்: விண்வெளித் துறையிலும் விண்வெளி தொடர்பான திட்டங்கள் அனைத்திலும் தனியார் துறையினை வளர்த்தெடுப்பதற்கான ஒற்றைச் சாளரமாக இந்திய விண்வெளிக் கழகம் செயல்படும். இந்தியாவின் விண்வெளி உள்கட்டமைப்பினை பயன்படுத்திக் கொள்ள தனியார் நிறுவனங்களுக்கு சமமான வாய்ப்பினை அது வழங்கும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பினை தனியார் துறை இப்போது பயன்படுத்திக் கொள்ள முடியும். ■

புதிய இந்தியா: தொழில்திறன் பெற்ற மேம்பாட்டு மையமாக உருவாகி வருகிறது

தேசம் மற்றும் சமூகத்தைப் பொறுத்தவரையில் அனைத்து துறைகளிலும் புதிய திறன்களுக்கான தொழில்நுட்பமும் மேம்பாடும் தேவைப்படுவது என்பது இன்றியமையாததாக உள்ளது. கல்வி அல்லது சுகாதாரம், தொழிலாளர் அல்லது தொழிற்சாலை, கிராமம் அல்லது நகரம், அரசுத்துறை அல்லது பெருநிறுவனம் என எதுவாக இருந்தாலும், கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகான உலகில் இத்தகைய அம்சங்களின் முக்கியத்துவத்துவமானது அதிகமாகவே உள்ளது. இதன் விளைவாக, தொழில்திறன் மேம்பாட்டுக்கு இந்தியா புதிய திசையைக் காட்டி உள்ளது. அதாவது தேசத்தின் இளைஞர்கள் மேம்பாட்டுக்கான வாயிற்கதவுகளைத் திறந்து தொழில் திறன்களுடன் தங்களது வாழ்க்கையை வளப்படுத்தும் வளர்ச்சியை தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்கின்றனர். மேலும் தொழில்திறன் பெறுதல், மீள்தொழில்திறன் பயிற்சி பெறுதல் மற்றும் கூடுதல்திறன் பெறுவதற்கான பயிற்சி பெறுதல் ஆகியன வேலை மற்றும் லட்சக்கணக்கான இளைஞர்கள் மற்றும் சேவை குறைவாகப் பெறும் குழுவினர் ஆகியோருக்கு தாரக மந்திரமாக உள்ளன. "திறன் இந்தியா இயக்கம்" நமது இளைஞர்களை ஆகச்சிறந்த மனித வளத் தொகுப்பாக உருமாற்றம் செய்கிறது. ஒரு புதிய அடையாளத்துக்கான தொழில்திறன்களைத் தருகிறது. இது சுய-சார்பு இந்தியா என்ற தேசத்தின் லட்சியத்தை நிறைவேற்றவும் உதவுகிறது. இதற்கான அஸ்திவாரம் நீண்டகாலச் சிந்தனையின் அடிப்படையில் 7 ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்டது.

எனது தந்தை எதிர்பாராமல் இறந்து விட்ட பிறகு எனது குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் மிகவும் மோசமாகி விட்டது. வீட்டில் காது கேட்காத, பேச முடியாத இரண்டு சகோதரிகள் இருக்கின்றனர். நாங்கள் மிகவும் துயரத்தில் ஆழ்ந்தோம். பிறகுதான் எனக்கு மாவட்ட அளவில் தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குகின்ற "ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான்" (Jan Shikshan Sansthan) பற்றித் தெரிய வந்தது. அங்கு நான் ஆடை வடிவமைப்பு குறித்து படித்தேன். தற்சமயம் அதே திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தில் காது கேளாதோர் மற்றும் பேச முடியாதவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு நல்ல சம்பளம் கிடைப்பதாலும், மக்களுக்கு பயிற்சி அளிக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு இருப்பதாலும் நானும் எனது குடும்பத்தாரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கின்றோம்.

ஜம்மு மற்றும் காஷ்மீரின் குப்வாராவைச் சேர்ந்த இளம் பெண் நிலோபரின் அமைதியான மற்றும் நம்பிக்கையான வார்த்தைகளாக இவை இருக்கின்றன. தொழில் திறன் மேம்பாட்டு இயக்கத்தினால் இவரின் குடும்பமானது இப்பொழுது புதிய திசையில் பயணிக்கிறது.

இதேபோன்று, ஹரியானாவின் பூஜாராணி மருத்துவமனைகளில் நோயாளிகளைப் பராமரிக்கும் பயிற்சி பெற்று அதன் மூலம் தன் வாழ்க்கையை நடத்தி வருகிறார். 12ஆம் வகுப்பு படித்தப் பிறகு தனது எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று நிச்சயமாகத் தெரியாத நிலையில் இம்ரான் பிரதமரின் தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வாழ்க்கையில் ஏதோ ஒன்றைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்.

ராஜஸ்தானின் ஸ்ரீகங்கா நகரைச் சேர்ந்த ரவீந்திர ஷர்மா "தொழிற்பயிற்சி மையத்திற்கு வருவதற்கு முன்பு நான்

தொழில்திறன், மீள்தொழில்திறன் மற்றும் கூடுதல் தொழில்திறன் என்ற "மோடி மந்திரத்தை" இந்த வழிமுறையில் புரிந்து கொள்ள வேண்டும்

இன்றைய இளைஞர்கள் அதாவது 21ஆம் நூற்றாண்டில் பிறந்தவர்கள் இந்தியாவின் 100ஆவது சுதந்திர தினம் வரை இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை முன்னெடுத்துச் செல்வார்கள். எனவே இந்த புதிய இளம் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழில்திறன் மேம்பாடு அளிப்பது என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இதுவே சுயசார்பு இந்தியாவின் முக்கியமான மைல்கல்லாகும்.

- நரேந்திர மோடி* பிரதமர்

இன்றைய நாட்களில் வர்த்தகமும் சந்தைகளும் மிக விரைவாக மாறி வருகின்றன. அவற்றுக்குப் பொருத்தமாக தொடர்ந்து நடைமுறையில் இருப்பது என்பது கடினமான ஒரு செயலாக மாறி வருகிறது. கோவிட் பெருந்தொற்றில் இருந்து இதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. பிரதமர் மோடியின் வார்த்தைகளில், "பொருத்தமானதாக தொடர்ந்து இருப்பதற்கான மந்திரம்" என்பது தொழில்திறன், மீள்தொழில்திறன் மற்றும் கூடுதல் தொழில்திறன்" என்று கூறலாம். தொழில்திறன் என்பது ஒரு புதிய தொழில்திறனை கற்றுக் கொள்வதாகும். அதாவது ஒரு மரத்துண்டில் இருந்து நீங்கள் ஒரு நாற்காலியைச் செய்யக் கற்றுக் கொண்டால் அதுவே உங்களின் தொழில்திறன் ஆகும். இதன் மூலம் அந்த மரத்தின் விலையை நீங்கள் அதிகரிக்கவும் செய்து விடுகிறீர்கள். அதேசமயம் இந்த விலை தொடர்ந்து நிலைத்திருக்கவும் அதே போன்று இந்த புதிய வடிவமைப்பும் புதிய தோற்ற வடிவும் நிலைத்திருக்கவும் ஒவ்வொரு நாளும் புதியதாக ஏதாவது ஒன்று சேர்க்கப்பட்டாக வேண்டும். நீங்கள் புதிய விஷயங்களை தொடர்ச்சியாக கற்றுக் கொண்டாக வேண்டும். புதியதாக கற்றுக் கொள்வதை தொடர்வதற்கு மீள்தொழில்திறன் தேவைப்படுகிறது. சிறிய அளவில் மரச்சாமான்கள் தயாரிக்கும் போதும் ஒட்டுமொத்த அலுவலகத்தை வடிவமைக்கும் போதும் புதிய விஷயங்களை நீங்கள் தொடர்ந்து கற்றுக் கொள்ளும் போதும் கூடுதல் திறன்கள் தேவைப்படுகின்றன. அறிந்து கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல் மற்றும் தொழில்திறன், மீள்தொழில்திறன் மற்றும் கூடுதல் தொழில்திறன்கள் என்ற மந்திரத்தை கடைபிடித்தல் ஆகியன நம் அனைவரின் வாழ்விலும் முக்கியமானதாக இருக்கின்றன.

கம்ப்யூட்டரைப் பயன்படுத்தியதே இல்லை மற்றும் என்னுடைய திறன்கள் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாமல் இருந்தது. இப்பொழுது எனது திறமைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. கோவிட் தொற்று காலகட்டத்திலும் கூட தொழில்திறன் பயிற்சி அளிக்கும் வேகம் குறையவே இல்லை. கோவிட் தொற்று காலத்தில் எதுவுமே செயல்படாமல் இருந்த நிலையில் தொழிற்பயிற்சி மேம்பாட்டு மையங்களில் பயிற்சி வழங்குவது என்பது மிகப் பெரிய சவாலாக இருந்தது, ஆனால் அரசின் ஆன்லைன் பயிற்சி முறை எங்களின் வாழ்க்கையை எளிதாக்கியது" எனக் கூறுகிறார்.

நொய்டாவில் உள்ள ஐடிஐ மாணவியான கிருத்திகா ஷர்மா தனது பயிற்சி சிரமமில்லாமல் தொடர்ந்து நடைபெற்றதிலும் ஒவ்வொரு சவாலையும் எதிர்கொண்டு தான் சமாளித்ததையும் நினைத்து மகிழ்ச்சியுடன் இருக்கிறார். கோவிட் தொற்று காலத்தில் பயிற்சிக்கான தலைமை இயக்குனகரத்தின் அறிவுறுத்தலின்படி ஆன்லைன் பயிற்சி பாடத்திட்டம் கொண்டு வரப்பட்டதினால் இது சாத்தியமாகி சுமார் 17-18 லட்சம் ஐடிஐ மாணவர்களுக்கு பலன் அளிப்பதாக இருந்தது.

தொழிற்பயிற்சிப் பெற்று வேலைவாய்ப்பைத் தேடுகின்ற சுய-வேலைவாய்ப்பில் ஈடுபடுகின்ற லட்சக்கணக்கான இளைஞர்களின் முகத்தில் இதே விதமான சுயநம்பிக்கை மற்றும் சுயசார்பு வெளிப்பாடுகளை இப்பொழுது காண முடியும். இதற்கு காரணம் இந்தியாவின் தொழிற்சாலை அபிவிருத்தியும் தொடர்ந்து மாறிக் கொண்டு இருக்கும் சூழலும் பல்வேறு துறைகளில் தொழில்திறன் மேம்பாட்டின் வேகத்தையும் தரத்தையும் அதிகரித்து உள்ளன. 7 ஆண்டுகளுக்கு முன்பு தொழில்திறனை மூலதனமாகக் கொண்ட நாடாக மாற்றும் குறிக்கோளுடன் சுயசார்பு நாடாக மாற்றுவதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் தொழில்திறனுக்கு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்கும் வகையில் பல பிரத்யேக முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்தியாவை தொழில்திறன் மையமாக மாற்ற வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை அடையும் வகையில் இந்த முயற்சிகள் இருந்தன.

இன்று நாட்டில், சுமார் 2.5 ஆயிரம் தொழில்திறன் இந்தியா மையங்களும் சுமார் 15 ஆயிரம் பயிற்சி மையங்களும் உள்ளன. இவற்றின் மூலம் 37 தொழில் பிரிவுகளில் 300க்கும் மேற்பட்ட பாடத்திட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தொழில்திறன் இந்தியா இயக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் சேர்கின்றனர். இதன்மூலம் அவர்களின் வாழ்க்கைக்கும் தேசத்திற்கும் ஒரு புதிய அடையாளம் கிடைப்பதோடு அவர்கள் இந்த இயக்கத்தின் வெற்றியை நிரூபிப்பவர்களாகவும் இருக்கின்றனர். இந்தியாவில் தொழில்திறன் மேம்பாடு என்பது ஒரு புதிய விஷயம் அல்ல. ஆனால் இப்பொழுது அதன் உள்நோக்கத்தில் வித்தியாசம் இருக்கிறது. இதற்கு முன்பு தொழில்திறன் மேம்பாடு என்பது பல்வேறு துறைகளில் வழங்கப்பட்டு வந்தாலும் தொடர்பு கொள்வதற்கு ஒற்றை முனையம் எதுவும் இல்லை. தொழில்திறன் மேம்பாட்டின் முக்கியத்துவதை உணர்ந்த பிரதமர்

தொழில்திறன் மேம்பாடு இயக்கத்தை தேசிய அளவில் திறம்பட செயல்படுத்த 20 அமைச்சகங்கள் / துறைகளில் 40க்கும் மேற்பட்ட தொழில்திறன் மேம்பாட்டு செயல்திட்டங்கள் / திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.

5.70 கோடி பேர் மார்ச் 2022 வரை இந்த இயக்கத்தின்கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

1.42 கோடிக்கும் அதிகமானோர் தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தில் பதிவு செய்துள்ளனர்

1.35 கோடிக்கும் அதிகமான நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

1.08 கோடிக்கும் அதிகமான நபர்கள் சான்றிதழ் பெற்றுள்ளனர்

37 செக்டார் தொழில்திறன் கவுன்சில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

24 லட்சம் பேர் இதுவரை வேலை பெற்றுள்ளனர்



திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனையோர் அமைச்சகத்தின் கீழ் பயிற்சியின் முன்னேற்றம்

மார்ச் 2022 அன்று உள்ள தரவுகள்

மோடி எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து தனியாக தொழில்திறன் மேம்பாட்டு அமைச்சகம் என்பதை உருவாக்கி உள்ளார். அதாவது தொழில்திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தும் போது நாட்டில் உள்ள இளைஞர்கள் இனி எப்பொழுதும் வேறு எவரையும் சார்ந்து இருக்காத நிலைக்குத் தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதே இதன் பின்னுள்ள சிந்தனை ஆகும்.

இளைஞர்களை வேலை தேடுபவர்களாக இருக்கும் நிலையில் இருந்து மாற்றி அவர்களுக்கு தொழில்திறன்களை அளித்து வேலை அளிப்பவர்களாக மாற்ற வேண்டும் என்பதே இதன் நோக்கம் ஆகும். மிகச் சிறந்த இயற்பியல் அறிஞரான ராபர்ட் நோய்ஸ் "புத்தாக்கமும் கற்பனையுமே வாய்ப்புகளுக்கான திறவுகோல்கள்" என்கிறார். பிரதமர் மோடியும், "சமுதாயத்தின் வாழ்வு என்பது தொடர்ந்து தன்னை புதுப்பித்துக் கொள்வதன் மூலமே முன்னேற முடியும்" என்று நம்புகிறார். வாழ்க்கை என்பது தொடர்ந்து கற்றுக் கொள்வதில்தான் இருக்கிறது. அப்பொழுதுதான் நாம் வெற்றியாளர்களாக இருக்க முடியும். அதனால்தான் நமது நாட்டின் இளைய சமுதாயத்தினருக்கு தைரியமும் துடிப்பும் தேவைப்படுகிறது. தாங்கள் தோற்று விடுவோம் என்ற பயத்தின் காரணத்தால்தான் பலரும் பீதி அடைகின்றனர் என அவர் நம்புகின்றார். கடற்கரையில் நிற்கும் ஒருவர் நீரில் மூழ்குவது இல்லை, நீரில் குதிக்கின்ற ஒருவர்தான் மூழ்கவும் மூழ்கும் போதே நீச்சலை கற்றுக் கொள்ளவும் முடியும். இளைஞர்களுக்கு தொழில்திறன்களையும் புதிய வாய்ப்புகளையும் வழங்குவதற்காக தொழில் முனைவோர் இந்தியா, எழுந்திரு இந்தியா மற்றும் முத்ரா திட்டங்கள் வாயிலாக அரசு கடன்கள் வழங்கி வருகிறது. இதன் குறிக்கோள் என்பது அறிவையும் திறன்களையும் வித்தியாசமானதாகப் பார்ப்பதும் சுவாமி விவேகானந்தரின் பாதையைப் பின்பற்றுவதும் ஆகும்.

இன்று தொழில்திறன்களின் மதிப்பை வலியுறுத்துவது என்பது முக்கியமான அம்சமாக உள்ளது. எந்தவொரு வேலையும் ஒரே இரவில் முழுமை அடைந்து விடாது. ஒருங்கிணைந்த முயற்சி மட்டுமே வெற்றியைத் தரும். இந்த திசையில் சிறுவர்கள் புத்தாக்கங்களைக் கண்டு பிடிக்கின்றனர். அடல் புத்தாக்க இயக்கத்தின் டிங்கரிங் ஆய்வுக்கூடத்தில் இருந்து புதிய செயலிகளை உருவாக்குகிறார்கள். அடல் புத்தாக்க இயக்கம் என்பது சிறுவர்களை புத்தாக்க முயற்சியில் ஈடுபட ஊக்கப்படுத்தும் ஒரு இயக்கமாக மாறி உள்ளது. இந்தியாவில் தற்போது உள்ள அறிவு - தொழில்திறன் இடைவெளியை கருத்தில் கொண்டு தொழில்திறன் மேம்பாட்டு இயக்கம் ஜூலை 15, 2015ல் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் என்பது இளைஞர்கள் அறிவையும் அதே போன்று தொழில் திறன்களையும் பெற வேண்டும் என்பதே ஆகும். இதற்குரிய பயிற்சி வசதிகளைத் தர வேண்டும் என்பதற்காக நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பிரதமர் தொழில்திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டன. ஐஐடி-க்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இப்பொழுது ஆயிரக்கணக்கான புதிய சேர்க்கை இடங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இதன் விளைவாக சுமார் 6 கோடி மக்கள் தங்களின் தொழில்திறமையை மேம்படுத்தி உள்ளனர்.

பிரதமர் மோடி தனது இளமைப் பருவத்தில் தொழில்திறன் தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்தபோது

20 ஆண்டுக்கால தொழில்திறனின் மதிப்பே ரூ.20!

இளைஞர்களின் கனவுகள் நனவாகி வருவதற்கு 2014ஆம் ஆண்டு தேர்தலில் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இருந்து பிரதமர் மோடி கடைபிடித்து வரும் தொலைநோக்கு சிந்தனைக்குத்தான் நாம் நன்றி கூற வேண்டும். அப்போதுதான் அவர் தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தை ஏற்படுத்தினார். ஒவ்வொருவருக்கும் தொழில்திறன் மேம்பாடு எவ்வளவு முக்கியம் என்பதை பிரதமர் மோடியின் அனுபவத்தில் இருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம். பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா மெய்நிகர் முறையில் நடைபெற்றபோது பிரதமர் தனது அனுபவத்தைக் கூறினார். அவர் சொல்லிய வார்த்தைகள்; "ஒரு தொழில்திறனின் ஆற்றல் என்ன, ஒவ்வொருவரும் தொழில்திறனோடு ஏதோ ஒரு வகையில் அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள். நானும் பழைய சம்பவம் ஒன்றை நினைவு கூறுகிறேன். நான் இளைஞனாக இருந்த போது பழங்குடியினர் மேம்பாட்டுக்கான அமைப்புகள் சிலவற்றில் ஒரு தன்னார்வலராக பணி புரிந்துள்ளேன். ஒரு நிறுவனத்தில் இருந்து சிலருடன் சேர்ந்து ஒரு ஜீப்பில் நாங்கள் பயணம் மேற்கொண்டோம். காலையில் திரும்புவதற்கான பயணத்தை தொடங்க வேண்டிய நேரத்தில் ஜீப் கிளம்பவில்லை. அந்தக் காடுகளில் சுற்றித் திரிந்து கொண்டே ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக காரை சரி செய்வதற்கு முயற்சித்தனர், காரை பின்னிருந்து தள்ளிப் பார்த்தனர். அப்பொழுதும் கார் கிளம்பவில்லை. இரவு 8 அல்லது 9 மணி அளவில் ஒரு மெக்கானிக் வந்து சேர்ந்தார். அங்குமிங்கும் சிற்சில வேலைகளைச் செய்து இரண்டு நிமிடங்களுக்குள் அவர் காரை பழுது பார்த்து விட்டார். பிறகு நான் அவரிடம் எவ்வளவு பணம் தர வேண்டும் என கேட்டேன். அவர் 20 ரூபாய் எனக் கூறினார். அந்தக்காலகட்டத்தில் 20 ரூபாய் என்பது பெரிய தொகை. ஐயா! 2 நிமிட வேலைதான். ஆனால் நீங்கள் 20 ரூபாய் கேட்கிறீர்களே என்று எங்களில் ஒரு நண்பர் கேட்டார். அவருடைய பதில் என்னை சிந்திக்கத் தூண்டியதோடு என் மனதில் ஆழமாக பதிந்தும் விட்டது, "சார், 2 நிமிடங்களுக்காக மட்டுமே நான் 20 ரூபாய் கேட்கவில்லை. 20 ஆண்டுகளாக பணி புரிந்தப் பிறகு எனக்குக் கைவரப்பெற்ற தொழில்திறனுக்காகவும் எனது அனுபவத்திற்காகவும்தான் இந்த 20 ரூபாய் என மெக்கானிக் கூறினார். இதுதான் தொழில்திறனின் ஆற்றல் என அப்பொழுது நான் புரிந்து கொண்டேன். உங்களின் திறமையும் உங்கள் ஆளுமையும் உங்களை ஊக்கப்படுத்துவதோடு உங்களின் பணிக்கு உந்து சக்தியாகவும் இருக்கின்றன.

புதிய பரிசோதனைகளுடன் இந்த இயக்கம் இப்பொழுதும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

தொழில்திறன் மேம்பாடு என்பது நாட்டின் தேவையாக உருவாகி உள்ளது

இந்த சர்வதேச அளவிலான பெருந்தொற்றுப் பரவல் ஏற்படுத்திய சவால்கள் தொழில்திறன்களின் மதிப்பை அதிகரித்து உள்ளன. இப்பொழுது இந்தியா அமிர்த யாத்திரையுடன் தனது சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழாவையும் கொண்டாடிக் கொண்டு இருக்கும் தருணத்தில் நாட்டின் 100ஆவது சுதந்திரத் தினத்தில் தங்கமயமான இந்தியாவை உருவாக்கும் லட்சியத்தை நிர்ணயித்து உள்ளோம். அத்தகையச் சூழலில் அடுத்த இளம் தலைமுறையினரின் தொழில்திறன் மேம்பாடு என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. சுய-சார்பு இந்தியாவிற்கான அடித்தளத்தை இதுவே எழுப்பும். நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில்சார்ந்த புதிய நிறுவனங்களின் பின்னணியில் தொழில்திறன் இந்தியா இயக்கத்தை மீள்புத்தாக்கம் செய்வதில் அரசு உறுதி கொண்டுள்ளது.

இந்தியாவின் மரபில் தொழில்திறனுக்கு முக்கியமான பங்கு இருக்கின்றது. ஏனெனில் சமுதாயமும் தேசமும் தொழில்திறன் மீது மதிப்பு செலுத்தும் பொழுது தேசம் - சமுதாயம் தொழில்திறனில் மேம்பட்டு முன்னேற்றம் அடைகிறது. அதனால்தான் விஜயதசமியின் போது தொழிற்கருவிகளை வழிபடுவது, அட்சயத்திருதையின் போது அறுவடையைக் கொண்டாடுவது, வேளாண் கருவிகளைத் தொழுவது மற்றும் விஷ்வகர்மா எனது இறையை வழிபடுவது ஆகியன மக்களுக்கு ஒவ்வொரு தொழில்திறன் சார்ந்த கைவினையின் முக்கியத் திருவிழாக்களாக உள்ளன. எனினும் நீண்டகாலம் அடிமைத்தனத்தில் இருந்ததால் சமூக மற்றும் கல்வி அமைப்பு படிப்படியாக தொழில்திறன் மேம்பாட்டு முறையை பலவீனப்படுத்தி உள்ளது.

கல்வி - அறிவு இவை இரண்டும் நாம் எதை செய்ய வேண்டும் என்பது குறித்து நமக்கு உறுதியாகத் தெரிவிக்கின்றன. அதேசமயம், தொழில்திறன் நிஜ வாழ்வில் அந்த வேலையை எப்படிச் செய்ய வேண்டும் என்று நமக்கு கற்றுத் தருகிறது. "தொழில்திறன் இந்தியா இயக்கம்" நாட்டின் இந்த உண்மையோடு பொருந்தக் கூடிய படிப்படியான இயக்கம் ஆகும். தற்பொழுது சர்வதேச அளவில் தொழில்திறனுக்கான தேவை எழுந்துள்ளது. இத்தகைய தொழில்திறன்களைப் பெற்றுள்ளவர்கள் முன்னேறுவார்கள். இந்த உண்மை தனி நபர்களுக்கும் நாடுகளுக்கும் சேர்ந்தே பொருந்தும். இந்தியாவின் தொழில்திறன் செயல் உத்திக்கும் இதுவே அஸ்திவாரம் ஆகும். தொழில்திறன் புலத்தில் நாட்டை சர்வதேச தலைமை என்ற இடத்திற்கு கொண்டு வருவதே இதன்

அறிவிற்கும் தொழில்திறனுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளுதல்

தாதா தர்மாதிகாரி ஒரு நூலில் எழுதினார். பரஸ்பர அறிமுகத்தின் வாயிலாக ஒரு இளைஞர் அவரை அணுகி வேலை கேட்டார். தர்மாதிகாரி அவருக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்றும் அப்படிச் செய்தால் தனக்கு வேலை கிடைக்கும் என்றும் நினைத்தார். தாதா தர்மாதிகாரி அவருடைய தகுதிகள் குறித்து விசாரித்தார். தான் ஒரு பட்டதாரி என்று இளைஞர் தெரிவித்தார். "உனக்கு என்ன தெரியும்" என்று அவர் மேலும் ஒரு கேள்வி கேட்டார். "தான் ஒரு பட்டதாரி" என்று அவர் மீண்டும் கூறினார். தாதா தர்மாதிகாரி என்ன கேட்கிறார் என்பது பற்றியே அவருக்குத் தெரியவில்லை. சகோதரரே நான் மீண்டும் உங்களைக் கேட்கிறேன். உனக்கு என்ன தெரியும்? அவர் மீண்டும் தான் ஒரு பட்டதாரி என்கிறார். "உங்களுக்கு தட்டச்சு செய்யத் தெரியுமா" என்று தர்மாதிகாரி கேட்கிறார். உங்களிடம் சமையல் திறமை உள்ளதா? "மரச்சாமான்கள் செய்த அனுபவம் உங்களுக்கு உள்ளதா"? "உங்களுக்கு தேநீர் மற்றும் திண்பண்டங்கள் செய்யத் தெரியுமா"? இந்த அனைத்து கேள்விகளுக்கும் அந்த இளைஞர் "எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறினார். நான் சமீபத்தில்தான் பட்டப்படிப்பை முடித்துள்ளேன். இதுதான், கல்வி பெரும்பாலும் அறிவுச் சுரங்கத்தையே நிரப்புகிறது. ஆனால் நடைமுறை வாழ்க்கைக்கு அது பொருந்தி வருவதில்லை. சுவாமி விவேகானந்தரை மேற்கோள்காட்டி பிரதமர் நரேந்திர மோடி அறிவுக்கும் திறமைக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதை விளக்குகிறார். இந்த வித்தியாசத்தை சுவாமி விவேகானந்தர் அப்பொழுதே புரிந்து கொண்டு இருந்தார். இன்றைய உலகில் எது மிகவும் மதிப்பு மிக்கது என்று அவர்கள் விளக்கமளிக்கின்றனர்: கையில் வைத்துள்ள ஒரு சான்றிதழ் அல்லது தொழில்திறன்? இதே கருத்தாக்கத்தை தொழில்திறன் மேம்பாடு என்ற பெயரில் செயல்படுத்த அரசு முனைந்துள்ளது"

நோக்கம் ஆகும். இதை கவனத்தில் கொண்டு அரசு சர்வதேச தேவையோடு தொழில்திறன் பெற்றவர்களை இணைக்கக் கூடிய ஒரு புதிய முன்னெடுப்பு நடவடிக்கையை தொடங்கி உள்ளது. கோவிட் பெருந்தொற்றை மிகத் திறம்பட எதிர்த்து இந்தியா போராடுவதற்கு நாட்டின் முன்தயாரிப்பும் அண்மை ஆண்டுகளில் தொழில்திறன் பெற்ற பணியாளர்கள் உருவாகி அவர்கள் சேவை கிடைத்ததும் காரணமாக அமைந்தன. 34 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச அறிவு - தொழில்திறன் மையமாக இந்தியாவை உருவாக்குவதை நோக்கிய தீர்மானமான நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது. அதாவது புதிய தேசியக் கல்வி கொள்கையில் அரசானது நடைமுறை சார்ந்த அறிவு - தொழில்திறன்களை முழுமையாக ஒருங்கிணைத்து உள்ளது.

தொழில்திறன் இந்தியா திட்டமானது பெண்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது நிரூபிக்கப்பட்டு உள்ளது. ஏனெனில் மரபான தொழில் சார்ந்த கல்வியானது பெண்களுக்கு கிடைப்பது இல்லை அல்லது பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் பள்ளி அல்லது கல்லூரியில் இருந்து வலுக்கட்டாயமாக நிறுத்தப்படுகிறார்கள். மரபார்ந்த பள்ளிக்கல்வியும் தொழிற்சார் கல்வியும் மறுக்கப்படுகின்ற, பள்ளியில் இருந்து இடையில் நின்றுவிட்ட லட்சக்கணக்கான பெண்களுக்கு தொழில்திறன் இந்தியா இயக்கமானது தொழில்திறன்களைப்

> வருவாய் ஈட்டுவதோடு ஒருவர் தொடர்ந்து கற்றுக் கொள்ளவும் வேண்டும். இன்றைய உலகில் தொழில்திறன் உள்ள நபர்களே முன்னேற முடியும். மக்கள் மற்றும் நாடுகள் என இரண்டிற்கும் இது பொருந்தும். நமது இளைஞர்களுக்கான தொழில்திறன் உத்தியின் வெளிப்பாடாக இது இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் தொழில்திறனையும் தொழில்திறன் பெற்ற தொழிலாளர்களையும் உலகிற்கு இந்தியா வழங்க முடியும். இது தொடர்பான பங்குதாரர்கள் அனைவரும் தொடர்ச்சியாக "தொழில்திறன்", "மீள்தொழில்திறன்" மற்றும் "கூடுதல் தொழில்திறன்" பெற்றாக வேண்டும்.
>
> **நரேந்திர மோடி, பிரதமர்**

எழுபதாண்டுகளோடு ஒப்பிடுகையில் எட்டு ஆண்டுகள்

ஐஐடி-க்கள், ஐஐஎம்-க்கள், மருத்துவக் கல்லூரிகள் எண்ணிக்கையில் அதிவேக வளர்ச்சி

எழுபது ஆண்டுகள் (1947-2014)	8 ஆண்டுகள் (2014ல் இருந்து)	2022ல் மொத்தம்
7 எய்ம்ஸ்	15 எய்ம்ஸ் அனுமதிக்கப்பட்டுள்ளது / செயல்பாட்டில் உள்ளது	22 எய்ம்ஸ்
387 மருத்துவக் கல்லூரிகள்	219 மருத்துவக் கல்லூரிகள்	606 மருத்துவக் கல்லூரிகள்
82,000 மருத்துவப் படிப்பிற்கான இடங்கள்	66,000 மருத்துவப் படிப்பிற்கான இடங்கள்	1.48 லட்சம் மருத்துவப் படிப்பிற்கான இடங்கள்
16 ஐஐடி-க்கள்	7 ஐஐடி-க்கள்	23 ஐஐடி-க்கள்
13 ஐஐஎம்-க்கள்	7 ஐஐஎம்-க்கள்	20 ஐஐஎம்-க்கள்
723 பல்கலைக்கழகங்கள்	320 பல்கலைக்கழகங்கள்	1,043 பல்கலைக்கழகங்கள்

ஐஐடிக்கள் எண்ணிக்கை அதிரிப்பு

கடந்த 8 ஆண்டுகளில் தொழில்திறனுக்கான சூழல்சார் அமைப்பு அதிவேகமாக வளர்ந்துள்ளது.

● கடந்த 8 ஆண்டுகளில் 14,747 ஐடிஐ-க்கள் திறக்கப்பட்டு உள்ளன. ●2014க்குப் பிறகு 4626 கல்வி நிலையங்கள் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ● 2014ல் இருந்து 4 லட்சத்திற்கும் அதிகமான சேர்க்கை இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ● பயிற்சி மற்றும் தொழிற்சாலை தேவைகளுக்காக 3397 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு உள்ளன.

பெறவும் பயிற்சி பெறவும் வாய்ப்பளிக்கிறது. இது அவர்கள் அதிகாரம் பெறுவதற்கும் சுய-சார்பு உள்ளவர்களாக மாறுவதற்கும் உதவுகிறது. இளைஞர்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு தொழில்திறன் மேம்பாடு அளிப்பதற்கு பாபா சாகேப் அம்பேத்கர் அதிக முக்கியத்துவம் அளித்திருந்தார். பாபாசாகேப்பின் தொலைநோக்கு கனவை நனவாக்குவதற்கு தொழில்திறன் இயக்கத்தின் வாயிலாக அனைத்து முயற்சிகளையும் நாடு எடுத்து வருகிறது. பழங்குடியினர் சமுதாயத்திற்காக "தலைவர்களாக ஆன்லைனில் பயணித்தல்"(GOAL) என்ற திட்டத்தை இந்தியா தொடங்கி உள்ளது. பழங்குடியினர் சமுதாயத்தினரின் பாரம்பரிய தொழில்திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு தொழில் முனைவு உதவிகளை இந்தத் திட்டம் செய்கிறது.

தொழில்திறன் மேம்பாட்டு இயக்கம் இப்பொழுது மக்கள் இயக்கமாக மாறி உள்ளது

ஒரு நாட்டின் அளப்பரிய வலிமை என்பது அதன் இளைஞர்களே ஆவர். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த இளம்தலைமுறையினரின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகவே உள்ளது. இந்திய மக்கள் தொகையில் 65 சதவிகிதம் பேர் இளைஞர்களாக இருக்கின்ற காலகட்டத்தில் இந்த இளைஞர்களை முடிந்த அளவிற்கு மிகச் சிறந்த மனிதவள ஆற்றலாக மாற்றுவதற்கான பயிற்சி அளிக்கும் மக்கள் இயக்கம் செயல்பாட்டில் உள்ளது. இந்த திசையில் பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப தொழில்திறன் மேம்பாட்டின் பல்வேறு கூறுகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு உள்ளது. குறுகியகால பயிற்சி திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. இதில் 300 தொழில்பிரிவுகளுக்கு மேல் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தொடங்கப்பட்டதில் இருந்து உலக அளவில் சான்றிதழ் வழங்கும் திட்டங்களுக்கு ஏற்ப 1.25 கோடிக்கும் அதிகமான நபர்களுக்கு சாஃப்ட் ஸ்கில்ஸ் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. நாட்டில் உள்ள ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களை முறைப்படுத்துவதற்காக பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டத்தின் கீழ் ஒரு புதிய முன்னெடுப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படாத தொழில் பிரிவினரை முறைப்படுத்தும் வகையில் அவர்களிடம் உள்ள மரபார்ந்த தொழில்திறன்களின்

பழைய அனுபவம் (தச்சர்கள், பிளம்பர்கள், சிற்பிகள் உள்ளிட்டவர்கள்) அங்கீகரிக்கப்படுகிறது. 50 மில்லினுக்கும் மேலான நபர்களின் முந்தைய கற்றலை அங்கீகரித்து மதிப்பீடு செய்து சான்றிதழ் அளிக்கப்பட்டு உள்ளது. இதனோடு காவல்துறையும்

தொழில்திறன் தொடர்பான நடவடிக்கைகள்...

இயக்கத்தின் முன்னேற்றம்

- தொழிற்சாலை 4.0 என்பதற்கேற்ப சந்தை அடிப்படையிலான எதிர்காலத் தொழில்திறன்களுக்காக இதுவரை 146 எதிர்கால தொழில்திறன் படிப்புத் தகுதிகள் அனுமதிக்கப்பட்டு உள்ளன. பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் எனும் திறன் மேம்பாட்டு திட்டம் 3.0 என்பதன் கீழ் சான்றளிக்கப்பட்டுள்ள அனைத்து நபர்களும் வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக அசீம் (ASEEM) போர்ட்டலில் இணைக்கப்பட்டு உள்ளனர்.
- பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் எனும் திறன் மேம்பாட்டு திட்டம் 3.0 திட்டத்தின் கீழ் கோவிட் போர் வீரர்களுக்கான குறுகியகால பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. சுகாதாரப் பராமரிப்பு பிரிவில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக 1.24 லட்சம் நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.
- பயிற்சி மேம்படுத்தப்பட்டு உள்ளது. இதில் தற்போது தொழில் பழகுனர் பயிற்சியில் உள்ள 22 லட்சம் பேர் இணைக்கப்பட்டு உள்ளனர். டிசம்பர் 2021 அன்றுள்ளபடி சுமார் 4.9 லட்சம் தொழில் பழகுனர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.
- தொழில் முனைதலை மேம்படுத்துவதற்காக 39,251 செயல்திட்டங்கள் மூலமாக 9.93 லட்சம் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. இதில் 145 நாடுகளில் இருந்து 5000க்கும் மேற்பட்ட நபர்களும் உள்ளடங்குவர்.
- பிரதம மந்திரி இளைஞர் திட்டத்தின் மூலம் 991 புதிய தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. ஏற்கனவே உள்ள 1071 தொழில் நிறுவனங்கள் விரிவாக்கப்பட்டு உள்ளன.

சிறைகளும்கூட இந்தத் திட்டத்தினால் பலன் அடைந்துள்ளன. கடந்த ஆண்டு ஜூன் 18ஆம் தேதி கோவிட் வீரர்களுக்கான 6 புதிய குறுகியகால பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன. 1 லட்சம் சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம் ஆகும்.

தொலைதூர ஊரகப் பகுதிகளில் தொழில்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய முன்னெடுப்பாக ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான் (Jan Shikshan Sansthan (JSS) உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் கீழ் 9 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இதற்காக நாடு முழுவதும் 304 ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான்கள் செயல்படுகின்றன. இன்று இந்தியா சர்வதேச பொருளாதார நாடாக வளர்ச்சி பெற்று வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இளைஞர்களுக்கு பணியிடை பயிற்சியும் பணியிடை மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2016ல் தொடங்கப்பட்ட தேசிய தொழில் பழகுனர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக தொழில்பழகுனரில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டன. தொழில் பழகுதலை ஊக்குவிப்பதற்காக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையில் 25% தொகையை பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் திரும்பப் பெறும்

அமிர்த காலத்தின் தொழில்திறன் இந்தியாவிற்கான பார்வை

தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகமானது அங்கீகரிக்கப்பட்டுள்ள நிபுணர்களுடன் இணைந்து இந்தியா @2047க்கான தொலைநோக்கு திட்டம் ஒன்றை நிதி ஆயோக்கிற்காக உருவாக்கி உள்ளது. அமைச்சகமானது தொடர்புடைய பங்குதாரர்களுடன் கீழ்வரும் அம்சங்கள் குறித்தும் கலந்து ஆலோசித்து வருகிறது.

அளப்பரிய எதிர்கால வாய்ப்பு

- தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் நிரந்தர தொழிலாளர்கள் அடிப்படையில் தற்காலிக தொழில்கள் அல்லது அறிவுசார் பொருளாதாரத்திற்கு அளப்பறிய எதிர்கால வாய்ப்பு உள்ளது. செயல்முறைகள், அமைப்புகள் மற்றும் மாதிரிகளில் செயல்திறனிலேயே தொழில்திறன்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
- உலகின் மிகச்சிறந்த பணியை எளிதாக நகலாக்கம் செய்வதற்காக அந்நிய நாட்டு நிறுவனங்களை அமைத்தல் மற்றும் உள்நாட்டின் ஆகச்சிறந்த பணியில் கவனம் செலுத்துதல். 2047க்கான வேலைவாய்ப்பு முன்கணிப்பு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- சுகாதாரப் பராமரிப்பு, சமூகப் பராமரிப்பு, உயர்தொழில்நுட்ப உற்பத்தி, ஐடி-ஐடிஈஎஸ், கட்டுமானம், விருந்தோம்பல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் போன்ற தொழில் பிரிவுகளில் இந்தியா தனித்தன்மையை உருவாக்க முடியும்.
- 2017க்குள் ஒருங்கிணைக்கப்படாத தொழில்பிரிவை ஒருங்கிணைக்கும் தேவைக்கு கூடுதல் கவனம் செலுத்துதல்.
- இந்தியா, கனடா, சிங்கப்பூர், யுனைடெட் கிங்டம், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஜப்பான், வளைகுடா பிராந்தியம், ஸ்கேண்டிநேவியா போன்ற முக்கியமான நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச அங்கீகார வாரியமானது தொழில்திறன் தேவைகள் மற்றும் உயர்நிலை அமைப்புகளில் தலைசிறந்த வாரியமாக இருக்கும்

தொழில்திறன் இயக்கத்திற்கு பட்ஜெட் அதிகரிப்பு

- தொழில்திறன் மேம்பாட்டு வளர்ச்சியை விரைவுபடுத்தும் பாதையில் பட்ஜெட் பற்றாக்குறை தடையாக இல்லாத வகையில் இதனுடைய பட்ஜெட் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2022 - 23ஆம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தொழில்திறன் மேம்பாட்டு திட்டங்கள், தொழிற்சாலைகளை பங்குதாரராக சேர்த்துக் கொண்டு தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- தொழிற்சாலையின் தேவைகளுக்கு இசைந்த வகையில் தேசிய தொழில்திறன் தகுதி வரைவுச் சட்டகம் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக நாட்டில் 750 மெய்நிகர் மற்றும் 75 தொழில்திறன் அடிப்படையிலான இ-ஆய்வுக்கூடங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன. தேஷ் ஸ்டாக் இ-போர்ட்டல் (DESH-Stack e-portal) அமைப்பதன் மூலம் இளைஞர்களை தொழில்திறன் பெற்றவர்களாக ஆன்லைன் பயிற்சியின் வாயிலாக உருவாக்க முடிம். ஏபிஐ அடிப்படையிலான நம்பகத் தன்மையுள்ள தொழில்திறன் சான்றிதழ் வழங்கப்படும்.
- ட்ரோன் பயன்பாட்டை ஒரு சேவையாக முன்வைக்கும் புதிய தொழில் நிறுவனங்கள் மேம்படுத்தப்படும்.
- வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் ட்ரோன்கள் மற்றும் ட்ரோன் பாகங்கள் உற்பத்திக்கு ரூ.120 கோடி மதிப்பிலான பிஎல்ஐ திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. வரும் 3 ஆண்டுகளில் இந்தத் தொழில்பிரிவில் 10,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- நாட்டில் சில நிறுவனங்களோடு இணைந்து தேசிய தொழில்திறன் அபிவிருத்திக் கழகமானது தொழில்திறன் தாக்க பத்திரம் என்ற முறையை தொடங்கி உள்ளது. தொழில்திறன்களைப் பொறுத்து இத்தகைய பத்திர வகைகளில் இதுவே முதன்மையானதாகும். இந்த கூட்டிணைவு 14.4 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை திரட்டவும் வரும் 4 ஆண்டுகளில் 50,000 இளைர்களுக்கு பலன் அளிக்கவும் உதவிகரமாக இருக்கும்.
- இந்த நிதிசார்ந்த திட்டத்தின் முதன்மை கவனம் என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு தொழில்திறன் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி அளிப்பதும் அதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதும் ஆகும்.

வகையில் தொழில் பழகுனர் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

பட்ட வகுப்பு - தொழில் பழகுதல் என்பது இரட்டை தொழிற்கல்வி திட்டத்தில் இதுவரை இல்லாத முதல் முயற்சி ஆகும். இந்தத் திட்டத்தை தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகமானது கல்வி அமைச்சகத்தோடு இணைந்து தொடங்கி உள்ளது. இதில் பணியிடை பயிற்சியும் உள்ளடங்கும். தொழில்திறன் இயக்கமானது உலகமெங்கிலும் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகின்றது. வெளிநாட்டினர் வருகையை அதிகரிக்கும் வகையில் தோராயமாக 20 நாடுகளுடன் இணைந்து பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. யு.ஏ.இ-உடன் தொழில்திறன் கண்டறிதல், பயிற்சி அளித்தல், ஜப்பானுடன் டிஐபிபி (TIPP) ஆகியன உள்ளடங்கும். கடந்த சில ஆண்டுகளில் சர்வதேச தொழில்திறன் தகுதி பட்டியலில் இந்தியா 29ஆம் இடத்தில் இருந்து 13ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளது,இன்றைய மாறி வரும் காலகட்டத்தில் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளுக்கான கதவு திறந்துள்ளது. அவர்களின் கனவுகள் நனவாவதற்கு அவர்களை தொழில்திறன் மற்றும் அறிவு பெற்றவர்களாக மாற்ற வேண்டியது முக்கியமானதாகும். சந்தைக்குத் தேவையான தொழில்திறன், மீள்தொழில்திறன் மற்றும் கூடுதல் தொழில்திறனை மேம்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றில் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளும் தகுதி உடையவர்களாக இந்திய இளைஞர்கள் தயாராகி வருகின்றனர். தொழில்திறன் இந்தியா இயக்கம் என்பதன் அர்த்தம் தற்போது புதிய இந்தியா என மாறி உள்ளது.

தொழில்நுட்பம், மேலாண்மை ஆகியவை தொழில்திறனை வடிவமைக்கின்றன

பிரதமரின் புதிய இந்தியாவிற்கான தொலைநோக்குப் பார்வை என்பது இளைஞர்களின் கனவுகளுக்கு புதிய வாழ்க்கையைத் தருகின்ற கொள்கையின் விளைவாக உருவானதாகும். உலக அளவில் மிகப் பெரும் எண்ணிக்கையில் தொழில்நுட்ப நுகர்வோர்களாக இளைஞர்களை வைத்திருக்கும் முந்தைய பார்வையானது தற்போது மாறி உள்ளது. தொழில்நுட்ப தலைமை இடத்திற்கு வர வேண்டும் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது. பிரதமர் பல்வேறு தருணங்களில் இந்தப் பத்தாண்டை“டெக்கேட்” (TECHADE) எனக் குறிப்பிட்டுள்ளார். புதிய இந்தியாவில் தொழில்நுட்ப கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான தேவை எழுந்துள்ளது. புதிய தொழில்நுட்பத்தை சேர்த்து பார்க்க மக்கள் ஆர்வமுடன் இருப்பதோடு பெருமளவிலான சவால்களை எதிர்கொள்வதில் பயமில்லாமலும் இருக்கின்றனர்.

அதேநேரத்தில், தொழில்நுட்பத்தைப் பின்பற்றி நடப்பவர்களாக இல்லாமல் தலைவராக உருவாக வேண்டும் என்ற ஆசை

புதிய தேசிய கல்விக் கொள்கையில் தொழில்திறன் மேம்பாடு

- தேசிய கல்விக் கொள்கை 2020 பாடத்திட்டத்தின் சுமையைக் குறைத்து மாணவர்கள் எதிர்கால தொழில்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு வழி செய்கிறது. இது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என இரு தரப்பினரின் தொழில்திறன்களையும் வளர்ப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது. 2025க்குள் நாட்டில் உள்ள மாணவர்களில் குறைந்தபட்சம் பாதி அளவு மாணவர்களையாவது பள்ளிக்கூடங்கள் மற்றும் உயர்கல்வி நிலையங்களில் சேர்த்தாக வேண்டும்.
- "முழுமையான கல்வி - பள்ளிப்படிப்பிற்கான ஒருங்கிணைந்த திட்டம்" என்ற பெருந்திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை பள்ளிக்கல்வியை தொழிற்கல்வி சார்ந்ததாக மாற்றுகின்ற ஒரு செயல்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. இதனால் மாணவர்கள் தங்களுடைய மனப்பாங்கு, உள்ளுரை ஆற்றல் மற்றும் லட்சியங்களுக்கு ஏற்ப வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். இந்த செயல்திட்டமானது நாடு முழுவதிலும் 14,435 பள்ளிகளுக்கு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பொதுக்கல்வியில் தொழிற்கல்வியை ஒருங்கிணைத்துக் கொள்ள அனுமதி வழங்கி உள்ளது.
- கல்வி அமைச்சகத்தின் கூட்டிணைவுடன் பிரதமரின் கௌஷல் விகாஸ் திட்டம் 3.0ல் ஸ்கில் ஹப் இனிஷியேட்டிவ் (SHI) என்ற முன்னோடி செயல்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் உள்ளூர் பொருளாதார தேவைகளுக்கு ஒத்திசைந்ததாக தொழிற்கல்வி பயிற்சியை உருவாக்குதல் ஆகியவை இதன் நோக்கம் ஆகும். 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை தொழிற்சாலைகளுக்கு பயணம் மேற்கொண்டு நேரிடையாக வேலைகளை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் புத்தகப் பையை தவிர்க்கின்ற நாட்கள் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்பு தொழில்திறன் மையங்களாக ஸ்கில் ஹப் செயல்படும்.
- 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் நடுநிலைக் கல்வியில் இடைநின்ற மாணவர்கள் ஆகியோருக்கு கல்விக்கடன் மற்றும் வேலைவாய்ப்பு மூலம் தொழில்திறன் மேம்பாட்டுக்கான மற்றும் தொழிற்கல்வி பயிற்சிக்கான வாய்ப்புகள் வழங்கப்படும். இதற்கான செலவு ரூ.700 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ் 9.3 லட்சம் மாணவர்கள் பலன் பெறுவார்கள். மார்ச் 2022 வரை 1.56 லட்சம் மாணவர்கள் பதிவு செய்து உள்ளனர்.

மக்களிடையே எழுந்துள்ளது. இதற்குக் காரணம் என்னவெனில் 21ஆம் நூற்றாண்டில் இணையமும் ஆன்லைன் மூலமான கற்றலும் தவிர்க்க இயலாதவையாக மாறி உள்ளதே ஆகும். இதன் விளைவாக, பாரத் ஸ்கில்ஸ் மற்றும் இ-ஸ்கில் இந்தியா பிளாட்ஃபார்ம் போன்ற தொழில்திறன் பயிற்சிக்கான பல்வேறு ஃபோர்ட்டல்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. ஐஐடி-க்கள் மற்றும் ஐஐஎம்-க்கள் ஆகியவற்றோடு அதிநவீன பயிற்சி நிலையங்களை இந்திய தொழில்திறன் நிறுவனம் (IIS) என்ற பெயரில் தொடங்கி இந்தியாவின் தொழில்திறன்களை உலகத்தரத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான அடித்தளம் மும்பை மற்றும் காந்தி நகரில் (PPP) மாதிரியில் தொடங்கப்பட்டு உள்ளது.

ஃபின்டெக், அக்ரிடெக், மெடிடெக் மற்றும் தொழில்திறன் மேம்பாடு போன்ற பிரிவுகளில் அபிவிருத்தி ஏற்படாமல் தொழிற்சாலை 4.0 என்பதை நனவாக்க முடியாது என்று பிரதமர் அண்மையில் கூறி உள்ளார்.அதனால்தான் பிரதமர் ஐயத்திற்கு இடமின்றி தனது அரசின் சிறந்த ஆளுகைக்கான மாதிரியாக "தொழில்நுட்பமே முதலில்" என்று குறிப்பிடுகிறார். இளைஞர்களுக்கான தொழில்திறன் மேம்பாட்டில் புதிய மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்கான அறிவிப்புகள் பொது பட்ஜெட்டில் கூறப்பட்டு உள்ளன. பட்ட வகுப்புகளில் தொழில்பழகுதல் பயிற்சி உள்ளூர் அரசாங்கத்தில் உள்ளகப் பயிற்சி, ஆன்லைன் பட்ட வகுப்புகளை நடத்துதல்

விவசாயிகளுக்கும் பயிற்சி

- "வேளாண் விரிவாக்க துணை இயக்கம்" மூலமாக ஊரக இளைஞர்களுக்கு 7 நாட்கள் குறுகியகால தொழில்திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- வேளாண் விரிவாக்க துணை இயக்கத்தின் கீழ் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக வேளாண் கிளினிக்குகள் மற்றும் வேளாண் வர்த்தக மையங்கள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளன.
- இந்த மையங்களில் ஒருங்கிணைப்பு பயிற்சி நிறுவனங்களின் உதவியுடன் 45 நாட்களுக்கு உறைவிடப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- பயிற்சி பெற்றவர்கள் வேளாண் சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான கடன்களைப் பெறுவதற்கு உதவி அளிக்கப்படுகிறது. அண்மையில் இந்தத் திட்டம்கூட முத்ரா கடன் திட்டத்தில் சேர்க்கப்பட்டு உள்ளது.

சிறுபான்மையினருக்கான தொழில்திறன் மேம்பாடு

- 14-35 வயது பிரிவில் உள்ளோருக்கு திறன் பயிற்சி, 14-35 வயது பிரிவில் உள்ள சிறுபான்மையினருக்கு திறன் பயிற்சி, 14-35 வயது பிரிவில் உள்ள சிறுபான்மையின மகளிருக்கு திறன் பயிற்சி, பாரம்பரிய கலை மற்றும் கைவினை பொருட்கள் திறன் பயிற்சி மற்றும் சிறுபான்மையின ஏழை மக்களுக்கு பணி சார்ந்த திறன் பயிற்சி போன்ற திட்டங்களின் வாயிலாக 10 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வேலைவாய்ப்புகளும் பெற்று உள்ளனர்.
- பலன் பெற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் ஆவர்.
- தொழில்திறன் பெற்ற கைவினைக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஹுனர் ஹாட் உருவாக்கித் தருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் நாடு முழுவதும் நடைபெற்ற 39 ஹுனர் ஹாட்களின் வாயிலாக 8.5 லட்சத்திற்கும் அதிகமான மாஸ்டர்கள், கலைஞர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்கள் வேலையும் வாய்ப்புக்களும் பெற்று உள்ளனர்.

தொழில்திறன் மேம்பாட்டிற்கு இந்தியாவுடன் உலக வங்கி இணைந்துள்ளது

இந்திய மக்கள் திறமையில் பின்தங்கியவர்கள் இல்லை. ஆனால் அவர்கள் தொழில்திறன்களைப் பெறுவது என்பது மிகவும் முக்கியமானதாகும் ஆகும். எனவே இந்த இயக்கத்திற்கு உலக வங்கியும் உதவுகிறது. உலக வங்கியின் உதவியுடன் சங்கல்ப் மற்றும் ஸ்ட்ரைவ் செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 15க்கும் மேற்பட்ட நாடுகளுடன் பரஸ்பர கூட்டுறவு செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

1 சங்கல்ப்

இதன் கீழ் மாநில - மாவட்ட தொழில்திறன் கமிட்டியை வலுப்படுத்துவதற்கும் சிறப்பான சந்தை இணைப்புகளை உருவாக்கவும் குறுகியகால பயிற்சியை தரம் உடையதாக மேம்படுத்தவும் முன்னெடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2 ஸ்ட்ரைவ்

தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITI) மற்றும் தொழில்பழகுனர் பயிற்சி மூலம் அளிக்கப்படுகின்ற தொழில்திறன் பயிற்சியின் பொருத்தத்தையும் செயல்திறனையும் மேம்படுத்துதல்

3 கல்வி உதவித்தொகை

மாநில அரசின் பங்கேற்பை அதிகரிக்கும் வகையில் தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகமானது பெங்களூருவில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் உடன் இணைந்து மகாத்மா காந்தி தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தை தொடங்கி உள்ளது. மாவட்ட அளவில் தொழில்திறன் பெற்ற தொழிலாளர் தொகுப்பை உருவாக்குவதற்காக இது தொடங்கப்பட்டு உள்ளது.

> **தொழில்நுட்பம் மூலம் அதிலும் குறிப்பாக ஹேக்கத்தான் மூலமாக ஆயிரக்கணக்கான பிரச்சனைகளுக்கு தீர்வுகளை நாட்டின் இளைஞர்கள் தேடுகின்றனர் மற்றும் தீர்வுகளை வழங்குகின்றனர். இன்று நாட்டின் இளைஞர்கள் மாறி வரும் வேலைவாய்ப்புச் சூழலக்கு ஏற்ப புதிய வேலைகளை மேற்கொள்கின்றனர், சுயதொழிலில் ஈடுபடுகின்றனர், ஆபத்துக் காரணிகளை எதிர்கொள்கின்றனர், துணிச்சலுடன் செயல்படுகின்றனர் மற்றும் மற்றவர்களுக்கு வேலையை பகிர்ந்து அளிக்கின்றனர்**
>
> **- நரேந்திர மோடி, பிரதமர்**

ஆகியன சில உதாரணங்கள் ஆகும். வெளிநாடுகளில் பணிபுரிய விரும்புகின்ற இந்திய இளைஞர்களுக்கு இணைப்புப் பாடத்திட்ட (Bridge coure) வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

இன்று நாட்டின் இளைஞர்கள் புதிய செயலிகளை உருவாக்குகிறார்கள். நாட்டில் தொழில் முனைவோர்கள் யுனிகான்களாக மாறி வருகின்றன மற்றும் புத்தாக்கம், இன்குபேஷன் வாயிலாக தொழில் முனைவோர்புகளின் புதிய அலை உருவாவதில் இந்தியா முன்னோடியாக உள்ளது. தொழில்திறன்களுக்கு அரசு தருகின்ற முக்கியத்துவத்தின் காரணமாக காப்புரிமைகளின் எண்ணிக்கை 2014க்கு முன்பு ஓராண்டுக்கு சராசரியாக 4,000 என இருந்தது தற்போது 15 ஆயிரமாக அதிகரித்து உள்ளது.

வேகமாக மாறி வரும் இன்றைய உலகில் பல்வேறு துறைகளில் தொழில்திறன் பணியாளர்கள் லட்சக்கணக்கில் தேவைப்படுகின்றனர்.

அதிலும் குறிப்பாக சுகாதாரத் துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. இதை உணர்ந்த தொழில்திறன் மேம்பாட்டு அமைச்சகம் உலகம் முழுவதும் உருவாகி வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள முனைந்துள்ளது. இந்தியாவின் இளைஞர்கள் பிற நாடுகளின் தேவைகள் குறித்து அவ்வப்போதைய துல்லியமான தகவலை பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. புதிய சுகாதார பராமரிப்பு வேலைவாய்ப்புகள் எந்த நாட்டில் உருவாகின்றது? எந்த நாட்டில் என்ன தேவை இருக்கிறது மற்றும் எந்த சேவைத் துறையில் வேலைவாய்ப்பு இருக்கிறது? இந்திய இளைஞர்கள் இப்பொழுது இதற்கான தகவலை மிக விரைவாகப் பெற முடியும். அத்தகைய தகவலை வழங்குகின்ற பணியானது இப்பொழுது எளிதானதாக மாறியதற்கு வேலையையும் அதற்குத் தேவையான தகுதியையும் இணைத்துப் பார்க்கும் வரைபட (Skill Mapping) முறையே காரணம் ஆகும். நாட்டில் இந்த தொழில்திறன் வரைபட முறைக்காகவே பணியாளர்களுக்குரிய ஒரு போர்ட்டல் உருவாக்கப்பட்டு உள்ளது. தொழில்திறன் பெற்ற பணியாளர்களின் திறன் வரைபடம் உருவாக்குவதில் இந்த போர்ட்டல் முக்கியமான பங்கினை வகிக்கிறது. இதன் விளைவாக வேலை வழங்குபவர்கள் ஒரு முறை இந்த போர்ட்டலைக் கிளிக் செய்வதன் வாயிலாக தொழில்திறன் பெற்ற தொழிலாளர்களை கண்டறிய முடியும். இது தொழிலாளர்களுக்கு, அதிலும் குறிப்பாக அண்மையில் நகரங்களில் இருந்து கிராமங்களுக்கு இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பலன் அளிக்கும்.

தொழில்திறன் இந்தியா இயக்கமானது இன்றைய தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி அளிப்பதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உதவி அளிக்கின்றது. நாட்டில் டிஜிட்டல் மூலமான தொழில்திறன் மேம்பாட்டு சூழல்சார் அமைப்பை

ஏஐசிடிஈ-உடன் டிஜிட்டல் தொழில்திறன் கட்டமைப்பு

- கல்வி மற்றும் தொழில்திறன் மேம்பாட்டு அமைச்சகமானது தொழிற்கல்விக்கான அனைத்திந்திய கவுன்சிலுடன் இணைந்து டிஜிட்டல் தொழில்திறன் கட்டமைப்பு திட்டம் ஒன்றைத் தொடங்கி உள்ளது. கிளவுட் கம்ப்யூட்டிங், பிக் டேட்டா, டேட்டா அனலிட்டிக்ஸ், சைபர் பாதுகாப்பு, பிளாக் செயின், ட்ரோன்கள், ரோபாட்டிக்ஸ் போன்ற உருவாகி வரும் எதிர்கால தொழில்நுட்பங்களில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இது தொடங்கப்பட்டு உள்ளது.
- மூன்று மற்றும் ஆறு மாதங்களுக்கு நடத்தப்படும் இந்த வகுப்புகளில் 1.10 கோடி மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள்.
- தொழில்நுட்ப பயிற்சி பெறுவதோடு மாணவர்களுக்கு உள்ளகப்பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யப்படும். ஊரக மேம்பாட்டுத் துறையில் 10 லட்சம் மாணவர்களுக்கும் ரெயில்வேயில் 5 லட்சம் மாணவர்களுக்கும் கூட்டுறவு அமைச்சகத்தில் 1 லட்சம் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் தொழில்திறன் அமைச்சகத்தில் 1 லட்சம் மாணவர்களுக்கும் உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

“உலகின் தொழில்திறன் மேம்பாட்டுத் தலைநகராக இந்தியாவை உருவாக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி விரும்புகின்றார். இதுவரையில் இல்லாத வகையிலான மாற்றங்களை உலகம் எதிர்கொண்டு வருகிறது. தொழில்திறன், மீள் தொழில்திறன் மற்றும் கூடுதல் தொழில்திறன் என்பது இன்றைய காலகட்டத்தின் தேவையாக உள்ளது. தொழில்திறன் மேம்பாட்டை நாம் மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். எதிர்காலத்திற்குத் தேவையான வலுவான தொழிலாளர் தொகுப்பை உருவாக்கும் பணியில் ஒரு ஊக்குனராக அரசு செயல்பட்டு வருகிறது. புதிய தேசியக் கல்விக் கொள்கையில் கல்வியையும் தொழில்திறனையும் மிகச் சிறப்பாக ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் இந்த திசையில் மிக முக்கியமான நடவடிக்கையாக அமைந்துள்ளது”.

-தர்மேந்திர பிரதான்.

மத்திய அமைச்சர், கல்வி மற்றும் தொழில்திறன் மேம்பாடு & தொழில்முனைதல்

'யுவா கௌஷல்' : யுனிசெஃப்புடன் வருமானம் ஈட்டுவதற்கான கடவுச்சீட்டு

யுனிசெஃப்பும் மைக்ரோசாஃப்டும் இணைந்து வருமானம் ஈட்டுவதற்கான கடவுச்சீட்டு (Passport-To-Earning) என்ற யுவா கௌஷல் திட்டத்தை தொடங்கி உள்ளன. தொழில்முனைவு, வேலை கிடைப்பதற்கு ஏற்ற தகுதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சமூக தொழில்திறன்கள் ஆகியவற்றை இளைஞர்கள் பெறுவதற்கான திட்டமாக இது உள்ளது. இளைஞர்களுக்கு வேலை தொடர்பான தொழில்திறன்களை இலவசமாக வழங்கும் நோக்கத்துடன் இந்த இ-கற்றல் திட்டம் உள்ளது. மேலும் இந்தத் திட்டமானது தொழில்முனைதல், வேலைபெறுதல் மற்றும் சமூகப் பிரச்சனைக்கான தீர்வு ஆகியவற்றில் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது. பி2இ (P2E) என்பதை நடைமுறைப்படுத்தும் முதல் நாடாக இந்தியா உள்ளது.

வளர்த்தெடுப்பதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. அதேபோன்று தொழிற்சாலையின் தேவைகளுக்கு இசைவானதாக தொழில்திறன்களை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குடிமகனும் இதன் மதிப்பை உணர வேண்டும். ஏனென்றால் தனது தொழில்திறன்களை கூர்மைப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை எந்தவொரு வெற்றிகரமான நபரும் தவற விட்டுவிடக் கூடாது என்ற அக்கறையே இதற்குக் காரணம் ஆகும். வாழ்வதற்கும் பணம் ஈட்டுவதற்கும் தொழில்திறன் மட்டுமே ஒரே வழி அல்ல. வாழ்வதற்கு நமக்கு உற்சாகமும் மன உறுதியும் தேவை. தொழில்திறன் நமது உந்து சக்தியாக மாறுகிறது. புதிய லட்சியத்துடன் அதிக ஆற்றலுடன் பணியாற்றவும் தொழில் திறனானது உதவுகிறது. நீங்கள் இளைஞரோ அல்லது முதியவரோ புதிய தொழில்திறன்களை கற்றுக் கொள்வது என்பது வாழ்வதற்கான உங்களின் உற்சாகத்தை தக்க வைக்கிறது.

புதிய இந்தியாவானது தனக்குத் தானே ஒரு புதிய பாதையைத் தேர்ந்தெடுத்து உள்ளது. சர்வதேச தரங்களுக்கு ஏற்பவும் அமிர்த காலத்தின் லட்சியங்களுக்கு ஏற்பவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் செயல்பாடும் தொழில்திறன் மேம்பாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் தொடங்கப்பட்டு விட்டதால் புதிய பாதையின் பயணம் தொடரும். ■

L.I.F.E.
சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு: இந்தியா முன்னுதாரணமாக திகழ்கிறது

கடந்த சில ஆண்டுகளாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான இந்தியாவின் பொறுப்புடைமையை உலகம் பார்த்து வருகின்றது. கடந்த ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற சி.ஓ.பி-26 மாநாடு இந்தியாவின் முயற்சிகளை எடுத்துக்காட்டியது. பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்த எல்.ஐ.எஃப்.இ (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) என்ற தாரக மந்திரத்தை உலகமே வியந்து பாராட்டியது. எல்,ஐ.எஃப்.இ என்ற தாரக மந்திரம் இப்பொழுது உலகளாவிய இயக்கமாக மாறி வருகிறது. ஜுன் 5ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி சர்வதேச முன்னெடுப்பு நடவடிக்கையான "எல்.ஐ.எஃப்.இ" இயக்கத்தை தொடங்கி வைத்தார். அதேசமயம், ஈஷா அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த "மண் காப்போம்" நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான இந்தியாவின் முக்கிய பங்களிப்பை பிரதமர் எடுத்துரைத்தார் .....

இந்தியாவைப் பொறுத்தவரையில் இயற்கை, மண் மற்றும் சுற்றுச்சூழல் என்பவை வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல. அவை கலாச்சாரம் மற்றும் மதத்துடன் தொடர்புடைய தெய்வீக கூறுகளாக உள்ளன. பழங்காலம் தொட்டு இவை நமது தெய்வங்களோடும் முன்னோர்களோடும் தொடர்புடையவை ஆகும். இந்தியப் பின்னணியில் யுதிஷ்டிரர் மற்றும் துரியோதனன் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆகும். துரியோதனன் குறித்து இவ்வாறு கூறப்படுகிறது

இதன் பொருள் - எனக்கு தர்மம் தெரியும், ஆனால் எனக்கு அதன் மேல் பிடிப்பு ஏதும் இல்லை, என்னால் முடியாது, எனக்கு உண்மை குறித்து தெரியும், ஆனால் நான் அந்தப் பாதையில் நடக்க மாட்டேன். இத்தகைய மனப்போக்கு சமூகத்தில் நிலவும்போது ஒருங்கிணைந்த இயக்கங்கள் வாயிலாக தீர்வுகள் காணப்பட வேண்டும். இன்று உலகம் சுற்றுச்சூழல் சமச்சீரின்மை என்ற அதிதீவிர அச்சுறுத்தலை எதிர்கொண்டு உள்ளது. "சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறை" என்பதை ஏற்று நடக்கும் போது இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கு நாம் அனைவரும் சேர்ந்து முக்கியமான பங்கினை ஆற்ற முடியும். பிரதமர் நரேந்திர மோடியின் இந்த தாரக மந்திரம் உலகிற்கு ஒரு புதிய பாதையை காட்டுகிறது. இந்த திசையில் இந்தியா எடுத்துள்ள முக்கியமான சர்வதேச முன்னெடுப்பு நடவடிக்கைகளுள் ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு ஏஜென்சிகளுடன் இணைந்து தொடங்கியுள்ள எல்.ஐ.எஃப்.இ என்ற இயக்கம் உள்ளது.

ஜுன் 5ஆம் தேதியன்று உலக சுற்றுச்சூழல் தினத்தில் நடைபெற்ற காணொளி கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி "சுற்றுச்சூழல் - உகந்த வாழ்க்கைமுறை இயக்கம்" அதாவது எல்.ஐ.எஃப்.இ என்பதை தொடங்கினார். புது யோசனைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளுக்கான எல்.ஐ.எஃப்.இ சர்வதேச அழைப்பு தொடங்கப்பட்டு உள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள தனிநபர்கள், பல்கலைக்கழகங்கள், சிந்தனையாளர்கள், லாபநோக்கில் செயல்படாத நிறுவனங்கள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இந்தியா எடுத்துள்ள முக்கியமான நடவடிக்கைகள்

- புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்களில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட 40% நிறுவுதிறன் என்ற இலக்கை இந்தியா குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு 9 ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்து விட்டது.
- சி.ஓ.பி 21ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை இந்தியா குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு 9 ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்து விட்டது. 2014ல் இருந்து சூரிய மின்சார தயாரிப்பிற்கான நிறுவுதிறன் 1900 சதவிகிதம் அதிகரித்து உள்ளது. வனவிலங்குகளுக்கான பாதுகாப்பு பகுதிகளின் மொத்த எண்ணிக்கை 32% அதிகரித்து உள்ளது.

- நவம்பர் 2022க்குள் பெட்ரோலில் 10% எத்தனால் கலக்க வேண்டும் என்ற இலக்கு 5 மாதங்களுக்கு முன்னரே அடையப்பட்டு விட்டது. இதன் விளைவாக கச்சா எண்ணெய் இறக்குமதி 5.5 பில்லியன் டாலர் குறைந்து விட்டது. கார்பன்டைஆக்சைடு வெளியேற்றம் 2.7 மில்லியன் டன் குறைந்துள்ளது. விவசாயிகளின் வருமானம் 5.5 பில்லியன் டாலர் அதிகரித்து உள்ளது.

288%

கங்கை நதியை புத்துயிர்ப்பு செய்வதற்கான பட்ஜெட் 288% அதிகரிக்கப்பட்டு உள்ளது. உலகின் மிகப்பெரிய சூரிய மின்சக்தி பூங்கா ராஜஸ்தானின் பத்லாவில் தொடங்கப்பட்டு உள்ளது.

ஆசிய யானைகள் 2010-ல் இருந்ததை விட 2020-ல் 64% அதிகரித்துள்ளன. புலிகளும் 2014-ல் இருந்ததை விட 2018-ல் 33% அதிகரித்துள்ளன.

மற்றும் ஏனைய அமைப்புகளிடம் இருந்து பருவநிலைக்கு உகந்த நடத்தை மாற்றத் தீர்வுகளை வழங்குமாறு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு பெறப்படும் தீர்வுகள் செயலாக்கப்படுத்தப்படும். இந்த இயக்கத்தை ஐக்கிய நாடுகள் சபை, உலக மூலவள நிறுவனம், சமூக மற்றும் நடத்தையியல் மாற்றத்திற்கான மையம் மற்றும் பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றின் பங்கேற்புடன் இந்திய அரசு தொடங்கி உள்ளது. எல்.ஐ.எஃப்.இ இயக்கத்தை அறிமுகப்படுத்திய பிரதமர் நரேந்திர மோடி சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியாவின் முக்கியமான நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை அழுத்தமாக எடுத்துரைத்ததோடு மீள்பயன்பாடு, குறைத்தல் மற்றும் மறுசுழற்சி கோட்பாட்டை புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார். மிகச்சிறந்த சுற்றுச்சூழல் மற்றும் சர்வதேச நல்வாழ்விற்கான எந்த ஒரு முயற்சிக்கும் உதவி அளிக்க இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் கூறி உள்ளார். இது தொடர்பான நமது செயல் ஆவணங்கள் இதற்கான சாட்சியங்களாக உள்ளன. சர்வதேச சூரிய மின்சாரத்திற்கான நட்புறவு, ஒரே சூரியன் - ஒரே உலகம் - ஒரே மின்சார விநியோக முறை என்பதில் கவனம் செலுத்துதல், பேரிடர்களை எதிர்கொள்ளும் ஆற்றலுடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் முன்னெடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பது முக்கியமான பங்களிப்பாக உள்ளது. இத்தகைய முயற்சிகளுக்கு உலகம் ஆதரவு அளிக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். எல்.ஐ.எஃப்.இ இயக்கம் நம்மை மேலும் ஒன்றாக இணைக்கும் என்பதிலும் வருங்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான எதிர்காலம் கிடைக்கும் என்பதை உறுதி செய்யும் என்பதிலும் நான் நம்பிக்கையுடன் உள்ளேன். இந்த பயணத்தில் உலகம் பங்கேற்ற வேண்டும் என்று நான் மீண்டும் அழைக்கிறேன்". ■

'மண்ணைக் காப்போம்' திட்டம்

மண்ணுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான முன்முயற்சிகள்

கடந்த சில ஆண்டுகளில் மண்ணின் ஆரோக்கியம் குறைந்து வருவது பற்றி உலகம் முழுவதும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளில், உலகளவில் 10% வளமான நிலங்கள், தரிசு நிலங்களாக மாறியிருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு, உலக வெப்பமயமாதலால் மண்ணின் ஈரப்பதம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் குறைவு முதலியவை இதற்குக் காரணம். அதிகரித்துவரும் இந்த பிரச்சனைக்கிடையே, இயற்கை வேளாண்மை, மண்வள அட்டை, வேம்பு பூசப்பட்ட உரம், நுண் நீர் பாசனம், மழைநீர் சேகரிப்பு, ஆறுகளை பாதுகாத்தல் மற்றும் அடல் புஜல் இயக்கம் உள்ளிட்ட முக்கிய முன்முயற்சிகளோடு இந்தியா முன்னேறி வருகிறது. ஜூன் 5-ஆம் தேதி தில்லி விக்யான் பவனில் இஷா அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண் பாதுகாப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, மண்ணை காப்பதை நோக்கிய இந்தியாவின் 5 முக்கிய முயற்சிகளை குறிப்பிட்டார். "ஐந்து முக்கிய விஷயங்களில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்- முதலாவது- மண்ணை ரசாயனமற்றதாக எப்படி மாற்றுவது. இரண்டாவது- மண் கரிமப் பொருள் என்று தொழில்நுட்ப மொழியில் நீங்கள் அழைக்கும் மண்ணில் வாழும் உயிரினங்களை எவ்வாறு பாதுகாப்பது. மூன்றாவது- மண்ணில் ஈரப்பதத்தை எவ்வாறு நிலைத்திருக்கச் செய்வது மற்றும் நீரின் இருப்பை எவ்வாறு அதிகரிப்பது. நான்காவது- நிலத்தடி நீர் குறைவால் மண்ணில் ஏற்பட்டுவரும் பாதிப்பை எவ்வாறு நீக்குவது. ஐந்தாவது- வனப்பகுதிகள் குறைந்து வருவதால் ஏற்படும் மண் அரிப்பை எவ்வாறு தடுப்பது", என்று அவர் தெரிவித்தார்.

கடன் பெறுவதற்கு ஒற்றைச் சாளர முறை

நாட்டில் உள்ள குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் வாழ்வை எளிதாக்குதல் ஆகியவற்றுக்கு அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகின்றது. அதற்காகத்தான் அரசு இப்போது பல்வேறு கடன் திட்டங்களை இணையதளம் வாயிலாக வழங்கி வருகின்றது. கடன் பெற தேவையுள்ளோர் ஆன்லைனில் விண்ணப்பித்து எந்தப் பிரச்சனையும் இல்லாமல் ஆன்லைன் மூலமாகவே கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ள முடியும். பல்வேறு வகைப்பிரிவுகளாக இந்தக் கடன், ஜன் சமர்த் போர்ட்டல் வாயிலாக விநியோகிக்கப்படுகிறது. இந்தப் போர்ட்டலை ஜூன் 6 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அரசுத் திட்டங்கள் அனைத்தும் பயனாளிகளுக்கு கிடைக்கச் செய்து சுய வேலைவாய்ப்பை அதிகரிப்பதில் இந்தப் போர்ட்டல் முக்கியமான பங்கினை ஆற்றும்.

ஜூன் 6ஆம் தேதி நிதி மற்றும் நிறுவன உறவுகள் அமைச்சகத்தின் ஐகானிக் அதாவது முன்னுரிமை வாரக் கொண்டாட்டங்களின் துவக்க விழாவில் பிரதமர் இந்தப் போர்ட்டலைத் துவக்கி வைத்தார். இந்தப் போர்ட்டலானது 13 அரசுத் திட்டங்களை ஒரே தொகுப்பாகத் தொகுத்து ஒற்றை பிளாட்ஃபார்மில் குடிமக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் தொடங்கப்பட்டு உள்ளது. இது குடிமக்கள் கடன் பெறுவதை எளிதாக்கும். அதாவது மக்கள் பல்வேறு இடங்களுக்கு பயணிக்கும் செலவை சேமிக்க உதவுவதோடு பல்வேறு நடைமுறைகளுக்கு ஆட்பட வேண்டிய சிரமத்தையும் குறைக்கிறது. இந்தப் போர்ட்டல் குடிமக்களின் வாழ்வை எளிதாக்குவதாக மட்டுமல்லாமல், அவர்களின் கனவுகளை நனவாக்கவும் உதவுகிறது. இந்தத் தருணத்தில் பிரதமர் 8 ஆண்டுகளில் 2 அமைச்சகங்கள் பயணித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள் குறித்த டிஜிட்டல் கண்காட்சியையும் தொடங்கி வைத்தார்.

போர்ட்டலைத் தொடங்கி வைத்த போது பிரதமர் நரேந்திர மோடி, “இந்திய அரசின் கடன் தொடர்பான அனைத்துத் திட்டங்களும் இப்பொழுது ஒரே இடத்தில் கிடைக்கும்” எனக் குறிப்பிட்டார். பொதுமக்களுக்கு பிரதமர் வழங்கும் சேவையின் ஒரு அங்கமாக ஜன் சமர்த் போர்ட்டல் விளங்குகிறது. சாதாரண குடிமக்களுக்கு திட்டங்கள் கிடைக்கவும் அவர்கள் பலன்களைப் பெறவும் இது உதவுகிறது. பொதுமக்களை அணுகுதல், தகுதி வாய்ந்த ஒவ்வொரு நபரையும் அணுகுதல் மற்றும் அனைத்துப் பலன்களும் அவர்களுக்கு கிடைக்கச் செய்தல் என்பது அரசின் உயர் முன்னுரிமையாகவும் பொறுப்பாகவும் உள்ளது.

ஜன் சமர்த் போர்ட்டல்: நான்கு கடன் பிரிவுகளில் 13 திட்டங்கள்.

- ஜன் சமர்த் போர்ட்டலானது நான்கு கடன் வகைப் பிரிவுகளின் 13 அரசுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற மற்றும் கடன் தருகின்ற 125 நிறுவனங்களில் இருந்து உரிய நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் இடமாக உள்ளது.
- சிபிடிஇ, ஜிஎஸ்டி, உதய், என்இஎஸ்எல், யுஐடிஏஐ, சிபில் மற்றும் பிற அரசு ஏஜென்சிகளுடன் ஒருங்கிணைந்து கடன் வழங்கும் நடைமுறையை இது விரைவுபடுத்துகிறது.
- ஜன் சமர்த் போர்ட்டலானது வேளாண்மை, வாழ்வாதாரம், கல்வி மற்றும் வர்த்தக நடவடிக்கை ஆகிய பிரிவுகளின் கீழ் கடன்களை வழங்குகின்றது.
- ஜன் சமர்த் போர்ட்டலில் ஏற்கனவே 3 அரசுத் திட்டங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. எதிர்காலத்தில் கூடுதலான திட்டங்கள் சேர்க்கப்படும். ஜன் சமர்த் போர்ட்டலானது விண்ணப்பிப்பவரின் தகுதிகளை பரிசீலித்து கடனுக்கான கொள்கை ரீதியான அனுமதியை வழங்கி விண்ணப்பத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிக்கு பரிந்துரைச் செய்து அனுப்பும்.
- கடன் வழங்கும் நடைமுறையில் அண்மைக்கால நிலைமை என்னவென்று பயனாளிகளுக்கு அவ்வப்பொது தகவல் வழங்கும். ஒரு முறைக்கு மேல் வங்கிக் கிளைக்கு செல்ல வேண்டிய தேவையே இருக்காது.
- கல்விக்காக 3 திட்டங்கள், வேளாண்மைக்காக 3 திட்டங்கள், வர்த்தக நடவடிக்கைக்காக 6 திட்டங்கள் மற்றும் வாழ்வாதார கடன்களுக்காக 1 திட்டம் இதில் உள்ளன. ■

இந்தியாவின் நோக்கம் உலகின் உயிரிதொழில்நுட்ப மையமாக உருவாக வேண்டும்

நாட்டின் ஜிடிபி-க்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பதோடு மட்டுமல்லாமல் உயிரிதொழில்நுட்பமானது மிகப் பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளையும் உருவாக்குகிறது. கடந்த 8 ஆண்டுகளில் மத்திய அரசின் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக இந்தியாவின் உயிரிதொழில்நுட்ப பிரிவானது 8 மடங்கு வளர்ச்சியோடு 80 பில்லியன் டாலர் உயிர்-பொருளாதாரத்தை அடைந்துள்ளது. புதிய இலக்குகளுடன் மேலும் முன்னேறிச் செல்வதற்கான தருணம் இதுவே. உயிரிதொழில்நுட்ப தொழில் முனைவோர் கண்காட்சி என்பது இந்தத் திசையில் எடுக்கப்பட்டுள்ள ஒரு நடவடிக்கை ஆகும். இந்தக் கண்காட்சியை ஜூன் 9ல் தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, "உயிரிதொழில்நுட்பத்தின் உலகளாவிய சூழல்சார் அமைப்பில் முதல் 10 இடத்தில் உள்ள நாடுகளின் அணியில் இந்தியா சேர்கின்ற நாள் வெகுதொலைவில் இல்லை", என்றார்.

கோவிட் பெருந்தொற்றின் சிரமமான காலகட்டத்தில் நாட்டில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன. தற்போதுள்ள பயன்பாட்டில் உள்ள மருத்துவக் கருவிகள், மருந்துகள், உள்கட்டமைப்பு வசதிகள், தடுப்பு மருந்து ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி குறித்தான சந்தேகங்கள் இருந்தன. ஆனால் யாரும் கற்பனை செய்து பார்க்க முடியாத வகையில் இந்தியா சாதனை புரிந்துள்ளது. அரசு மற்றும் உயிரிதொழில்நுட்பத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் ஏனைய இதர தொழிற்பிரிவுகள் ஒரு புதிய வெற்றிக்கதையை எழுதி உள்ளன. இந்த மாபெரும் வெற்றிக்குப் பின்னால் கடந்த 8 ஆண்டுகளின் கடின உழைப்பும் முயற்சிகளும் அடங்கி உள்ளன. அதிலும் குறிப்பாக உயிரிதொழில்நுட்பவியல் பிரிவில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு இருந்தது. தொழில்முனைவோர் இந்தியா, அடல் புத்தாக்க இயக்கம், இந்தியாவில் தயாரியுங்கள் மற்றும் சுய சார்பு இந்தியா போன்ற முன்னெடுப்பு நடவடிக்கைகளால் உயிரிதொழில்நுட்ப பிரிவுக்கு உந்துதல் கிடைத்தது. இத்தகைய முயற்சிகளுக்கு ஒரு புதிய திசையைக் காட்டும் வகையில் தில்லி பிரகதி மைதானத்தில் ஜூன் 9-10ல் உயிரிதொழில்நுட்ப தொழில் முனைவோர் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதை தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, "நமது ஐடி நிபுணர்களின் தொழில்திறன் மற்றும் புத்தாக்கம் தொடர்பான உலகின் நம்பிக்கை புதிய உச்சத்தை அடைந்துள்ளது. இதே நம்பிக்கை, இதே நற்பெயர், இந்தப் பத்தாண்டிலும் இந்தியாவின் உயிரிதொழில்நுட்ப பிரிவின் மீதும் இந்தியாவின் உயிரிதொழில்நுட்ப நிபுணர்கள் மீதும் தொடர்கிறது" என்று கூறினார்.

நாட்டில் இந்தப் பிரிவின் அபிவிருத்திக்கு உயிரிதொழில்நுட்ப தொழிலக ஆராய்ச்சி உதவி கவுன்சில் (BIRAC) ஆற்றியுள்ள பங்கு குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார். அமிர்த காலத்தில் இன்று நாடு மேற்கொண்டுள்ள புதிய லட்சியங்களை எடுத்துக்காட்டிய பிரதமர் நாட்டின் வளர்ச்சிக்கு உயிரிதொழில்நுட்பம் சார்ந்த தொழில் வளர்ச்சியின் பங்கு மிக முக்கியமானது எனக் குறிப்பிட்டார். ■

உயிரிதொழில்நுட்ப பிரிவில் அளப்பரிய வாய்ப்பு

உலகில் உயிரிதொழில்நுட்பத்திற்காக உள்ள முதல் 12 இடங்களில் இந்தியா ஒன்றாக உள்ளது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் 3ஆவது இடத்தில் உள்ளது. சர்வதேச புத்தாக்க குறியீட்டு எண் அளவுகோலின்படி 46ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ள இந்தியாவின் உயிர்-பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு இரட்டை இலக்கத்தில் வளர்ச்சி பெற்று 2021 81 பில்லியன் அளவை எட்டி உள்ளது. 2018ல் இது 51 பில்லியன் என்ற அளவிலேயே இருந்தது. 2025க்குள் 150 பில்லியன் என்ற இலக்கை நாம் அடைய உள்ளோம். கோவிட் தொற்று ஆண்டுகளிலும் இரட்டை இலக்க வளர்ச்சி இருந்தது இதை உறுதிப்படுத்துகிறது. உயிரிதொழில்நுட்ப இன்குபேட்டர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த நிதி சுமார் 7 மடங்கு அதிகரித்து உள்ளது. 2014ல் நம் நாட்டில் 6 உயிர் இன்குபேட்டர்கள் மட்டுமே இருந்தன. இன்று இதன் எண்ணிக்கை 75ஆக அதிகரித்து உள்ளது. 8 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் 10 உயிரிதொழில்நுட்ப உற்பத்திப் பொருட்களே இருந்தன. இன்று இவற்றின் எண்ணிக்கை 700ஐத் தாண்டி விட்டது.



புேயில் ள்ள ந்த் துக்ா ாம் ஆ த்தில் பு ட்கி ளீர் ளின் அ ங்கு தினூ்பு

வளர்ச்சிப் பணிகளும் பாரம்பரியமும் ஒத்திசையும் வேகத்தில்

க டந்த 8 ஆண்டுக னில் இந்பியாளின் வளர்ச்ணியுடன் ணீதொறில்நுய்மும், க ட்மைப்பும் மேம்படுத்தப்படு வருகிறது. இதன்லனக , இந்பியாளின்மாபெரும் க லாச்ச ாரம் மற்றும் பாரம்பவியத்தைப் பாதுக ாக்கும் பநிக ளும் ஒரே நே ரத்பில் மிறைவடைந்துள்ளன இதற்கு உதாரணங்க ளாக , கே தார்ந ாத் முதல் க ாணிளிஸ்வந ாதர் ஆலயம் வரையும், ஹைதராபாத்பில் ஸ்ரீாமானுஜவின்னிலை அமைக்க ப்படுவது வரையும் அமைந்துள்ளன இந்தப் பட்டியழில் தற்போது மக ாராஷ்டிராளின்மாபெரும் ஸ்ரீ ந்த் துக்க ாராம் மக ராஜானின்மலைக் கே ாவிழின்பெயரும் சே ர்ந்துள்ளது. இதணை பிறந்து வைக்கும் மிக ழ்ளில் ஜூன் 14-ல் க லந்துகெ ாண்டு பேணிய யிரதமர் ந ரேந்பிர மோடி, வளர்ச்ணியும், பாரம்பவிய பாதுக ாப்பும் ஒரே நே ரத்பில் மேற்கெ ாள்ளப்படுவதை இது உறுபிப்படுத்பியுள்ளது,ாண்டார்.

வர்காரி இன துறவியாகவும், கவிஞராகவும் இருந்தவர் சந்த் துக்காராம். இவர் அபங் (தெய்வீகப்பாடல்கள் என்றும் அழைக்கப்படும்) எனப்படும் ஆன்மீகப் பாடல்கள், தெய்வீக கவிதைகள், கீர்த்தனைகள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தெகு பகுதியில் வசித்த சந்த் துக்காராம், மகாராஷ்டிரா பக்தி இயக்கத்துக்கான தொடக்கப் பணிகளை மேற்கொண்டவர் என்று கூறப்படுகிறது. இலக்கியத்தில் அவரது பணி அளப்பரியது. வர்காரி இனத்துக்கு மட்டுமல்லாமல், உலகம் முழுமைக்குமாக பாடுபட்டவர். அவரது அபங்குகள் ஆங்கில மொழியிலும் கூட மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவரது மறைவுக்குப் பிறகு, மலைக் கோயில் கட்டப்பட்டது. அண்மையில் இது புனரமைக்கப்பட்டு, அதனை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இந்தக் கோயிலில் சந்த் துக்காராமின் சிலையும் உள்ளது. விஷ்ணுவை பின்பற்றுபவராக துறவி துக்காராம் திகழ்ந்தார். மேலும், வைணவத்தைப் பின்பற்றி வந்தார். சந்த் துக்காராமின் பக்தி பாடல்கள் பல்வேறு வகையிலும் இசைக்கப்பட்டு, தற்போதும் கிடைக்கின்றன. அவரை கௌரவிக்கும் வகையில், கடந்த 2002-ம் ஆண்டில் 100 ரூபாய் மதிப்பு கொண்ட வெள்ளி நாணயத்தை இந்திய அரசு வெளியிட்டது.

கோயில் திறப்பு விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “75-வது ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் இன்றைய நாளில், தனது

பந்தர்பூர் முதல் ார்தாம் ை* ார் ஆ ம் முதல் ாமா ணழித்தம் ை பா ம்ரி பாது ாப்பு மு ற்கி ள்

- பந்தர்பூர் பால்கி மார்க் நவீனமாக்கப்பட்டுள்ளது. சார்தாம் யாத்திரைக்காக புதிய நெடுஞ் சாலைகள் கட்டப்படுகின்றன. பிரசாத் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் ஆன்மீக பகுதிகள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் உருவாக்கப்படுகின்றன.
- அயோத்தியில் மிகப்பெரும் ராமர் ஆலயம் கட்டப்படுகிறது; காசி விஸ்வநாதர் ஆலய வளாகமும் புதிய வடிவத்தைப் பெற்றுள்ளது; சோம்நாத்-தில் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மகரிஷி வால்மீகி-யின் ராமாயணத்தில் இடம்பெற்றுள்ள இடங்கள் அனைத்தும் ராமாயண வழித் தடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த 8 ஆண்டுகளில் அம்பேத்கருடன் தொடர்புடைய 5 ஆன்மீக வழித் தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

> மனித வாழ்க்கையில் சத்சங்கம் என்பது மிகவும் அரிதான பெருமை என்று நமது வேதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. துறவிகளின் ஆசியை ஒருவர் பெறும்போது, இறைவனை உணர்ந்ததாக இருக்கும். தெகு பகுதி புனித ஆன்மீகத் தலத்துக்கு நான் வந்தபோது, அதே உணர்வு எனக்கு ஏற்பட்டது.
>
> - நீ ந்தி போடி*
>
> பி தர்.

ஜல்பூஷன் ட ன் ம்ஏம் ை க்கடம் திணூ்பு

மும்பையில் மகாராஷ்டிர ஆளுநரின் அதிகாரப்பூர்வ இல்லமாக 1885-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் ராஜ் பவனில் கட்டப்பட்டுள்ள ஜல்பூஷன் பவனை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். இந்த கட்டிடத்தின் ஆயுட்காலம் முடிவடைந்த நிலையில், அது இடிக்கப்பட்டு, பழைய கட்டிடத்தின் அனைத்து சிறப்பு அம்சங்களையும் பாதுகாத்து புதிய கட்டிடம் கட்டப்பட்டது. மும்பையில் புரட்சியாளர்களின் அரங்கையும் பிரதமர் அர்ப்பணித்தார். 2016-ம் ஆண்டில் ராஜ் பவனில் பதுங்கு குழி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை ஆயுதங்களை பராமரிப்பதற்காக ரகசிய அறையாக பிரிட்டிஷார் பயன்படுத்தி வந்தனர். 2019-ம் ஆண்டில் பதுங்கு குழி புதுப்பிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் புரட்சியாளர்களின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில், அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக பதுங்கு குழி கலைக்கூடம் உருவாக்கப்பட்டது.

இலக்குகளை 100 சதவீதம் நிறைவேற்ற நாடு உறுதிபூண்டுள்ளது,'' என்று தெரிவித்தார். உண்மையில், நாட்டில் ஏழைகளுக்காக தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள், மின்சாரம், நீர், வீட்டுவசதி, மருத்துவ சிகிச்சை போன்ற அடிப்படை வசதிகளுடன் தொடர்புடையவையாக உள்ளன. இதனை ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதேபோல, சுற்றுச்சூழல், நீர் சேமிப்பு மற்றும் நதிநீர் சேமிப்பு பிரச்சாரங்களைத் தொடங்கியதுடன், ஆரோக்கியமான இந்தியாவுக்கான உறுதியை எடுத்துள்ளது. இந்த தீர்மானங்களை நிறைவேற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. வர்க்காரி துறவிகளின் கொள்கைகள் அடிப்படையில், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் பணியிலும் நாடு ஈடுபட்டுள்ளது. ஏழைகள் மேம்பாட்டுக்கான தீர்மானம் என்பது, வர்க்காரி துறவி துக்காராமிலிருந்து வந்தது. அவர் குறித்து பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ''அவரது கொள்கைகள், பல்வேறு மக்களையும் ஊக்குவிக்கிறது,'' என்று தெரிவித்தார். மற்றவர்களுக்கு உதவ வேண்டும் மற்றும் இரக்க குணம் கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வை நமக்கு அவர் ஊட்டுகிறார். சத்ரபதி சிவாஜி மன்னர் போன்ற தேச நாயகர்களின் வாழ்க்கையில் துக்காராம் போன்ற துறவிகள் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். சுதந்திரப் போராட்டத்தின்போது, சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீர சாவர்க்கர், துக்காராமின் அபங்குகளை பாடியதுடன், கைவிலங்கை சிப்லி போன்று இசைத்தார்.

தனது மகாராஷ்டிர பயணத்தின்போது, துக்காராமின் கோயில், ஜல் பூஷன் பவன், புரட்சியாளர்களின் அரங்கு ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். மும்பை சமாச்சார் இதழின் 200-வது ஆண்டு விழாவிலும் பங்கேற்றார்.

ந்த0. . ஆண்டு ளா தொடர்ந்து ளியிப்படும் மும்பை ாச் ார்

மும்பையின் பாண்ட்ரா குர்லா வளாகத்தில் நடைபெற்ற மும்பை சமாச்சார் இதழின் 200-வது ஆண்டு விழாவிலும் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். மும்பை சமாச்சாரை வார இதழாக ஜூலை 1, 1822 முதல் வெளியிடத் தொடங்கினார் ஃபர்துஞ்சி மர்ஜாபன்ஜி. இது நாளிதழாக 1832-ம் ஆண்டில் மாற்றப்பட்டது. இது 200 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகிறது. இந்த அற்புதமான சாதனையை நினைவுகூரும் வகையில், அஞ்சல் தலையும் கூட வெளியிடப்பட்டது. ■

பாதுகாப்புத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் "அக்னிபத்"

அதிக திறன்வாய்ந்த இளைஞர்கள் தயாராக இருப்பார்கள்

எந்தவொரு நாட்டுக்கும் முதுகெலும்பாக இளைஞர்கள் திகழ்கிறார்கள். புதுமையான சிந்தனைகள் மற்றும் உருவாக்கத்திறனை கொண்டதாக இளைஞர்களின் மனம் இருக்கும். தனது இளைஞர் சக்தியின் திறனை பயன்படுத்தாத உலகின் எந்தவொரு நாடும் வலுவாக இருக்காது. இந்த விவகாரத்தில், பல்வேறு வயது கொண்ட மக்களை உள்ளடக்கிய நாடாக இந்தியா திகழ்கிறது. உலகின் இளமையான நாடு என்று கருதப்படுகிறது. இளைஞர்களை மேம்படுத்தும் நோக்கில், இரண்டு முக்கிய முடிவுகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. முதலாவதாக, "அக்னிபத்" திட்டம். இது பாதுகாப்புப் படைகளில் இளைஞர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு சேவையாற்றும் வாய்ப்பை வழங்குகிறது. இரண்டாவதாக, மத்திய அரசு மற்றும் அதன் துறைகளில் தீவிர நடவடிக்கைகள் மூலம், அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இந்தியாவின் இளைஞர் சக்தியை ஒழுக்கத்தோடு கூடிய, திறன்வாய்ந்தவர்களாகவும், நிதி அடிப்படையில் மேம்பட்டவர்களாகவும் மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இளைஞர்களுக்கு தங்களது கனவுகளை நிறைவேற்றுவதற்கான புதிய பாதையை அளிக்கும் நோக்கில், "அக்னிபத்" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, ஜூன் 14-ல் ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தின்கீழ், 17.5 வயது முதல் 21 வயது வரையான இளைஞர்களுக்கு, பாதுகாப்புப் படைகளில் 4 ஆண்டுகள் பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். முதல் ஆண்டில், ஆள் சேர்க்கையின் போது, இரண்டு ஆண்டுகள் வயது தளர்வு அளிக்கப்படும்.

இந்த வீரர்கள் அக்னிவீரர்கள் என்று அழைக்கப்படுவார்கள்

- **அக்னிபத் திட்டத்தின்கீழ், சிப்பாய் பணிக்காக புதிய ஆட்கள் தேர்வுப் பணிகள் தற்போது நடைபெற உள்ளது. இதன்கீழ் தேர்வு செய்யப்படும் வீரர்கள் அக்னிவீரர்கள் என்று அழைக்கப்படுவார்கள்.**
- **ராணுவத்தில் 4 ஆண்டுகள் பணியாற்ற அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். அவர்களில் 25 சதவீதம் பேருக்கு ராணுவத்தில் நீண்ட காலம் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும். அதாவது, 4 ஆண்டுகளுக்குப் பிறகு, 25 சதவீத வீரர்களுக்கு பாதுகாப்புப் படைகளில் 15 ஆண்டுகளுக்கான நிரந்தரப் பணி வழங்கப்படும்.**
- **4 ஆண்டு சேவைக்குப் பிறகு, பெரும் தொகை கிடைக்கும். தொழில்நுட்ப திறன் பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்படும். இது போட்டிமிகுந்த உலகில் புதிய வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு உதவும். இந்தத் திட்டத்தின்கீழ், ஆள் தேர்வுக்கான முதலாவது அறிவிப்பு 90 நாட்களுக்குள் வெளியிடப்படும்.**

தகுதியின் அடிப்படையில் ஆட்கள் தேர்வு

- **அக்னிவீரர்களாக வருவதற்கு, நாட்டில் உள்ள 17.5 வயது முதல் 21 வயது வரையுள்ள 10 மற்றும் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.**
- **அக்னிபத் திட்டத்தின்கீழ், ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படைக்கு அகில இந்திய அளவிலான தகுதி அடிப்படையிலான ஆட்கள் தேர்வு**

திட்டம் அறிமுகப்படுத்தப்படும். 10-ம் வகுப்புக்குப் பிறகு, அக்னிவீரர்களாக தேர்வுசெய்யப்படும் இளைஞர்களுக்கு ராணுவத்திலேயே 12-ம் வகுப்பு சான்றிதழ் கிடைக்கும்.

- இந்தத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டில் நான்கு ஆண்டுகால பணிக்கு 46,000 இளைஞர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள். ஆட்கள் தேர்வு நடவடிக்கைகளில் பெண்களும் பங்கேற்கலாம். இதுபோன்ற பணியாளர் தேர்வு நடவடிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படும்.

சம்பளம் மற்றும் வசதிகள்

- முதல் ஆண்டில், அக்னிவீரர்களுக்கு மாத ஊதியமாக ரூ.30,000 வழங்கப்படும். இதில், ரூ.9,000 அளவுக்கு சேவை நிதியத்தில் வரவு வைக்கப்படும். அதே அளவுக்கான தொகையை அக்னிவீரர்களுக்கான கணக்கில் ராணுவம் செலுத்தும். இரண்டாவது ஆண்டில் மாதத்துக்கு ரூ.33,000-ம், 3-வது ஆண்டில் ரூ.36,500-ம், நான்காவது ஆண்டில் ரூ.40,000-ம் வழங்கப்படும். இதனுடன், உரிய விதிகளின்படி, உணவுப் பொருட்கள், சீருடை மற்றும் போக்குவரத்துப் படி கிடைக்கும்.
- 4 ஆண்டுகள் பணி நிறைவுக்குப் பிறகு, அக்னிவீரர்களுக்கு சேவை நிதியாக ரூ.11.71 லட்சம் வழங்கப்படும். இதற்கு வரி கிடையாது. அக்னிவீரர்களுக்கு பணிக் கொடையோ (gratuity) அல்லது ஓய்வூதியப் பலனோ கிடைக்காது.
- பங்களிப்பு இல்லாத வகையில், ரூ.48 லட்சத்துக்கு ஆயுள் காப்பீட்டு சலுகையும் உண்டு. அதோடு, ராணுவ சேவையின்போது உயிரிழப்பு ஏற்பட்டால், நிவாரண நிதியாக ரூ.44 லட்சம் வழங்கப்படும். உடல் ஊனம் ஏற்படுவோருக்கு 75 சதவீதம், 50 சதவீதம், 25 சதவீதம் என்ற அளவுக்கான உடல் ஊனம் முறையே, மொத்த தொகையாக ரூ.44 லட்சம், ரூ.25 லட்சம், ரூ.15 லட்சம் வழங்கப்படும்.

திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்

- அக்னிவீரர்கள், தங்களது பணிக் காலத்தை நிறைவு செய்த பிறகு, மற்ற துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்வதை ஊக்குவிக்கும் வகையிலான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ராணுவப் பணியின்போது, தொழில்நுட்ப பயிற்சி, பட்டயம் அல்லது மற்ற கல்வி வாய்ப்புகளும் வழங்கப்படும். இது தொழில் துறை உலகில் எளிதாக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

பாதுகாப்புப் படையினருக்கான முக்கிய நடவடிக்கைகள்

- இந்திய ராணுவத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60,000 வீரர்கள் ஓய்வு பெறுகிறார்கள். இந்த காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக 100-க்கும் மேற்பட்ட இடங்களில் வெளிப்படையான பணியாளர் தேர்வுக்கு ராணுவம் ஏற்பாடு செய்கிறது. தற்போது அவர்கள் அக்னிபாத் திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.
- ராணுவத்தில் வீரர்கள் மட்டத்தில் பணியாற்றுவோரின் சராசரி வயதைக் குறைப்பதே அக்னிபத் திட்டத்தின் நோக்கம். தற்போதைய நிலையில், வீரர்களுக்கான சராசரி வயது 32-ஆக உள்ளது. புதிய ஆட்கள் தேர்வு திட்டம் மூலம், இது 26-ஆக இருக்கும். ■

□ன்னு□ ஆண்டு□ளில் / . □ட்□ம் இளைஞ□ர்□க்கு புதி□ேவ□ை□ாய்ப்பு

அரசு வேலைக்கு தயாராகும் நபர்களுக்கு இது நல்ல செய்தியாக அமைந்துள்ளது. வரும் ஒன்றரை ஆண்டுகளில் பல்வேறு துறைகளிலும் 10 லட்சம் பணியிடங்களை அரசு நிரப்ப உள்ளது. மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களின் கீழ், பணியாளர் தேர்வு நடத்தப்படும். அதாவது, ஒவ்வொரு நாளும் 1,850 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். அனைத்து துறைகள் மற்றும் அமைச்சகங்களில் காலிப் பணியிடங்களின் நிலவரம் குறித்து ஆய்வு செய்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தப் பணியிடங்களுக்கான உத்தரவுகளை வழங்கும் பணியை தீவிர இயக்கமாக மேற்கொண்டு, அதாவது விரைவில் வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அஞ்சல், பாதுகாப்பு (சிவில்), ரயில்வே, வருவாய் மற்றும் பிற மத்திய அரசு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படும். மாநிலங்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு மார்ச் 1, 2020-ல் பதிலளித்த மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், மத்திய அரசு துறைகளில் 8.72 லட்சம் பணியிடங்கள் காலியாக இருப்பதாக தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலையில், இந்தப் பணியிடங்களின் எண்ணிக்கை 10 லட்சம் வரை அதிகரிக்கும் என்பது தெளிவாகிறது. இதற்காகவே, பணியாளர்களை தேர்வு செய்ய பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார். மத்திய அரசின் அனைத்துத் துறைகளிலும் ஒட்டுமொத்தமாக 40 லட்சத்து 4 ஆயிரம் பணியிடங்கள் இருப்பதாக ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இதில், 31 லட்சத்து 32 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த வழியில் பார்த்தால், 8.72 லட்சம் பேரை தேர்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

டிஜிட்டல் இந்தியா

சுயசார்பை எட்டுவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள உறுதிப்பாட்டின் அடையாளம்

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திலிருந்து வெளிப்படைத்தன்மைக்கான இந்தியா என்ற மாற்றத்தில் சக்திவாய்ந்த தொழில்நுட்ப தீர்வாக டிஜிட்டல் இந்தியா அமைந்துள்ளது. 21-ம் நூற்றாண்டுக்கான உறுதிப்பாடு, சுயசார்பு மற்றும் மேம்பாட்டின் அடையாளமாக இது மாறியுள்ளது. சர்வதேச நெருக்கடிக்கு மத்தியில் ரொக்கமற்ற மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம், மக்களை மேம்படுத்துவதில் முன்னோடியாக இருந்த பிரதமர் நரேந்திர மோடியை விட டிஜிட்டல் சக்தியை சிறப்பாக அறிந்து கொள்பவர் யாராக இருக்க முடியும். இதன் காரணமாகவே, டிஜிட்டல் இந்தியா திட்டத்தை ஜூலை 1, 2015-ல் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அரசு மற்றும் மக்கள், அரசு அமைப்பு மற்றும் வசதிகள், பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் ஆகியவற்றுக்கு இடையேயான பாலமாக அமைந்து சாதாரண குடிமக்களை டிஜிட்டல் இந்தியா மேம்படுத்துகிறது.

> டிஜிட்டல் இந்தியா என்பது நேரம், வேலை மற்றும் பணத்தை சேமிக்கும் வழியாக உள்ளது. டிஜிட்டல் இந்தியா என்றால் அதிவேகமான வருவாய் மற்றும் முழு வருவாய் என்பதே அர்த்தம். டிஜிட்டல் இந்தியா என்றால், குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுமை. டிஜிட்டல் இந்தியாவுக்கான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான பணிகள் மற்றும் வேகத்தை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
>
> - **நரேந்திர மோடி, பிரதமர்.**

உத்தரப்பிரதேச மாநிலம், ஷாஜஹான்பூரில் பொது சேவை மையத்தை நடத்திவரும் குர்தீப் சிங், தனக்கு வேறு எந்த வருவாய் ஆதாரமும் இல்லாத நிலையில், இந்தப் பணியைத் தொடங்கினார். தற்போது 20 பேருக்கு வேலை அளித்து வருகிறார். லடாக் பகுதியைச் சேர்ந்த ஜோண்ட்ரோ எம்.சங்மா, ஓய்வூதியத்துக்காக ஆயுட்கால சான்றிதழை வங்கியில் சமர்ப்பிக்க ஆண்டுக்கு ஒரு முறை தனது வீட்டிலிருந்து இரண்டு முதல் மூன்று கிலோமீட்டர் பயணம் மேற்கொண்டுவந்தார். தற்போது இது எளிதாக மாறியுள்ளது. இதுதொடர்பாக கூறிய அவர், "உமாங் செயலியை பதிவிறக்கம் செய்து, தற்போது வீட்டிலிருந்தபடியே ஆயுட்கால சான்றிதழை சமர்ப்பிக்க முடிகிறது," என்றார். உமாங் செயலியை பதிவிறக்கம் செய்து, ஒப்புதல் அளிக்கப்பட்ட பயோமெட்ரிக் உபகரணங்களை வாங்குமாறு ஒவ்வொருவருக்கும் சங்மா அறிவுரை வழங்குகிறார்.

இதேபோல, பீகாரைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பத் துறை பணியாளரான சந்தன்குமார், விபத்துக்குள்ளான காருக்கான காப்பீட்டை டிஜிலாக்கரில் வைத்திருந்த பதிவு சான்றிதழ் அடிப்படையில் பெற்றுள்ளார். 2016-ம் ஆண்டில் கார் வாங்குவதற்காக வங்கியிலிருந்து அவர் பணம் பெற்றார். வங்கிக்கடனை அவர் திருப்பிச் செலுத்தினார். ஊரடங்கு காரணமாக, வங்கி அதிகாரிகளின் கடிதம் குர்கான்வ்வில் உள்ள அவரது வாடகை வீட்டுக்கு வந்து சேரவில்லை. 2021-ம் ஆண்டில் கார் விபத்துக்குள்ளானபோது, காப்பீடு கோரி விண்ணப்பிப்பதற்கு டிஜிலாக்கரில் வைத்திருந்த பதிவுச் சான்றிதழை பயன்படுத்தினார். இதனை காப்பீட்டு நிறுவனமும் ஏற்றுக் கொண்டது.

பிரதமர் நரேந்திர மோடியால், ஜூலை 1, 2015-ல் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா இயக்கம் மூலம், மக்களின் வாழ்க்கை எவ்வளவு எளிதாக மாறியது என்பதற்கு மேற்கண்டவை எல்லாம் சிறு சிறு உதாரணங்களாக உள்ளன. குறைந்தபட்ச அரசு - அதிகபட்ச ஆளுமை மூலம், நாட்டில் தொழில் செய்வதை எளிதாக்குவது மற்றும் எளிதாக வாழ்வதற்கான முறை ஆகியவை தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. வெளிப்படைத் தன்மை வந்துள்ளதுடன், ஊழலை முடிவுக்கு கொண்டு வர டிஜிட்டல் இந்தியா முயற்சி மேற்கொண்டு வருகிறது. சக்திவாய்ந்த இந்தியாவுக்கான ஆயுதமாக டிஜிட்டல் இந்தியா திகழ்கிறது.

நாட்டில் அமைதியான புரட்சியை டிஜிட்டல் இந்தியா ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி நம்புகிறார். டிஜிட்டல்

கீழ்க்காணும் தரவுகள் மூலம் டிஜிட்டல் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர முடியும்

நேரடி பண பரிமாற்றம்:

2014-15-ம் நிதியாண்டு முதல் ஜூன் 2, 2022 வரையான காலத்தில் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் சுமார் 2.27 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு நேரடியாக பணப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பணத்தை இழக்கச் செய்யும் ஊழலுக்கு மக்கள் நிதி - ஆதார்- மொபைல் என்ற மும்முனை இணைப்பு முடிவுகட்டியுள்ளது.

- நாடு முழுவதும் உள்ள 132 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டுள்ளது.
- அரசு மின்னணு சந்தையில் ரூ.25.52 லட்சம் கோடி அளவுக்கான பொருட்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 40 லட்சத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்களை இந்த வலைதளம் இணைத்துள்ளது.
- 9.23 கோடிக்கும் மேலான பயன்பாட்டாளர்களை டிஜிலாக்கர் கொண்டுள்ளது. இது 510 கோடி ஆவணங்களை பரிமாற்றம் செய்துள்ளது.
- பாரத்நெட் திட்டத்தின் ஓர் அங்கமாக, நாடு முழுவதும் உள்ள 1.77 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள்கள் மற்றும் அது தொடர்பான உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- 2014-ம் ஆண்டு முதல், மின்னணு-ஜீவன் ப்ரமான் மூலம் சுமார் 5.70 கோடி சான்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- மின்னணு-தேசிய வேளாண் சந்தையில் 1.73 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பதிவுசெய்துள்ளனர். நாட்டில் ஒரே சந்தையை ஏற்படுத்தும் நோக்கில், இது கொண்டுவரப்பட்டது.
- நாடு முழுவதும் 45.55 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் நிதி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.
- 4.94 லட்சம் பொது சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், வேலைவாய்ப்பு மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றன.
- இந்தியா அஞ்சல் பணம் செலுத்தும் வங்கி மூலம், "உங்கள் வீட்டிலேயே வங்கி சேவை" திட்டத்தின்கீழ், 1.02 லட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் பணம் செலுத்தும் வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- தேசிய ஊக்கத்தொகை வலைதளம் மூலம், 8.39 கோடி விண்ணப்பங்களுக்கு சான்றளிக்கப்பட்டுள்ளது.
- உமாங் மொபைல் செயலியில் 279 மத்திய மற்றும் மாநில அரசு துறைகளைச் சேர்ந்த 20,527 சேவைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதேபோல, 33 அரசு அமைப்புகளைச் சேர்ந்த 1,417 சேவைகளும் இடம்பெற்றுள்ளன.
- ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் கையெழுத்துகளுக்கு மின்னணு-கையெழுத்து சேவை மூலம் உறுதியளிக்கப்படுகிறது. பிப்ரவரி 2022 வரை, சுமார் 29 கோடி மின்னணு-கையெழுத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் வழிமுறை

இந்த டிஜிட்டல் பணம் செலுத்தும் தளத்தில், ஒரே மொபைல் செயலி மூலம், பல்வேறு வங்கிகளில் உள்ள கணக்குகளை இணைக்க முடியும். பிப்ரவரி 2022 வரை, யூபிஐ சேவையில் 229 வங்கிகள் சேர்ந்துள்ளன.

கைபேசி உபகரணங்கள் உற்பத்தி:

உலகின் இரண்டாவது மிகப்பெரும் கைபேசி உற்பத்தியாளராக இந்தியா தற்போது திகழ்கிறது. 2014-ம் ஆண்டில், கைபேசி மற்றும் உதிரிபாகங்கள் உற்பத்தியில் இரண்டு ஆலைகள் மட்டுமே ஈடுபட்டன. 2021-ம் ஆண்டில் இது 200-ஆக அதிகரித்துள்ளது.

ரூபே பணம் செலுத்தும் வழிமுறை:

இந்தியாவின் முதலாவது உலகளாவிய பணம் செலுத்தும் தளமாக ரூபே பணம் செலுத்தும் வழிமுறை திகழ்கிறது. 70 கோடி இந்தியர்கள் ரூபே அட்டைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். எளிதான முறையில் பயன்படுத்தும் வகையிலான ரூபே பணம் செலுத்தும் வழிமுறையை சிங்கப்பூர், யூஏஇ, பூடான், நேபாளம் ஆகிய நாடுகளும் பின்பற்றி வருகின்றன.

இலக்கு அடிப்படையிலான மின்னணு-மாவட்டங்கள் திட்டம்

நாடு முழுவதும் 709 மாவட்டங்களில் 3,916 மின்னணு-மாவட்ட சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் இந்தியா திட்டத்தை செயல்படுத்த முடிவு

டிஜிட்டல் ரூபாய் எனப்படும் மத்திய வங்கியின் டிஜிட்டல் ரூபாயை வெளியிட உள்ளதாக நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. நாம் தற்போது பயன்படுத்தும் ரூபாய் நோட்டுகளுக்கு மாற்றான டிஜிட்டல் ரூபாயை இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்தி, கண்காணிக்கும்.

மின்னணு பாஸ்போர்ட் சேவை நடப்பு நிதியாண்டில் நாட்டு மக்களுக்கு மின்னணு பாஸ்போர்ட்கள் கிடைக்கும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மின்னணு பாஸ்போர்ட்களுக்கான சிப்-களை வாங்குவதற்கான பணிகளையும் தொடங்கியுள்ளது. இதில், அலை அடிப்படையிலான அடையாள (IFI) சிப்கள் பதிக்கப்பட்டிருக்கும். மேலும், பின்பக்கத்தில் உள்முகமாக ஆன்டெனா பதிக்கப்பட்டிருக்கும்.

இந்த ஆண்டில் 5ஜி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும் ஐந்தாம் தலைமுறை (5ஜி) அப்ளிகேஷன்களை பரிசோதித்துப் பார்ப்பதற்காக ரூ.224 கோடியில் உள்நாட்டிலேயே 5ஜி பரிசோதனை தளம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 5ஜி அலைவரிசை ஏலத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 2022-ம் ஆண்டில் படிப்படியாக 5ஜி நெட்வொர்க்கை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சூப்பர் கணினிகளுக்கான சக்திவாய்ந்த நடவடிக்கைகள்

ஒவ்வொரு நாட்டின் வெற்றிக்கும் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அடிப்படையில் முக்கியமானதாக அதிவேக கணினிகள் திகழ்கின்றன. இதன் காரணமாகவே, தேசிய அதிவேக கணிப்பொறி பயன்பாட்டு இயக்கத்தின் ஓர் அங்கமாக, 2022-ம் ஆண்டு இறுதிக்குள் 74 கல்வி நிறுவனங்களில் உயர்தர கணிப்பொறி பயன்பாட்டு வசதிகளை கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய அதிவேக கணிப்பொறி பயன்பாட்டுத் திட்டத்தின்கீழ், அனைத்தையும் உள்ளடக்கிய செயற்கை புலனறிவு அதிவேக கணிப்பொறியை உருவாக்குவதற்காக அதிநவீன கணிப்பொறி பயன்பாட்டு மேம்பாட்டு மையமும், மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் இணைந்து செயல்படுகின்றன. 2015-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த கணிப்பொறி, நாட்டின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் அதிவேக கணிப்பொறியாக உள்ளது. இது உலகின் முதல் 500 அதிவேக கணிப்பொறிகளின் பட்டியலில் 63-வது இடத்தில் உள்ளது.

இந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் டிஜிட்டல் தொழில்நுட்பத் திறன் குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்படும். உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரத்தில் இதன் பங்களிப்பு அதிகரிக்கும். தனக்கு சொந்தமான 5ஜி தொழில்நுட்பத்தை இந்தியா உருவாக்கி வரும் நிலையில், 5ஜி தொழில்நுட்பம் மூலம் உலகில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏற்படும். நாட்டை புதிய உச்சத்துக்கு கொண்டுசெல்ல அரசுடன் இணைந்து பணியாற்றும் இந்திய இளைஞர்களை மேம்படுத்துவதில் டிஜிட்டல் மேம்பாடு முக்கியமானது. இந்த 10 ஆண்டுகளை இந்தியாவின் தொழில்நுட்ப ஆண்டுகளாக மாற்றுவதற்கு டிஜிட்டல் இந்தியா இயக்கம் உதவிவருகிறது.

பரிவர்த்தனைகள் மூலம், விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. டிஜிட்டல் மூலம் மேம்படுத்தப்பட்ட இளைஞர்களால், இந்த 10 ஆண்டுகளில் தொழில்நுட்ப மேம்பாடு அடைந்த நாடாக இந்தியா மாறும். டிஜிட்டல் இந்தியா மீது ஏழைகள் ஆர்வம் காட்டவில்லை என்று முன்னதாக பலரும் தெரிவித்துவந்தனர். தற்போது, குறைந்த விலையில் கிடைக்கும் தரவுகள், டிஜிட்டல் இந்தியாவின் சக்தியை வெளிப்படுத்துகின்றன.

“75-வது சுதந்திர ஆண்டில் புதிய இந்தியாவுக்கான உத்தி” என்ற பெயரிலான நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கையில், இந்தியாவில் டிஜிட்டல் பயன்பாட்டில் உள்ள வேறுபாடுகளை 2022-23-ம் ஆண்டுக்குள் சரிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை கருத்தில்கொண்டு, டிஜிட்டல் கற்றலுக்கு 2014-ம் ஆண்டு முதல் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தேசிய டிஜிட்டல் கற்றல் இயக்கம், டிஜிட்டல் சக்சார்த்தா இயக்கம் ஆகிய இரண்டு திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. மார்ச் 31, 2022 வரை, 53.67 லட்சம் பயனாளிகளுக்கு சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள 6 கோடி வீடுகளுக்கும், வீட்டுக்கு ஒருவருக்கு டிஜிட்டல் கற்றலை கொண்டுவரும் வகையில், பிரதமரின் கிராமப்புற டிஜிட்டல் சக்சார்த்தா இயக்கத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், 5.78 கோடி பேர் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 4.90 கோடி பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021 என்று அழைக்கப்படும், தகவல் தொழில்நுட்ப (இடைநிலை விதிமுறைகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களுக்கான நடத்தை விதிகள்) விதிகள் 2021-ஐ பிப்ரவரி 25, 2021-ல் மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. இணையதளம் மற்றும் டிஜிட்டல் பயன்பாட்டாளர்களுக்கு வெளிப்படையான, பாதுகாப்பான, நம்பகத்தன்மை வாய்ந்த இணையதளம் வழங்குவதை உறுதிப்படுத்துவதே இந்த விதிகளின் நோக்கம். ■



ஒரு நாடு ஒரே வரி

சர்வதேச நெருக்கடி மற்றும் பரவலாக்கலுக்கு மத்தியில், சர்வதேச அரங்கில் இந்தியா இன்று முக்கிய பங்கு வகிக்கிறது. 2014-ம் ஆண்டுக்குப் பிறகு தொடங்கப்பட்ட சீர்திருத்தங்களே இதற்கு காரணம். சட்டங்கள் மற்றும் இணக்க நடைமுறைகளின் தொகுப்புகளை நீக்கியதன் மூலம், அனைத்து தடைகளும் நீக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற ஒரு சீர்திருத்தம் தான் சரக்கு மற்றும் சேவை வரி (சரக்கு மற்றும் சேவைகள் வரி). இதற்கு முதலில் கனவுகண்டவர் அடல் பிகாரி வாஜ்பாய். எனினும், 17 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜூலை 1, 2017-ல்தான் இது நனவானது. நூற்றுக்கணக்கான வரி வரம்புகளை நீக்கியதோடு மட்டுமல்லாமல், சாதாரண மக்கள் மற்றும் வர்த்தகர்களின் வாழ்க்கையில் புதிய சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

நாட்டின் வளர்ச்சியில் புதிய நிலை அல்லது இடத்தை அடைவதற்கு நாம் முயற்சி மேற்கொண்ட காலங்களும் உண்டு. ஜூன் 30 மற்றும் ஜூலை 1-க்கு இடைப்பட்ட இரவில் 17 ஆண்டு பயணத்தை நிறைவுசெய்து தலைசிறந்த கூட்டாட்சி முறையை நாடு வெளிப்படுத்தியது. ஒட்டுமொத்த தேசத்துக்கும் பாதையை வழங்கியதுடன், பொருளாதாரத்துக்கு புதிய கோணத்தை சேர்த்து பொருளாதாரப் புரட்சியாக சரக்கு மற்றும் சேவை வரி மாறியுள்ளது. காஷ்மீர் முதல் போர்ட்பிளேர் வரை, குஜராத் முதல் அருணாச்சலப்பிரதேசம் வரை, நாட்டில் 500 வகையான வரிகளை நீக்கி, ஒரு தேசம், ஒரே வரி என்ற கனவை நனவாக்குவதற்கு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது.

விலை வேறுபாடுகள் காரணமாக, ஒரே பொருளுக்கு பல்வேறு மாநிலங்களும் பல்வேறு வரி விகிதங்களைப் பின்பற்றுகின்றன. இதன் பலனாக, மாநிலத்தின் எல்லைப் பகுதியைச் சேர்ந்த மக்கள், குறைந்த வரி விகிதம் கொண்ட அண்டை மாநிலங்களிலிருந்து அதிக அளவிலான பொருட்களை வாங்குகின்றனர். இதற்கும் மேலாக, பல்வேறு வகையான வரிகள் மற்றும் விண்ணப்பங்கள் மூலம், வர்த்தகர்கள் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். இந்த நெருக்கடியிலிருந்து மக்களை மீட்பதற்காக சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டது. இந்த மைல்கல் நடவடிக்கை 5 ஆண்டு நிறைவை கண்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டது முதலே, குறிப்பிடத்தக்க அளவுக்கு சூழ்நிலை மாறியது. 17 வகையான வரிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. ஒரே சந்தையாக இந்தியா இணைக்கப்பட்டது. மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து தடைகள் நீக்கப்பட்டன. நுழைவு வரி நீக்கப்பட்டதன் மூலம், நகரங்களுக்குள் நுழைவது எளிதானதாக மாறியது.

“பொழுதுபோக்கு” என்ற பெயரில் பல்வேறு மாநிலங்களும் 35% முதல் 110% வரை வரிகளை விதித்தன. இது குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்கப்பட்டது. முன்னதாக, 235 வகையான பொருட்களுக்கு 31% அல்லது அதற்கும் மேலாக வரிவிதிக்கப்பட்டது. அனைத்துப் பொருட்களுக்கும் வரி குறைக்கப்பட்டது. குறிப்பாக, 10 வகையான பொருட்களுக்கு உடனடியாக 28%-ஆக குறைக்கப்பட்டது. இது மேலும் குறைக்கப்பட்டு 18%-ஆக நிர்ணயிக்கப்பட்டது. எந்தவொரு பொருளின் விலையும் உயராமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட காலத்துக்கு பல்வேறு வகையான வரி வரம்புகள் உருவாக்கப்பட்டன. இது விலைஉயர்வைக் கட்டுப்படுத்தியது. பொது பயன்பாட்டுக்கான பொருட்களின் வரி அளவு பூஜ்யம் அல்லது 5% அளவுக்கு கொண்டுவரப்பட்டது. கணக்கு தாக்கல் மற்றும் மதிப்பீடுகள் ஆன்லைன் முறையிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆய்வாளர்களின் தலையீடுகள் நீக்கப்பட்டன. உள்ளீட்டு வரி வரவு முறை மூலம், ஒரே பொருளுக்கு செலுத்திய வரியை வரவு வைத்து, கணக்குத் தாக்கலின்போது சரிசெய்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.

ஒரே மாதிரியான வரி அமைப்புக்கு இந்தியா-வை ஒருங்கிணக்கும் நடவடிக்கையாக சரக்கு மற்றும் சேவை வரி அமைந்தது. இதன் பலனாக, வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்து, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் புதிய கோணம ஏற்பட்டது. இதன்மூலம், பெரியவர்கள், சிறியவர்கள் என அனைத்து வகையான தொழிலதிபர்களும் எளிதாக தொழில் செய்து வருகின்றனர். ஒரே வரி அமைப்பு மூலம், கணக்கு தாக்கல் என்பது எளிதானதாகவும், சுலபமானதாகவும் மாறியது. சரக்கு மற்றும் சேவை வரி முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், இந்தியாவில் வரி அமைப்பு எளிதானதாக மாறி, தொழிலதிபர்களுக்கு நம்பிக்கை அதிகரித்தது. 75-வது ஆண்டு சுதந்திரத்தை இந்த ஆண்டு நிறைவு செய்யும் நிலையிலும், 2025-ம் ஆண்டில் 5 லட்சம் டாலர் கொண்ட பொருளாதாரமாக மாற்றும் நமது இலக்கை நிறைவேற்றுவதிலும் இந்தியாவின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக சரக்கு மற்றும் சேவை வரி இருக்கும்.

விண்ணப்பங்களை நிரப்ப வேண்டிய நிலைக்கு முற்றுப்புள்ளி

ஜிஎஸ்டி என்பதன் பொருள் சரக்கு மற்றும் சேவைகள் வரி. ஜூலை 1, 2017-ல் சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்தியபோது, இதனை சிறப்பான மற்றும் எளிதான வரி என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

சரக்கு மற்றும் சேவை வரி வகைகள்	சரக்கு மற்றும் சேவை வரிக்கு முன்பு (வாட்)	சரக்கு மற்றும் சேவை வரிக்குப் பின்பு
ஒப்பந்தம்	317	0
ரசீது	12	1
அறிவிப்புகள்	32	0
விண்ணப்பம்	122	11
போக்குவரத்துக்கான விண்ணப்பம்	2	0
பணி அட்டவணை	4	0
ரசீது முறை	5	0
பதிவு	1	0
ஒட்டுமொத்தம்	495	12

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் அதிகரித்ததற்கு இணையாக சரக்கு மற்றும் சேவை வரி கணக்கு தாக்கலின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கள்ளச் சந்தை மற்றும் பொருட்கள் கடத்தலுக்கான வாய்ப்புகள் அகற்றப்பட்டன. ஒவ்வொரு பொருளுக்கும் தற்போது நாடு முழுவதும் ஒரே விலை நிர்ணயிக்கப்படுகிறது.

நுகர்வோருக்கு பலன்

ஓர் ஆய்வறிக்கையின்படி, சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டபிறகு, சாதாரண குடிமக்களின் மாதாந்திர செலவு 4 சதவீதம் வரை குறைந்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி வகைகள்	சரக்கு மற்றும் சேவை வரிக்கு முன்பு (வாட்)	சரக்கு மற்றும் சேவை வரிக்குப் பின்பு
பால் பவுடர்	6%	5%
தேநீர்	6%	0
கோதுமை	2.5%	0
மாவு	3.5%	0
சூரியகாந்தி எண்ணெய்	6%	5%
சர்க்கரை	6%	5%

இதுவரை இல்லாத வகையில் வரிவசூல்



4 விதமான சரக்கு மற்றும் சேவை வரி முறை அமல்

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST)
ஒரே மாநிலத்தில் உள்ள இரண்டு பேருக்கு இடையே பரிவர்த்தனை நடைபெற்றால், மத்திய அரசின் பங்களிப்பாக மத்திய சரக்கு மற்றும் சேவை வரி செலுத்த வேண்டும்.

மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST)
ஒரே மாநிலத்தில் இருவருக்கு இடையே பரிவர்த்தனை நடைபெறும் போது, மாநில அரசின் பங்காக மாநில சரக்கு மற்றும் சேவை வரியை செலுத்த வேண்டும்.

யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UTGST/UGST)
யூனியன் பிரதேசத்தில் உள்ள இரண்டு வர்த்தகர்களுக்கு இடையே பரிவர்த்தனை நடைபெற்றால், யூனியன் பிரதேசத்துக்காக யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரியை செலுத்த வேண்டும்.

ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST)
இரண்டு வேறுபட்ட மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகர்களுக்கு இடையே பரிவர்த்தனை நடைபெற்றால், மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பை ஒன்றாக இணைத்து ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியாக செலுத்த வேண்டும். இது மத்திய அரசுக்கு சென்று சேறும். மாநிலத்தின் பங்கை மத்திய அரசு வழங்கும். ■

மருத்துவர்கள் தினம் - ஜூலை 1

மனிதநேயத்தின் தேவதைகள்

இறைவனின் மிகப்பெரும் பரிசாக வாழ்க்கை அமைந்துள்ளது. நமது வாழ்க்கைக்கு ஆபத்து வரும்போதெல்லாம், நம்மை பாதுகாக்கும் பாதுகாவலர்களாக மருத்துவர்கள் மாறுகின்றனர். கொரோனா பெருந்தொற்று காலத்தில், நாம் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தோம். நெருக்கடியான அந்தத் தருணத்தில், நம்மை மருத்துவர்கள்தான் பாதுகாத்தனர். ஓர் அறிக்கையின்படி, பெருந்தொற்று காலத்தில் தொற்றிலிருந்து நம்மை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு 1,490 மருத்துவர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். தேசிய மருத்துவர்கள் தினம், ஜூலை 1-ல் கொண்டாடப்படுகிறது. மருத்துவர்களின் சுயநலமற்ற சேவைகள் மற்றும் விடாமுயற்சிக்கு நாம் மரியாதை செலுத்துவோம்

> நமது மருத்துவ சமூகத்தினர் மற்றும் நமது மருத்துவர்களின் மிகப்பெரும் முன்னோடியான பி.சி.ராயின் நினைவாக மருத்துவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக, கொரோனா காலத்தில் நாட்டு மக்களுக்கு நமது மருத்துவர்கள் சேவையாற்றிய விதம், சிறந்த உதாரணமாக திகழ்கிறது. நாட்டில் உள்ள 130 கோடி மக்களின் சார்பில், நாட்டில் உள்ள அனைத்து மருத்துவர்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
>
> - நரேந்திர மோடி, பிரதமர்.

ஜனவரி 29, 2020-ல் புனே-வில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வு நிறுவனத்தில் பிரியா ஆப்ரஹாம் தலைமையிலான குழுவினர், இந்தியாவில் மூன்று பேரின் மாதிரிகளை ஆய்வு செய்ததில், முதல்முறையாக கொரோனா வைரஸை கண்டறிந்தனர். இந்த மூன்று பேரும் வூகானிலிருந்து திரும்பி வந்தவர்கள். தொற்று உறுதிப்படுத்தப்பட்டதும், அவருக்கு பயம் தொற்றிக் கொண்டது. இந்த நோய்க்கு அப்போது சிகிச்சை முறை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பிரியா ஆப்ரஹாம் தலைமையிலான குழுவினர், இந்தியாவில் முதலாவது தொற்றை கண்டுபிடித்தபோது, புனே-வில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வு மையத்தில் மட்டுமே கொரோனா பரிசோதனைக்கான ஆய்வக வசதி இருந்தது. இந்த அறியப்படாத நோய் குறித்த அச்சம், படிப்படியாக, நாடு முழுமைக்கும் பரவியது. அதோடு,, இதுபோன்ற நெருக்கடியை எதிர்கொள்வதற்கான சுகாதார கட்டமைப்பை இந்தியா கொண்டிருக்கவில்லை. புதிய வைரஸை எவ்வாறு எதிர்கொள்வது என்பது அதுவரை யாருக்கும் தெரியாது. வைரஸானது பரவிக் கொண்டும் வந்தது. நமது மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் தீவிரமாக செயல்பட்டு, தீர்வுகளைக் கண்டறிந்து, வலுவான மருந்துகளை உருவாக்கினர். இதற்கு மத்தியில் கடும் ஊரடங்கு மற்றும் தயார்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மனிதஉயிர்களை காப்பாற்றுவதற்காக நமது மருத்துவர்கள் கூடுதல் நேரம் உழைக்கத் தொடங்கினர். இந்தியாவின் பெரும் மக்கள் தொகை என்பது, இந்த சவாலை மேலும் நெருக்கடிக்கு

இந்தியாவில் / 73 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் என்னாமுக்? தத்துத்தின் பொருள்

- முதல் டோசாக வழங்கப்பட்டது ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவாகவும், இரண்டாவது டோஸ் ஆப்பிரிக்காவின் மூன்றில் ஒரு பகுதியாகவும் இருக்கலாம்
- ஐரோப்பாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகை அளவுக்கு இரண்டு டோஸ்கள் செலுத்தப்பட்ட பிறகும், 50%-த்திற்கும் அதிகமாக முன்னெச்சரிக்கை டோஸ்கள் வழங்கப்பட்டன
- தென் மற்றும் வட அமெரிக்காவின் மக்கள்தொகைக்கு தடுப்பூசி செலுத்திய பிறகும் குறிப்பிடத்தக்க அளவு தடுப்பூசிகள் மீதமிருக்கும்.
- ஓஷியானியா முழுமையையும் (ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இதர நாடுகள்) விட, 20 மடங்கு இரண்டு டோஸ்கள் வழங்கப்பட்டன

நாட்டின் மக்கள் தொகையில் 89% பேர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொண்டுள்ளனர்

கொவிட் தடுப்பூசி திட்டத்தின்கீழ், ஜூன் 16 வரை நாட்டில் 195.67 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டன. அதேசமயம் இந்தியாவில் 18 வயதிற்கும் மேற்பட்டோரில் 89 சதவீதம் பேர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். இந்நிலையில் 12-க்கும் 14-க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களில் 75 சதவீதத்தினருக்கும் அதிகமானோருக்கு முதல் டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 12,213 புதிய தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில், ஜூன் 16 நிலவரப்படி இந்தியாவில் 58,2.15 பேர் தொற்றால் பாதித்திருந்தனர். இதுநாள் வரை தற்போதைய குணமடைந்தோர் விகிதம் 98.65 சதவீதமாக இருந்தது. வாராந்திர நோய்த்தொற்று 2.38 சதவீதமாக இருந்தது.

மருத்துவர்கள் தினம்: ஜூலை 1

இந்தியாவில் ஜூலை 1, தேசிய மருத்துவர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாட்டின் மகத்தான மருத்துவரும், மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சருமான டாக்டர் பிதான் சந்திர ராய் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. 1882 ஜூலை 1 அன்று பாட்னாவில் பிறந்த இவர், 1962-ன் இதேநாளில் 80-வது வயதில் காலமானார். பிதான் சந்திர ராய் நாட்டின் மகத்தான மருத்துவர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். மருந்துகள் துறையில் உலகளவில் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் இவர் வழங்கியிருக்கிறார். பிதான் சந்திர ராய் ஒரு மருத்துவர் என்பதைப் போலவே, சமூக சேவகர், போராளி, சுதந்திரப் போராட்ட வீரர், அரசியல்வாதியாகவும் இருந்தவர். மகாத்மா காந்தியிடம் ஏற்பட்ட ஈர்ப்பால் தீவிர அரசியலில் ஈடுபட்ட பிதான் சந்திர ராய், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக பங்குபெற்றார். இவரைப் பற்றி மிகவும் பெருமைக்குரிய விஷயமாக கூறப்படும் செய்தி, இவர் ஈட்டும் வருமானம் அனைத்தையும் நன்கொடையாக வழங்கிவிடுவார் என்பதுதான். 1961-ல் நாட்டின் உயரிய கௌரவமான பாரத ரத்னா விருது டாக்டர் பிதான் சந்திர ராய்க்கு வழங்கப்பட்டது. டாக்டர் பிதான் சந்திர ராயை கௌரவிக்கும் வகையில் 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1, தேசிய மருத்துவர்கள் தினமாக கொண்டாடப்படுகிறது.



உள்ளாக்கியது. இதுதவிர, கொரோனா காலத்தில் ஒரு லட்சம் மக்கள்தொகையில் நோய்த் தொற்றின் தாக்கத்தை, நாம் பார்த்தால், இறப்பு விகிதத்தை, வளர்ச்சியடைந்த, வளமான, பெரிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் நிலை ஒப்பிட்டளவில் நிலையானதாக உள்ளது. அகாலத்தில் ஒருவரின் வாழ்க்கை முடிவடைவது சோகமானது. ஆனால், லட்சக்கணக்கானோரின் வாழ்க்கையை கொரோனாவிலிருந்து இந்தியா பாதுகாத்துள்ளது. இதற்கான பெருமை நமது கடின உழைப்பு மருத்துவர்கள், நமது சுகாதாரப் பணியாளர்கள், நமது முன்களப் பணியாளர்களை சாரும்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான அறிவுறுத்தல்கள்

சமீபமாக இரண்டு வாரங்களில் நாடு முழுவதும் கொவிட் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், விழிப்புடன் இருக்குமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் எச்சரித்துள்ளார். சாத்தியமான அளவு விரைவாக நோய்த்தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், கண்டறியவும் நிர்வாக அளவில் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். ஜூன் 13 அன்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதார அமைச்சர்களுடன் காணொலி மூலமான மாநாட்டை சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா நடத்தினார். தொலைதூரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும், இதர நலிந்த பிரிவு சமூகத்தினருக்கும் சுகாதார கவனிப்பு எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்ய பிரதமர் நரேந்திர மோடி அரசின் "வீடு தேடிச் சென்று தடுப்பூசி 2.0 இயக்கத்தை" விரைவுபடுத்துமாறு இந்த விவாதத்தில் அமைச்சர்களை சுகாதாரத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார். ■

வேற்றுமையில் ஒற்றுமை என்ற மந்திரத்துடன் இந்தியா சுதந்திரம் அடைந்தது

வரலாற்றின் ஒரு காலகட்டத்தில், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியமும், அதன் மொழி, உணவு, உடை வடிவிலான பன்முகத் தன்மையும், பலவீனமாக கருதப்பட்டது. ஆனால், சுதந்திரத்திற்கான நமது தேடலில், பன்முகம் என்பது நமது பலம் என்பதை உலகுக்கு நாம் நிரூபித்தோம். சுதந்திரப் போராட்ட காலத்தில், அது குஜராத்தோ அல்லது வங்காளமோ, நாட்டின் வடக்கு பகுதியோ அல்லது தெற்கு பகுதியோ, 'ஒரே இந்தியா - உன்னத இந்தியா' என்ற நம்பிக்கையை அனைவரும் ஒன்றுபட்டு வெளிப்படுத்தினோம். இது சமூகத்தின் மனசாட்சியை எழுப்பியது. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பது விடுதலைப் போராட்ட வீரர்களின் மந்திரமாக மாறியது

"

நாம் தற்போது சுதந்திரத்தின் 75-வது ஆண்டுப் பெருவிழாவை கொண்டாடுகிறோம். நூற்றாண்டு கால அடிமைத்தனத்தில் நீண்ட விடுதலைப் போராட்டத்தில் நமது மாபெரும் பலமாக இருந்தது எது? விட்டுக் கொடுக்காத நமது பழக்கம் நமது பலமாக இருந்தது! நாட்டுக்காக, மனித குலத்திற்காக நமது சுயநலங்களுக்கு மேலாக உயர்ந்திருப்பது நமது வாழ்க்கையாகவும், சிந்தனையாகவும் இருந்தது நமது பலமாக இருந்தது. சுதந்திரத்தின் 75-வது ஆண்டுப் பெருவிழாவில் இந்த உணர்வுடன் நாம் முன்னோக்கி செல்கிறோம்.

-நரேந்திர மோடி, பிரதமர்

எ பரும் போராட்டம் மற்றும் தியாகத்திற்கு பிறகு நாம் சுதந்திரமடைந்தோம். சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், குடிமக்களுக்கு நாட்டின் கடந்த கால வரலாற்றை அறிய செய்யும் வகையிலும், அமிர்த பெருவிழா கொண்டாடப்படுகிறது. 75 வருடங்களுக்கு முன்பு அகிம்சை மூலம் ரத்தம் சிந்தாமல், சுதந்திரம் பெற முடியும் என்பதை இந்தியா உலக நாடுகளுக்கு உணர்த்தியது. அமிர்த பெருவிழாவின்கீழ் பிரதமர் நரேந்திர மோடியின் உத்தரவின் பேரில், நாடு முழுவதும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமிர்த பெருவிழாவின் வரிசையில், சுமந்த் மேத்தா, சுஷிலாசெயின் ட்ரேகன், அமரேந்திரநாத் சாட்டர்ஜி மற்றும் அலேக்பத்ரா உள்ளிட்ட சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்களின் கதையை படிக்கும் நேரமிது.

சுதந்திரப்போராட்டத்திற்காக லண்டனிலிருந்து திரும்பிய மருத்துவர்

பிறப்பு: 1 ஜூலை 1877, **இறப்பு:** 15, டிசம்பர் 1968.

சுமந்த் மேத்தா, அவருடைய மனைவியின் செய்கையால் ஈர்க்கப்பட்டு தமது வாழ்க்கையை, இந்திய சுதந்திரத்திற்காக அர்ப்பணித்தார். மருத்துவரான அவர், ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டார். அவர் தமது மருத்துவப்படிப்பை இங்கிலாந்தில் முடித்தார். படிப்பிற்காக இங்கிலாந்து செல்வதற்கு முன்பு அவர் திருமணம் செய்தார். அங்கிருந்து திரும்பிய பிறகு, பரோடா ராஜில் தலைமை மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அவர் இல்லாத போது, அவருடைய மனைவி ஷர்தா மேத்தா செய்திதாள்கள் மற்றும் புத்தகங்களுக்கு கட்டுரை எழுதினார். குழந்தைகளுக்கான இலக்கியத்தில் மொழிப்பெயர்ப்பு மற்றும் சிறு புத்தகங்களை எழுதினார். எனினும், ஷர்தா மேத்தா, திருப்தி அடையாததால், நாட்டுக்காக எதையேனும் செய்ய விரும்பினார். அவருடைய மனைவியின் அர்ப்பணிப்பை பார்த்த அவர், நாட்டின் சுதந்திரத்திற்காக பணியாற்ற வேண்டும் என்று உத்வேகம் அடைந்தார். அதன் பிறகு அவர், ஷர்தாவுடன் சென்று மகாத்மா காந்தியை சந்தித்தார். பின்னர் சுதந்திரப்போராட்டத்தில் நேரடியாக பங்கேற்றார். ஐரோப்பிய பயணத்தின் போது அவர், மேடம் காமா, ஷியாம்ஜி கிருஷ்ணா வர்மா மற்றும் வீரேந்திர நாத் சாட்டர்ஜி ஆகிய புரட்சியாளர்களை சந்தித்தார். ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் மத நூல்கள், அவர்களுடைய பணிகள் போன்றவையும் அவரை ஈர்த்தன. உண்மையில் சுமந்த் மேத்தாவின் மனைவி ஷர்தா மேத்தா சாதாரண பெண்மணியாக இருக்கவில்லை.

மனைவி, தாய், சகோதரி மற்றும் மகள் அத்துடன் சமூக சேவகராகவும், கல்வியாளராகவும், சிறந்த சுதந்திரப்போராட்ட வீரராகவும், அவர் ஆற்றிய பங்களிப்பு மகாத்மா காந்தியை கவர்ந்தது. எனவே, "அடுத்த பிறவியில் அவருடைய கருவில் தான் பிறக்க வேண்டும்" என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டார். 1928-ம் ஆண்டு பார்தோலி சத்தியகிரகத்தில் சுமந்த் மேத்தா தீவிரமாக பங்கேற்றார். இந்த சத்தியகிரக போராட்டத்தின் போது, சரபான் ஆசிரமத்தின் நிர்வாகத்தை நாள்தோறும் வெற்றிகரமாக நடத்தியது சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் மகாத்மா காந்தியை வெகுவாக ஈர்த்தது. அதன் பிறகு, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாக கலந்து கொண்ட அவர், பலமுறை சிறை சென்றார். ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்ட அவர், குஜராத் மாநிலம் ஜலால்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் பங்கேற்றதன் மூலம், சபர்மதி, விசாப்பூர் மற்றும் நாசிக் சிறைகளில் ஐந்தாண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தார்.

> **1928-ம் ஆண்டு நடைபெற்ற பார்தோலி சத்தியாகிரக போராட்டத்தில் சுமந்த் மேத்தா தீவிரமாக பங்கேற்றார்.**

சுற்றுச்சூழலில் ஆர்வலராகவும், இயற்கையை நேசிப்பவராகவும் இருந்த அவர், பாரம்பரிய மற்றும் ஆயுர்வேத சிகிச்சையை வலியுறுத்தினார்.

1936-ம் ஆண்டு கலோல் அருகே செர்தா கிராமத்தில் அவர் ஆசிரமம் ஒன்றை உருவாக்கினார். அதன் மூலம் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காகவும், வாழ்க்கை தர உயர்வுக்காகவும், வாழ்நாள் முழுவதும் பணியாற்றினார்.

சுதந்திரத்திற்கு பிறகு, அதிகாரங்களையும், பட்டங்களையும் பெறுவதை விட, ஷர்தாவும், அவரது கணவரும் மக்கள் நலனுக்காக, தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.

அலேக் பத்ரா 18 வயதிலிருந்து சுதந்திர போராட்டத்தில் பங்கேற்க தொடங்கினார்.

பிறப்பு: 1, ஜூலை 1923, இறப்பு: 17, நவம்பர், 1999

இந்திய சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்ற அலேக் பத்ரா, முக்கிய தலைவர்களின் ஒருவராக விளங்கினார். ஒடிசாவின் பல்வேறு பகுதிகளில் குடிமக்களுக்கான உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தில் குடிமக்கள் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தினார். ஒடிசா மாநிலம் பூரியில் 1923ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி பிறந்த அலேக் பத்ரா, குழந்தை பருவத்திலிருந்து தேசபக்தியுடன் திகழ்ந்தார். தமது 18வது வயதிலிருந்தே சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்க தொடங்கினார். சுதந்திரப்போராட்டத்தின் போது, அவரும் அவருடைய நண்பர்களும் நிமாபடா காவல் நிலையத்திற்கு தீ வைத்தனர்.

இந்த சம்பவத்தின் போது, காவல் துறையின் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் உயிரிழந்தார். சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்ட அலேக் பத்ரா பூரி சிறையில் அடைக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டார். ஆனால், உறுதியுடன் இருந்த அவர் தமது கொள்கையை கைவிடவில்லை. சிறையிலிருந்து விடுதலையான பிறகு, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக, தலைமறைவாக இருந்தபடியே, தொடர்ந்து போராடினார். பின்னர் கொல்கத்தா சென்றார். அங்கு அவர், ஒருவரிடம் வீட்டு பணியாளராக சேர்ந்தார். ஆனால், தமது தலைமறைவு நடவடிக்கைகளை நிறுத்தவில்லை.

ஆச்சாரிய ஹரிகர் மற்றும் கோபந்த் தாஸ் ஆகியோருடன் இணைந்து வெளிப்படையாக சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்க விரும்பியதால், நீண்ட நாட்கள் அவரால் கொல்கத்தாவில் தங்க இயலவில்லை. அதேநேரத்தில், அவருடைய மற்ற சுதந்திரப் போராட்ட நண்பர்களும் தலைமறைவு வாழ்க்கையை கைவிட்டு, பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக சுதந்திரப்போராட்டத்தில் நேரடியாக அவர் பங்கேற்க விரும்பினார்கள். எனவே அவர், கொல்கத்தாவிலிருந்து பூரிக்கு திரும்பி வர முடிவு செய்தார். கொல்கத்தாவிலிருந்து அவர் பூரி திரும்பியபோது, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்துபோது, மகாத்மா காந்தியின் அறிவுரைகளை பின்பற்றி, தாமே நூல் நூற்று கதராடை அணிந்தார். அத்துடன், கழிப்பறையையும் சுத்தம் செய்தார். சிறையிலிருந்து விடுதலையான பிறகு, ஸ்வராஜ், உள்துறை நிர்வாகம் உள்ளிட்டவற்றில் பயிற்சி எடுக்க அவர் வார்தா சென்றார்.

ஒடிசா திரும்பிய பிறகு அங்கிருந்து சமூக சீர்திருத்த பணிகளை தொடங்கினார். இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, மத்திய, மாநில அரசுகள் அவருக்கு பல்வேறு விருதுகளை வழங்கின. இந்தியா சுதந்திரத்திற்கு பிறகும், மக்கள் நலனுக்காக அவர் தொடர்ந்து பணியாற்றி தீவிரமாக செயல்பட்டார். பின்னர் 1999-ம் ஆண்டு நவம்பர் 17ம் நாள் தமது 76-வது வயதில் காலமானார்.

நாட்டின் சுதந்திரத்திற்கு புரட்சிகர முறையை அமரேந்திர நாத் சாட்டர்ஜி கடைபிடித்தார்.

பிறப்பு: 1, ஜூலை, 1880. இறப்பு: 4, செப்டம்பர், 1957

யுகந்தர் குழுவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கருதப்பட்ட அமரேந்திர நாத் சாட்டர்ஜி புகழ்பெற்ற புரட்சியாளர். அந்த அமைப்பை நடத்துவதற்காக நிதி திரட்டினார். அவருடைய புரட்சிகரமான நடவடிக்கைகளை முக்கியமாக பீகார், ஒரிசா மற்றும் ஒருங்கிணைந்த மாகாணங்களில் நடத்தினார். தாம் படிக்கும் காலத்தில் ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதற்காக புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற மனநிலையில் இருந்த மக்களை அவர் சந்தித்தார். அவர்களில் உபேந்திர நாத் பானர்ஜி மற்றும் ரிஷிகேஷ் கஞ்சிலால் முக்கியமானவர்களாவர். இந்திய சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்றவர்களில் முக்கியமானவரான அமரேந்திர நாத் சாட்டர்ஜி, புரட்சிகர வலிமை மூலம் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார். அதனால் அவர், யுகந்தர் குழுவில் சேர்ந்தார். இந்த அமைப்பு, பல்வேறு இடங்களில் இளைஞர்களை திரட்டி அவர்களை மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வலிமைப்படுத்தியது. அதோடு மட்டுமல்லாமல், ரகசியமாக குண்டுகளை தயாரித்தல், ஆயுதபயிற்சி அளித்தல், மோசமான ஆங்கிலேய அதிகாரிகளை கொல்லுதல் போன்ற நடவடிக்கைகளிலும் அந்த அமைப்பு ஈடுபட்டது.

இந்த அமைப்பின் தீவிர செயற்பாட்டாளர்கள், ஆங்கிலேயர்களின் முதுகெலும்பாகவும், நாட்டின் துரோகிகளாகவும் கருதிய இந்திய அதிகாரிகளையும் கொன்றனர். அமரேந்திர நாத் சாட்டர்ஜி, மேற்கு

ஆங்? [illegible]ர்[illegible]ளின் அடிமைத்[illegible]த்திலிருந்து* பு[illegible]ட்கி மூ[illegible]ம் இந்தி[illegible]ா[illegible]விடுவிக்[illegible] விரும்பி[illegible]அமர்நாத் [illegible]ாட்டர்ஜியின் பெ[illegible]ர் சுதந்தி[illegible]போ[illegible]ாட்ட வீர்[illegible]ளின் பட்டி[illegible]லில் இடம் பெற்ஏள்ளது.

வங்காளத்தின் ஹுக்ளி மாவட்டத்திலுள்ள உட்டர்படா என்ற இடத்தில், 1880-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி உபேந்திரநாத் சாட்டர்ஜியின் மகனாக பிறந்தார். அமர்நாத் சாட்டர்ஜி, ஆரம்பகாலத்தில், ஜிதேந்திரநாத் முகர்ஜியின் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக செயல்பட்டு வந்தார். பின்னர் அவர், 1707-ம் ஆண்டில் காலமான அரபிந்த கோஷை சந்தித்தார். தொடர்ந்து, இந்தியாவை ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அரபிந்த கோஷ், புரட்சியாளர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்ட, அமர்நாத் சாட்டர்ஜியை ஊக்குவித்தவர் என்று கூறப்படுகிறது. 1915-ம் ஆண்டு முதல் 5 வருடங்கள் வரை, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாறு வேடத்தில் பயணம் செய்து, தலைமறைவாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அப்போதைய ஆங்கிலேய அரசு, அமரேந்திர நாத் சாட்டர்ஜி தலைக்கு ரூ.10 ஆயிரம் வெகுமதியும் அறிவித்திருந்தது. அதுமட்டுமின்றி, அமரேந்திர நாத் சாட்டர்ஜியின் தூரத்து உறவுக்காரரும், வங்காளத்தின் முதல் அரசியல் பெண் கைதியான நானிபாலா தேவி, அமரேந்திர நாத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, விடுதலை போராட்ட செயல்பாடுகளில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். சந்தன் நகர் என்ற இடத்தில் வீடு எடுத்து தங்கிய அவர், யுகந்தர் குழுவைச் சேர்ந்த ஜாது கோபால் முகர்ஜி, ஷிவ் பூஷன் தத் போன்ற மற்ற புரட்சியாளர்களுக்கும் வீட்டில் தங்க அனுமதி அளித்தார். 1923-ம் ஆண்டில் ஒருசில நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அமரேந்திர நாத் சாட்டர்ஜி, தனது செயல்பாடுகளை வேறு வழிகளில் தீவிரப்படுத்தினார். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும், தீவிரமாக செயல்பட்டு வந்த அமரேந்திர நாத் சாட்டர்ஜி, 1957-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் தேதி, தனது 77-வது வயதில் காலமானார். அவரது சொந்த ஊரான உத்தரபதாவின் முக்கிய சாலையில் அமரேந்திர நாத் சாட்டர்ஜிக்கு சிலை நிறுவப்பட்டுள்ளது.

சுஷீலா செயின் ட்ரெஹான் தனது இறுதி மூச்சு வரை நாட்டுக்காக சேவை செய்தார்

பிறப்பு - 1 ஜூலை 1923, இறப்பு - 28 செப்டம்பர் 2011

சுஷீலா செயின் ட்ரெஹான் பிற பெண் போராளிகளுடன் சேர்ந்து நாட்டு விடுதலைக்காக தீவிரமாக போராடினார். நாட்டின் விடுதலைக்காக போராடிய அவர், காவல்துறையினரின் சித்ரவதைகளை மட்டும் அனுபவிக்கவில்லை. சுஷீலா செயின் ட்ரெஹான், பஞ்சாப்பில், பெண்கள் கல்வி கற்பதன் அவசியம் குறித்த பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில், 1923-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி, நான்கு உடன்பிறப்புகளில் இளையவராக பிறந்தார். சுஷீலா செயின் ட்ரெஹானின் தந்தை மதுரா தாஸ் ட்ரெஹான், ஒப்பந்த தொழில் செய்து வந்தார். பதன்கோட்டில் காங்கிரஸ் கட்சியை நிறுவியவர்களில் முக்கியமானவர்.

அதேசமயம், மதுரா தாஸ் ஆரிய சமாஜ் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராகவும் இருந்தார். சுஷீலா செயின் ட்ரெஹான், சிறுவயதிலிருந்து சுதந்திரப் போராட்டத்துக்கான காரணங்களில் ஒரு பற்றை வளர்த்துக் கொண்டார். சுஷீலா செயின் ட்ரெஹானின் தந்தை மர்மமான முறையில் இறந்தார். அந்த தருணதத்தில் ஒரு நூலை படித்த சுஷீலா செயின், இந்தியா சுதந்திரம் அடைவதில் மிகவும் ஆர்வமாக இருந்தார். பகத் சிங்கின் துணிச்சலான செயல்பாடுகளால் சுஷீலா செயின் ட்ரெஹான், ஈர்க்கபட்டிருந்தார். தனது 18-வது வயதில், ஷகுந்தலா ஆசாத் என்ற சுதந்திர போராட்ட வீரரை சந்தித்த சுஷீலா செயின், அவருடன் இணைந்து இந்திய விடுதலைக்காக போராடினார். சுஷீலா செயின் ட்ரெஹான், தலைமறைவாக இருந்து, சுதந்திர போராட்டத்துக்கான வியூகங்களை மேற்கொண்டார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட சுஷீலா செயின் ட்ரெஹான் மீது போலீசார் தடியடி தாக்குதல்களை நடத்தினாலும், அவர் மனஉறுதியுடன் போராட்டங்களில் ஈடுபட்டார். எந்தவிதமான இடையூறுகளும் அவரது மனஉறுதியை உடைக்க முடியவில்லை

சுஷீலா செயின் ட்ரெஹான் தொலைதூர கிராமங்களுக்கு சைக்கிளில் பயணம் சென்று, பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அங்கிருந்த பெண்களை சமைக்கவும், தைக்கவும், சுத்தமாக இருக்கவும் அறிவுறுத்தினார். அந்த காலகட்டத்தில், பெண்கள் சைக்கிள் ஓட்டுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால், சுஷீலா செயின் ட்ரெஹான் அதற்காக அஞ்சாமல், சைக்கிளில் பயணம் செய்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகும், குழந்தைகள் கல்வி குறித்து வலியுறுத்தி வந்த அவர், மூன்று பெண் குழந்தைகளுக்கான பள்ளியையும், இருபாலர் இணைந்து படிக்கும் ஒரு பள்ளிக்கூடத்தையும் திறந்து வைத்தார். காலனி ஆதிக்க சக்திகளிடமிருந்தும், பிற தீய சக்திகளிடமிருந்தும் நாடு விடுதலை பெற வேண்டும் என்பதை நன்றாக உணர்ந்திருந்த சுஷீலா செயின் ட்ரெஹான், 2011-ம் ஆண்டு செப்டம்பர் 28-ம் தேதி இறக்கும் வரை சமூகத்தின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து பாடுபட்டு வந்தார். ■

அம்மா

“ என் அன்னையின் வாழ்க்கையை காணும் போது அவரது தவ வாழ்க்கை, தியாகங்கள் மற்றும் இந்தியாவின் தாய்மை குணம் ஆகியவை குறித்து நான் உரைக்க இருக்கிறேன் ”

- பிரதமர் நரேந்திர மோடி

அம்மா என்று தலைப்பிட்டு வலைப்பக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி எழுதியுள்ள பதிவில் தனது தாயார் சந்தித்த போராட்டங்கள் அவரது குறிக்கோள்கள் நீர் சேமிப்பு முயற்சிகள், உயிரினங்கள் மற்றும் பறவைகள் மீதான அவரது அன்பு, தவறிழைக்க வேண்டாமென்று அவர் புகட்டிய பாடம், ஏழைகள் ஏற்றம் பெற உழைக்க வேண்டுமென்று அவர் கூறிய ஆலோசனைகள் மற்றும் தன்னைத் தானே ஆரோக்கியமாக்க வைத்துக்கொள்ளும் வழிவகைகள் ஆகியவற்றை அடிக்கோடிட்டு காட்டும் வகையில் எடுத்துரைத்துள்ளார். குறிக்கோள்களுடன் வாழும் அன்னை மற்றும் மகளிரின் வல்லமை பற்றி அவரே எழுதிய பதிவை படித்தறியுங்கள்...

அம்மா- அகராதியில் இதற்கு இணையான வேறு சொல்லைக் காண முடியாது. அன்பு, பொறுமை, நம்பிக்கை இதுபோன்ற எத்தனையோ விதமான முழுமையான உணர்வுகளை இது உள்ளடக்கியுள்ளது. உலகம் முழுவதும், நாடு அல்லது மதம் என எதுவாக இருந்தாலும் குழந்தைகளுக்கு அவர்களது அன்னையின் மீது தனிப்பாசம் இருக்கும். தாய் என்பவள் தனது குழந்தைகளை பெற்றெடுப்பதுடன் இல்லாமல் அவர்களது மனம், ஆளுமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வடிவமைக்கிறாள். அவ்வாறு செய்யும்போது, தாய்மார்கள் சுயநலம் தவிர்த்து தங்களது சொந்த தேவைகளையும், விருப்பங்களையும் தியாகம் செய்கிறார்கள்.

எனது தாயார் திருமதி ஹீராபாய் தனது நூறாவது வயதில் அடியெடுத்து வைப்பதை பகிர்ந்துகொள்ளும் நல்வாய்ப்பு எனக்கு கிட்டியுள்ளது பற்றி, இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக உணருகிறேன். இது அவரது நூற்றாண்டாக இருக்கப்போகிறது. எனது தந்தை உயிருடன் இருந்திருந்தால் அவரும் தனது நூறாவது பிறந்த நாளை சென்ற வாரம் கொண்டாடியிருப்பார். எனது அன்னையின் நூற்றாண்டு தொடங்குவதும் எனது தந்தையின் நூறாண்டு நிறைவடைவதும் இந்த 2022 என்பதால் இது ஒரு சிறப்பான ஆண்டாகும்.

கடந்த வாரம் எனது மருமகன் காந்தி நகரில் இருந்து அன்னையின் சில வீடியோக்களை பகிர்ந்திருந்தார். அந்தப் பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர். எனது தந்தையின் புகைப்படம் ஒரு நாற்காலியில் வைக்கப்பட்டிருந்தது. எனது அன்னை மஞ் ஜீராவை இசைத்து கொண்டு பஜனை பாடல்கள் பாடுவதில் ஆழ்ந்திருந்தார். வயது காரணமாக உடல் ரீதியாக தளர்வடைந்த போதிலும், மனதளவில் சுறுசுறுப்பாகவே இன்னும் உள்ளார்.

முன்பெல்லாம் எங்களது குடும்பத்தில் பிறந்த நாட்களை கொண்டாடும் வழக்கம் இருந்ததில்லை. இருந்தாலும் இளம் தலைமுறையைச் சேர்ந்த குழந்தைகள் எனது தந்தையின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் 100 மரக் கன்றுகளை நட்டனர்.

எனது வாழ்க்கையில் எல்லாம் நன்றாகவே இருந்திருக்கிறது என்பதில் எனக்கு சந்தேகமில்லை. எனது குணம் நன்றாக இருப்பதற்கு எனது பெற்றோரே காரணமாவர். இன்று நான் தில்லியில் இருந்தாலும், எனது கடந்த கால நினைவுகளில் நான் மூழ்கியிருக்கிறேன்.

எனது அன்னை அசாதாரணமான அளவுக்கு மிகவும் எளிமையானவர். அனைத்து அன்னையர்களை போல! எனது அன்னையை பற்றி நான் எழுதுகையில் உங்களில் பலர் எனது விளக்கத்தை அவருடன் நிச்சயம் பொருத்திப்பார்ப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இதைப் படிக்கும் போது நீங்கள் உங்கள் தாயின் தோற்றத்தை காண்பீர்கள்.

ஒரு தாயின் தவம் ஒரு நல்ல மனிதனை உருவாக்குகிறது. அவளுடைய பாசம் ஒரு குழந்தையை மனித மாண்புகள் மற்றும் கருணையால் நிரப்புகிறது. தாய் என்பவள் ஒரு தனி

> “என் அன்னையையும், கோடிக்கணக்கான அவரைப்போன்ற பெண்மணிகளின் வலிமையைக் காணும்போது, இந்திய சகோதரிகளாலும், புதல்விகளாலும் ஆகாதது என்று எதுவுமில்லை என்று உணரத்தோன்றுகிறது.”

நபரோ அல்லது ஆளுமையோ அல்ல, தாய்மை என்பது ஒரு பெருங்குணம். கடவுள்கள் தங்கள் பக்தர்களின் இயல்புக்கு ஏற்ப உருவாக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி கூறப்படுவது உண்டு. அதேபோல், நம் தாய்மார்களையும் அவர்களின் தாய்மையையும் நம் சொந்த இயல்பு மற்றும் மனநிலைக்கு ஏற்ப உணர்கிறோம்.

எனது தாயார் குஜராத்தில் உள்ள மெஹ்சானாவின் விஸ்நகரில் பிறந்தார். அது எனது சொந்த ஊரான வத் நகருக்கு மிக அருகில் உள்ளது. அவரது தாயின் பாசம்

அவருக்கு கிடைத்ததில்லை. இளம் வயதிலேயே, ஸ்பானிஷ் ஃப்ளூ தொற்றுநோயால் என் பாட்டியை அவர் இழந்தார். என் பாட்டியின் முகமோ, மடியின் சுகமோ கூட அவருக்கு நினைவில் இல்லை. அவர் தன் குழந்தைப் பருவம் முழுவதையும் தன் தாய் இல்லாமலேயே கழித்தார். நாம் அனைவரும் செய்வது போல, அவரால் தனது உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியாமல் இருந்தது. நம்மைப் போல அவரால் அம்மாவின் மடியில் இளைப்பாற முடியவில்லை. அவரால் பள்ளிக்குச் செல்லவோ, படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளவோ முடியவில்லை. அவருடைய குழந்தைப் பருவம் வறுமையும், பற்றாக்குறையும் நிறைந்ததாகவே இருந்தது.

இன்றைய காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, அம்மாவின் குழந்தைப் பருவம் மிகவும் கடினமாகவே இருந்தது. சர்வவல்லமையுள்ள இறைவன் அவருக்கு விதித்திருப்பது இதுதான் போலும். இது கடவுளின் விருப்பம் என்று அம்மாவும் நம்புகிறார். ஆனால், சிறுவயதிலேயே தாயை இழந்தது, தாயின் முகத்தைக்கூட பார்க்க முடியாதது அவருக்கு பெரும் வேதனையைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறது.

இந்தப் போராட்டங்களால் அம்மாவுக்கு குழந்தைப் பருவம் பெரிதாக வாய்க்கவில்லை. அவர் வயதைத் தாண்டி வளர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. குடும்பத்தில் மூத்த குழந்தையாக அவர் இருந்ததால் திருமணத்திற்குப் பிறகு மூத்த மருமகளாகிவிட்டார். அவரது இளம் வயதிலேயே, குடும்பம் முழுவதையும் கவனித்துக் கொள்வதோடு, எல்லா வேலைகளையும் செய்ய வேண்டிய நிலையில் அவர் இருந்தார். திருமணத்துக்குப் பின்னரும், அவர் இந்தப் பொறுப்புகளையெல்லாம் ஏற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். கடினமான பொறுப்புகள் மற்றும் அன்றாட போராட்டங்கள் இருந்தபோதிலும், அம்மா முழு குடும்பத்தையும் அமைதியாகவும், தைரியமாகவும் நடத்தினார்.

வத் நகரில், எங்கள் குடும்பம் ஒரு ஜன்னல் கூட இல்லாத சிறிய வீட்டில் வசித்தது. கழிவறை அல்லது குளியல் அறை என்பது எங்களுக்கு ஆடம்பரமான ஒன்றாகும். மண்சுவரும், ஓட்டுக் கூரையும் கொண்ட இந்த ஒரு அறை குடியிருப்பை நாங்கள் எங்கள் வீடு என்று அழைத்தோம். எனது பெற்றோர், என் உடன்பிறந்தவர்கள் மற்றும் நான் உள்பட அனைவரும் அதில் தான் தங்கியிருந்தோம்.

அம்மாவுக்கு உணவு சமைப்பதற்கு வசதியாக மூங்கில் குச்சிகள் மற்றும் மரப்பலகைகளால் ஆன ஒரு மேடையை என் தந்தை செய்திருந்தார். இந்த அமைப்பே எங்கள் சமையலறையாக இருந்தது. அம்மா சமைப்பதற்கு அந்த மேடை மீது ஏறுவது வழக்கம். குடும்பம் முழுவதும் அதில் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவோம்.

பொதுவாக, வறுமை மன அழுத்தத்திற்கு வழிவகுப்பதுண்டு. இருப்பினும், அன்றாடப் போராட்டங்கள் காரணமாக ஏற்படும் கவலைகள், குடும்பச்சூழலை மூழ்கடிக்க என் பெற்றோர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. எனது பெற்றோர் இருவரும் தங்கள் பொறுப்புகளை

> “ஒரு தாயின் தவம் ஒரு நல்ல மனிதனை உருவாக்குகிறது. அவளுடைய பாசம் ஒரு குழந்தையை மனித மாண்புகள் மற்றும் கருணையால் நிரப்புகிறது.”

கவனமாகப் பிரித்து நிறைவேற்றினர்.

கடிகாரம் ஓயாமல் சுழல்வது போல, அப்பாவும் அதிகாலை நான்கு மணிக்கே வேலைக்குப் போவார். அவருடைய காலடி சத்தம் கேட்டதும், தாமோதர் மாமா வேலைக்குப் புறப்படுகிறார், இப்போது மணி அதிகாலை 4 என்று அண்டை வீட்டார் சொல்வதுண்டு. தனது சிறிய தேநீர் கடையைத் திறப்பதற்கு முன்பு உள்ளூர் கோவிலில் பிரார்த்தனை செய்வதும் அவருடைய தினசரி சடங்காகும்.

அம்மாவும் அவருக்கு இணையாக நேரம் தவறாமையை சரியாக கடைபிடிப்பார். அவரும் என் தந்தையுடன் எழுந்து, காலையில் பல வேலைகளை முடிப்பார். தானியங்களை அரைப்பதிலிருந்து அரிசி, பருப்பு ஆகியவற்றை சலிப்பது வரை அவரே செய்வார். அம்மாவுக்கு உதவிக்கு யாருமில்லை. வேலை செய்யும் போது அவருக்குப் பிடித்தமான பஜனை பாடல்களையும் கீர்த்தனைகளையும் முணுமுணுப்பார். ‘ஜல்கமல் சாடி ஜானே பாலா, ஸ்வாமி அமரோ ஜக்ஸே’

> தாய் என்பவள் ஒரு தனி நபரோ அல்லது ஆளுமையோ அல்ல, தாய்மை என்பது ஒரு பெருங்குணம். அவர் நம்மிடமிருந்து எதையுமே எதிர்பார்ப்பதில்லை.

என்னும் நர்சி மேத்தாவின் பிரபலமான பஜனை பாடலை அவர் விரும்பினார். 'சிவாஜி நு ஹாலர்டு' என்ற தாலாட்டும் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

குழந்தைகளாகிய நாங்கள் படிப்பை விட்டுவிட்டு வீட்டு வேலைகளில் உதவவேண்டும் என்று அம்மா ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை. அவர் எங்களிடம் ஒரு உதவியையும் கேட்டதில்லை. இருப்பினும், அவர் மிகவும் கடினமாக வேலை செய்வதைப் பார்த்து, அவருக்கு உதவுவதை எங்கள் முதன்மையான கடமையாக நாங்கள் கருதினோம். உள்ளூர் குளத்தில் நீந்துவது எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால், வீட்டில் இருக்கும் அழுக்குத் துணிகளையெல்லாம் எடுத்து வந்து குளத்தில் துவைப்பேன். துணி துவைப்பதோடு, எனது விளையாட்டையும் இணைத்து செய்வதுண்டு.

அம்மா வீட்டுச் செலவுகளைச் சமாளிக்க ஒரு சில வீடுகளில் பாத்திரங்களைக் கழுவுவது வழக்கம். எங்களின் சொற்ப வருமானத்திற்கு துணையாக ராட்டையை சுற்றவும் அவர் நேரம் ஒதுக்குவார். பருத்தி உரிப்பது முதல் நூல் நூற்பது வரை அனைத்தையும் செய்வார். இந்த முதுகு வலிக்கும் வேலையிலும் கூட, பருத்தி முட்கள் எங்களைக் குத்திவிடக் கூடாது என்பதில்தான் அவருடைய முதன்மையான அக்கறை இருந்துவந்தது.

பிறரைச் சார்ந்திருப்பதையோ அல்லது தன் வேலையைச் செய்யும்படி பிறரைக் கேட்டுக் கொள்வதையோ அம்மா தவிர்த்து வந்தார். பருவமழை எங்கள் மண் வீட்டிற்கு பல பிரச்சனைகளை கொண்டு வரும். இருப்பினும், நாங்கள் குறைந்தபட்ச அசௌகரியத்தைக் கூட எதிர்கொள்வதை அம்மா சகித்துக் கொள்ள மாட்டார். ஜூன் மாத வெயிலில், எங்கள் மண் வீட்டின் கூரையின் மீது ஏறி, ஓடுகளை சரிசெய்வார். இருப்பினும், அவருடைய துணிச்சலான முயற்சிகளுக்கிடையிலும் எங்கள் வீடு மழையின் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு பழமையானதாக இருந்தது.

மழைக்காலங்களில், எங்கள் வீட்டின் கூரை ஒழுகி, வீடு வெள்ளக்காடாகிவிடும். மழைநீரை சேகரிக்க, ஒழுகல் உள்ள இடங்களின்கீழ், வாளிகளையும், பாத்திரங்களையும் அம்மா வைப்பார். இந்த மோசமான சூழலிலும், அமைதியின் சின்னமாக அம்மா இருப்பார். இந்தத் தண்ணீரை அடுத்த சில நாட்களுக்கு அவர் பயன்படுத்திக் கொள்வார் என்றால் அது உங்களுக்கு வியப்பாக இருக்கும். தண்ணீர் சேமிப்புக்கு இதைவிட வேறு சிறந்த உதாரணம் எதுவாக இருக்க முடியும்!

> ஒவ்வொரு கோடை காலத்திலும், பறவைகளுக்காக அவர் பாத்திரங்களில் தண்ணீர் வைப்பார். எங்கள் வீட்டை சுற்றித்திரியும் தெரு நாய்களும், பசியின்றி இருப்பதை அவர் உறுதி செய்வார்

வீட்டை அலங்கரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட அம்மா, வீட்டை சுத்தப்படுத்தி அழகுபடுத்துவதற்கு கணிசமான நேரத்தை ஒதுக்குவார். மாட்டுச்சாணம் கொண்டு தரையை அவர் மொழுகுவார். மாட்டுச்சாணத்தால் தயாரிக்கப்பட்ட எருக்களை எரிக்கும் போது ஏராளமான புகை வரும். ஆனாலும், அதை வைத்துதான் ஜன்னல் இல்லாத எங்களது வீட்டில் அம்மா சமையல் செய்வார்!

சுவர்கள் முழுவதும் கரும்புகை படிவதால், அடிக்கடி வெள்ளையடிக்க வேண்டியிருக்கும். இதையும் அம்மாவே சில மாதங்களுக்கு ஒருமுறை செய்வார். இதுபோன்று செய்வது பாழடைந்து போகும் எங்கள் வீட்டில் புத்துணர்ச்சியூட்டும் வாசனையை ஏற்படுத்தும். வீட்டை அலங்கரிப்பதற்காக சிறு சிறு மண்பாண்டங்களையும் அம்மா தயாரிப்பார். பழைய வீட்டு உபயோகப் பொருட்களை மறு சுழற்சி செய்யும் இந்தியாவின் பழக்கவழக்கத்திற்கு அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

அம்மாவின் மற்றொரு தனிப் பண்பையும் நான் நினைவுகூர விரும்புகிறேன். தண்ணீர் மற்றும் புளியங்கொட்டையில் பழைய காகிதங்களை நனைத்து பசை போன்ற ஒரு கூழை அம்மா தயாரிப்பார். இந்தக் கூழைப் பயன்படுத்தி சுவர்களில் கண்ணாடி துண்டுகளை ஒட்டி அழகிய ஓவியங்களை அவர் உருவாக்குவார். கதவில் தொங்கவிடுவதற்காக சந்தையிலிருந்து சில சிறிய அலங்கார பொருட்களையும் அவர் வாங்கி வருவார்.

படுக்கைகள் சுத்தமாகவும், சரியாகவும் விரிக்கப்பட வேண்டும் என்பதில் அம்மா மிகுந்த கவனம் செலுத்துவார். படுக்கையில் சிறு தூசி இருந்தால் கூட அவர் சகித்துக் கொள்ளமாட்டார். படுக்கை விரிப்பில் லேசான சுருக்கம் இருந்தால்கூட அம்மா அதனை சரிசெய்த பிறகே மீண்டும் விரிப்பார். இந்தப் பழக்கத்தை பின்பற்றுவதில் நாங்கள் அனைவரும் மிகுந்த கவனமாக இருப்போம். தற்போதும் கூட, இந்த தள்ளாத வயதிலும், அவருடைய படுக்கையில் லேசான சுருக்கம் கூட இருக்கக் கூடாது என அம்மா எதிர்பார்ப்பார்!

இதுதான் தற்போதும் நேர்த்தியான செயல்பாட்டிற்கு வழிவகுக்கிறது. காந்திநகரில் அவர் எனது சகோதரர்கள் மற்றும் எனது உறவினர் குடும்பங்களுடன் வசித்தாலும், இப்போதும் கூட, இந்த வயதிலும் அவரது வேலைகளை அவரே செய்வதற்கு முயற்சிக்கிறார்.

தூய்மையில் அவர் கவனம் செலுத்துவதை

இப்போதும்கூட காணலாம். நான் எப்போது அவரைக்காண காந்திநகர் சென்றாலும், அவரது கையால் எனக்கு இனிப்புகளை ஊட்டிவிடுவார். சிறு குழந்தைகளை சுத்தம் செய்யும் அம்மாவைப் போல, நான் சாப்பிட்டவுடன் கைக்குட்டையை எடுத்து எனது முகத்தை துடைத்துவிடுவார். அவர், எப்போதும் ஒரு கைக்குட்டை அல்லது சிறிய கைத்துண்டை அவரது சேலையிலேயே முடிந்து வைத்திருப்பார்.

அம்மா தூய்மையில் கவனம் செலுத்துவது பற்றிய பழங்கால நிகழ்வுகளை நினைவுகூர்வதாக இருந்தால், அவற்றை எழுதுவதற்கு காகிதங்கள் போதாது. தூய்மை மற்றும் துப்புரவில் கவனம் செலுத்துபவர்களைக் கண்டால், அவர்கள் மீது அம்மா மிகுந்த மரியாதை செலுத்துவார் என்பது அவரது மற்றொரு தனிப்பண்பு. வத் நகரில் எங்கள் வீட்டை ஒட்டிய சாக்கடையை சுத்தம் செய்ய யார் எப்போது வந்தாலும், அவர்களுக்கு அம்மா தேனீர் கொடுக்காமல் விடமாட்டார். வேலை பார்த்தவுடன் தேனீர் கிடைக்கும் என்பதால், எங்களது வீடு துப்புரவு பணியாளர்களிடையே மிகுந்த பிரசித்திப் பெற்றதாகும்.

நான் எப்போதும் நினைவுகூரும் அம்மாவின் மற்றொரு பழக்கம் என்னவென்றால், மற்ற உயிரினங்கள் மீதும் அவர் மிகுந்த பாசம் காட்டுவார். ஒவ்வொரு கோடை காலத்திலும், பறவைகளுக்காக அவர் பாத்திரங்களில் தண்ணீர் வைப்பார். எங்கள் வீட்டை சுற்றித்திரியும் தெரு நாய்களும், பசியின்றி இருப்பதை அவர் உறுதி செய்வார்.

எனது அப்பா, தேனீர் கடையிலிருந்து கொண்டு வரும் பாலாடையிலிருந்து சுவை மிகுந்த நெய்யை அம்மா தயாரிப்பார். இந்த நெய் எங்களது பயன்பாட்டிற்கு மட்டுமானதல்ல. எங்களது பக்கத்து வீடுகளில் உள்ள பசுமாடுகளுக்கும் உரிய பங்கு வழங்கப்படும். அந்தப் பசுக்களுக்கு அம்மா தினந்தோறும் ரொட்டிகளை வழங்குவார். காய்ந்து போன ரொட்டிகளாக அல்லாமல், வீட்டில் தயாரிக்கப்பட்ட நெய்யை தடவி பாசத்துடன் அவற்றை வழங்குவார்.

உணவு தானியங்களை சிறு துளி கூட வீணாக்கக் கூடாது என அம்மா வலியுறுத்துவார். எங்களது பக்கத்து வீடுகளில் எப்போது திருமண விருந்து நடைபெற்றாலும், உணவு பொருட்களை வீணாக்கக் கூடாது என அவர் எப்போதும் எங்களிடம் நினைவூட்டுவார். உன்னால் எவ்வளவு சாப்பிட முடியுமோ அதை மட்டும் சாப்பிடு - என்பதே எங்களது வீட்டில் தெளிவான விதிமுறையாக இருந்தது.

தற்போதும் கூட, அவரால் எவ்வளவு சாப்பிட முடியுமோ, அந்த அளவு சாப்பாட்டைத்தான் அம்மா எடுத்துக்கொள்வார், ஒரு கவளம் சாதத்தைக் கூட அவர் வீணாக்க மாட்டார். சிறந்த பழக்க வழக்கங்களுக்கென்றே பிறந்தவரான அவர், குறித்த நேரத்தில் சாப்பிடுவதோடு, சாப்பாடு நன்றாக செரிக்கும் விதமாக மென்று சாப்பிடுவார்.

மற்றவர்கள் மகிழ்வதைக் கண்டு அம்மா மகிழ்வார். எங்களது வீடு சிறியதாக இருந்தாலும், அவர் பரந்த சுபாவம் கொண்டவர். எனது தந்தையின் நெருங்கிய நண்பர் ஒருவர்,

பக்கத்து கிராமத்தில் வசித்து வந்தார். அவர் எதிர்பாராவிதமாக காலமானதும், அப்பா அவரது நண்பரின் மகனான அப்பாஸை, எங்களது வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர் எங்களது வீட்டில் எங்களுடன் தங்கி அவரது படிப்பை முடித்தார். எனது சகோதர சகோதரிகள் மீது காட்டுவதைப் போன்றே அம்மா, அப்பாஸிடமும் பாசம் காட்டி அவரை கவனித்துக் கொண்டார். ஆண்டுதோறும் ரமலான் பண்டிகையின் போது, அப்பாஸிற்கு பிடித்த திண்பண்டங்களை அம்மா செய்து கொடுப்பார். பண்டிகைகளின்போது, பக்கத்து வீட்டு குழந்தைகள் எங்களது வீட்டிற்கு வந்து அம்மா தயாரித்த சிறப்பு திண்பண்டங்களை ருசித்து செல்வார்கள்.

சாதுக்கள் எப்போது எங்களது பக்கத்து வீடுகளுக்கு வந்தாலும், அம்மா அவர்களை எங்களது எளிமையான வீட்டிற்கு அழைத்து உணவு கொடுப்பார். தன்னலமற்ற தன்மை கொண்ட அவர், சாதுக்களை அழைத்து குழந்தைகளான எங்களை ஆசிர்வதிக்க சொல்வாரே தவிர, அவருக்காக எதையும் கேட்டதில்லை. "எனது குழந்தைகள் மற்றவர்கள் மகிழ்வதை கண்டு மகிழும் விதமாகவும், மற்றவர்களின் துன்பங்களை போக்கும் விதமாகவும் இருக்க ஆசிர்வதியுங்கள். குழந்தைகள் பக்தியுடனும், சேவை மனப்பான்மையுடனும் இருக்க ஆசிர்வதியுங்கள்" என்றுதான் அம்மா சாதுக்களிடம் கேட்டுக் கொள்வார்.

அம்மா எப்போதும் என்மீதும், அவர் சொல்லிக் கொடுத்த நற்பண்புகள் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். பல தசாப்தங்களுக்கு முன் நான் கட்சிப் பணியாற்றிய போது நிகழ்ந்த சம்பவம் ஒன்றை நினைவுகூர விரும்புகிறேன். கட்சிப் பணிகளில் நான் தீவிரமாக ஈடுபட்டிருந்த வேளையில், எப்போதாவதுதான் எனது குடும்பத்தினரை தொடர்பு கொள்வேன். அந்த காலக்கட்டத்தில் எனது மூத்த சகோதரர் அம்மாவை பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் கோவில்களுக்கு அழைத்துச் சென்றார். பத்ரிநாத்தில் தரிசனத்தை முடித்த பிறகு அவர் கேதார்நாத் வரவிருப்பதை உள்ளூர்வாசிகள் சிலர் அறிந்துள்ளனர்.

எனினும், பருவநிலை திடீரென மோசமடைந்தது. சிலர் கம்பளிகளுடன் மலையடிவாரத்திற்கு வந்தனர். சாலைகளில் சென்றவர்களிடம் எல்லாம் அவர்கள் நரேந்திர மோடியின் தாயாரா என்று கேட்டவாறு இருந்தனர். இறுதியாக அவர்கள் எனது தாயாரை சந்தித்து அவருக்கு கம்பளியும் தேனீரும் அளித்துள்ளனர். அவர் கேதார்நாத்தில் வசதியாக தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர். இது எனது அம்மாவின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பின்னாளில் அவர் என்னை சந்தித்த போது, "மக்கள் உன்னை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நீ சில நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறாய் எனத் தெரிகிறது" என்று அவர் கூறினார்.

தற்போது பல ஆண்டுகள் உருண்டோடிய பிறகும், உங்களது மகன் நாட்டின் பிரதமரானதை நினைத்து நீங்கள் பெருமிதம் அடைகிறீர்களா என்று அவரிடம் எப்போது

“எனது அன்னை அசாதாரணமான அளவுக்கு மிகவும் எளிமையானவர். அனைத்து அன்னையர்களை போல! எனது அன்னையை பற்றி நான் எழுதுகையில் உங்களில் பலர் எனது விளக்கத்தை அவருடன் நிச்சயம் பொருத்திப்பார்ப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இதைப் படிக்கும் போது நீங்கள் உங்கள் தாயின் தோற்றத்தை காண்பீர்கள்”

கேட்டாலும், அம்மா அவர்களுக்கு மிகுந்த பொறுப்புடன் பதில் சொல்வார். “உங்களைப் போன்றே நானும் பெருமிதம் அடைகிறேன். எதுவும் என்னால் ஆனதல்ல. ஆண்டவனின் திட்டத்தில் நான் ஒரு சிறு துரும்புதான்” என்று அம்மா கூறுவார்.

நான் பங்கேற்கும் எந்த அரசு அல்லது பொது நிகழ்ச்சிகளுக்கும், அம்மா என்னுடன் வந்ததில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த காலங்களில் இரண்டே இரண்டு முறை மட்டும் அவர் நான் பங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு வந்துள்ளார். ஒருமுறை, ஒற்றுமை யாத்திரையை நிறைவு செய்து லால்சவுக்கில் தேசிய கொடியை ஏற்றிவைத்து ஸ்ரீநகரிலிருந்து நான் திரும்பி வந்த போது, அகமதாபாதில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் பங்கேற்று எனது நெற்றியில் திலகமிட்டார்.

என் தாயாருக்கு அன்று மிகவும் உணர்ச்சிகரமான தருணம். ஏனெனில், ஏக்தா யாத்திரை சென்ற சிலர் பக்வாராவில், தீவிரவாத தாக்குதலில் இறந்து விட்டனர். இதை கேட்டு அம்மா மிகவும் கவலைப்பட்டார். அப்போது இரண்டு பேர் என்னை பார்க்க வேண்டும் என்று அழைத்தனர். ஒருவர், அக்ஷர்தம் கோயிலின் ஷ்ரதே ப்ரமுக் ஸ்வாமிகள். இன்னொருவர் என் அம்மா. அம்மாவை பார்க்க போனபோது அவர்களின் நிம்மதி எனக்கு நன்றாக தெரிந்தது.

இரண்டாவது நிகழ்ச்சி, 2001-ம் ஆண்டில் நான் குஜராத் முதல்வராக பொறுப்பேற்றபோது நடந்தது. 20 வருடங்களுக்கு முன், நான் குஜராத் முதல்வராக பதவியேற்ற விழாவில் தான் என் அம்மா என்னுடன் பொதுநிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அதன் பிறகு அவர் என்னுடன் எந்த பொதுநிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை.

எனக்கு இன்னொரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. நான் குஜராத் முதல்வராக பதவியேற்றபோது, எனது ஆசிரியர்கள் அனைவரையும் பொதுமேடையில் கவுரவப்படுத்த நினைத்தேன். என் தாயாரை தான் என் வாழ்க்கையில் பெரிய ஆசிரியையாக நினைத்திருந்தேன். நமது வேதங்கள் கூட, அம்மாவை தவிர வேறுயாரும் பெரிய குரு இல்லை என்று தெரிவிக்கின்றன. அதனால் என் அம்மாவை விழாவில் கலந்து கொள்ளும்படி அழைத்தேன். ஆனால் என் அன்னை மறுத்து விட்டார். நான் ஒரு சாதாரண பிரஜை. நான் உன்னை பெற்றெடுத்திருந்தாலும், கடவுளின் அருளும், மக்களின் ஆசியும் உன்னை நல்ல நிலைக்கு உயர்த்தியுள்ளன. அதனால் எனக்கு கவுரவம் வேண்டாம் என்று தெரிவித்து விட்டார். விழாவில் மற்ற ஆசிரியர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

இதற்கு முன் ஒரு சம்பவத்தை பற்றி கூற வேண்டும். நான் படித்த பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்த உள்ளூர் ஆசிரியையான ஜெதாபாய் ஜோஷி ஜி வீட்டில் இருந்து யாராவது, நான் முதல்வராக பதவி ஏற்கும் விழாவில் கலந்து கொள்வார்களா என்று என் அம்மா கேட்டார். ஜெதாபாய் ஜோஷி ஜி தான் என் ஆரம்பகால ஆசிரியை, எனக்கு எழுத்துகளை கற்று தந்தார். அதனை என் அம்மா நினைவு வைத்திருந்தார்கள். ஜெதாபாய் ஜோஷி ஜி இறந்து விட்டதை நினைவுகூர்ந்த என் அம்மா, ஜெதாபாய் ஜோஷி ஜி குடும்பத்தில் இருந்து ஒருவரை என் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ள அழைத்திருந்தேன் என்பதை உறுதி செய்து கொண்டார்கள்.

முறையாக பள்ளிக்கு சென்று படிக்கா விட்டாலும், கற்றுக் கொள்வது சாத்தியம் என்பதை என் அம்மா நன்றாக உணர்ந்திருந்தார். என் அம்மாவின் சிந்தனைகளும், தொலைநோக்கு பார்வையும் என்னை எப்போதும் ஆச்சரியப்படுத்துவதாகவே இருந்திருக்கிறது.

ஒரு நல்ல குடிமகனாக நான் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து என் அம்மா எப்போதும் எனக்கு சொல்லிக் கொண்டே இருப்பார். வாக்குப்பதிவு நடைமுறை தொடங்கிய நாளிலிருந்து என் அம்மா ஒருமுறை கூட வாக்களிக்க தவறியதில்லை. பஞ்சாயத்து தேர்தல்களிலிருந்து பாராளுமன்ற தேர்தல் வரை அவர் நிச்சயம் வாக்களிப்பார். சில தினங்களுக்கு முன், காந்திநகர் நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களிலும் என் அம்மா வாக்களித்தார்.

கடவுளின் அருளுடன், பொதுமக்களின் ஆசிர்வாதமும் உனக்கு இருப்பதால், உனக்கு எதுவும் நடக்காது என்று என் அம்மா என்னிடம் அடிக்கடி கூறுவார். மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய விரும்பினால், ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும், தனிப்பட்ட வாழ்வில் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று என் அம்மா எனக்கு அறிவுரை கூறுவார்.

முன்பெல்லாம், சதுர்மாஸ்ய சடங்குகளை என் அம்மா மிக கடுமையாக பின்பற்றுவார். நவராத்திரி தினத்தின்போது, இப்போதும் நான் கடைப்பிடிக்கும் எனது தனிப்பட் பழக்க, வழக்கங்கள் என் அம்மாவுக்கு நன்றாக தெரியும். இந்த கடுமையான நடைமுறைகளை எளிமையாக்கி கொள்ள வேண்டும் என்று என் அம்மா இப்போது சொல்ல தொடங்கியுள்ளார்.

என் அம்மா, தனது வாழ்நாளில் எந்தஒரு குறையையும் சொல்லி நான் கேட்டதில்லை. அவர் யாரைப் பற்றியும் எந்தவொரு குறையையும் சொன்னதில்லை. அவர் யாரிடமிருந்தும் எந்த ஒன்றையும், எப்போதும் எதிர்பார்ப்பதுமில்லை.

என் அம்மாவுக்கு எப்போதும் எந்த சொத்துகளும் இல்லை. என் அம்மா ஒரு எறும்பு அளவு தங்கம் அணிந்திருப்பதையும் நான் பார்க்கவில்லை. என் அம்மா எப்போதும், எதன் மீதும் ஆசைப்பட்டதுமில்லை. என் அம்மா இப்போதும் ஒரு சிறு அறையில் தன் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

என் அன்னைக்கு ஆன்மீகத்தின் மீது என்றுமே அதீத நம்பிக்கை இருந்திருக்கிறது. ஆனால், அவர் மூடநம்பிக்கைகளுக்கு இடம்கொடுக்க மாட்டார். அதே குணங்களை அவர் எனக்கும் கற்று தந்தார். தினசரி பிரார்த்தனைகளை அவர் இப்போதும் தொடர்ந்து செய்கிறார். என்றுமே ஜபமாலையுடன் பிரார்த்தனைகள் செய்வதை அவர் கடைப்பிடிக்கிறார். சில சமயங்களில் அவர் கையில் ஜபமாலையுடனே தூங்கி விடுவார். சிலநேரங்களில் தூக்கத்தை துறந்து ஜபமாலையுடன் பிரார்த்தனை செய்வதால், என் குடும்ப உறுப்பினர்கள் ஜபமாலையை எடுத்து மறைத்து வைத்து விடுவதும் நடக்கிறது.

என் தாயாருக்கு வயதாகி விட்டாலும், அவருக்கு ஞாபக சக்தி அதிகமாக இருக்கிறது. பழைய சம்பவங்களை அவர் இப்போதும் நன்றாக நினைவில் வைத்துள்ளார். உறவினர்கள் யாரும் அவரை பார்க்க வந்தால், உடனே என் அம்மா தன்னுடைய தாத்தா, பாட்டி பெயர்களை சரியாக சொல்லி, அவர்களை அடையாளம் கண்டுபிடித்து விடுகிறார்.

அண்மையில் நான் என் தாயாரிடம், தினமும் எவ்வளவு நேரம் தொலைகாட்சியை பார்க்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், டிவியில் எல்லோரும் ஏதாவது காரணத்துக்காக அடிக்கடி சண்டை போட்டு கொண்டுள்ளனர் என்றும், செய்திகளை, அதிலும் அமைதியாக, விளக்கமாக வாசிக்கப்படும் செய்திகளை மட்டுமே தான் பார்ப்பதாகவும் அவர் கூறினார். என்

அவரிடம் எப்போது தொலைபேசியில் பேசினாலும் எந்த தப்பையும் செய்துவிடாதே, யாருக்கும் எந்ததீங்கும் செய்துவிடாதே, ஏழைகளுக்காக பணியாற்று என்று கூறிக்கொண்டே இருப்பார்

அம்மா அனைத்து விஷயங்களையும் இவ்வளவு ஆழமாக கவனிப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமளிப்பதாக உள்ளது.

எனக்கு இன்னொரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. 2017-ம் ஆண்டு, காசியில், உத்தரப்பிரதேச மாநில சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தை முடித்து கொண்டு, அகமதாபாத் சென்றேன். அப்போது, கோயில் பிரசாதத்தை எடுத்து கொண்டு என் தாயாரை சந்திக்கச் சென்றேன். அவரை பார்த்ததும், உடனே காசி விஸ்வநாதர் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்தாயா என்று என்னை கேட்டார். அவர் இப்போதும். காசி விஸ்வநாதர் மகாதேவ் என்று முழுப்பெயரையும் சரியாக சொல்கிறார். அப்போது என் அம்மா என்னிடம், காசி விஸ்வநாதர் கோயிலுக்கு செல்லும் பாதைகள் இன்னும் அப்படியே இருக்கிறதா என்று கேட்டார். யாரோ ஒருவரின் வீட்டுக்குள் கோயில் இருப்பது போல் தோன்றுவதாக தெரிவித்தார். நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். நீங்கள் எப்போது காசி விஸ்வநாதர் கோயிலுக்கு சென்றீர்கள் என்று அம்மாவிடம் கேட்டேன். அதற்கு அவர், பல வருடங்களுக்கு முன்பு காசி விஸ்வநாதர் கோயிலுக்கு சென்றதாக தெரிவித்தார். என் அம்மா பழைய விஷயங்கள் எல்லாவற்றையும் நினைவில் வைத்திருப்பது எனக்கு வியப்பளிக்கிறது.

என் தாயார் வெறுமனே பாசமும், அக்கறையும் கொண்டவரில்லை. அவர் திறமைகள் உடையவராகவும் இருக்கிறார். என் அம்மாவுக்கு பாட்டி வைத்தியம் நிறைய தெரியும். குஜராத்தின் வத் நகரில், எங்கள் வீட்டின் முன், குழந்தைகளுக்கு சிகிச்சை பெறுவதற்காக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் காத்துக் கொண்டுள்ளனர்.

சிறுகுழந்தைகளுக்கு சிகிச்சை தருவதற்காக என் அம்மா, சிறந்த பொடி ஒன்றை பயன்படுத்துகிறார். இந்த பொடி குழந்தைகளுக்கு தருவதற்காகவே மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்பட்டது. அம்மா, குழந்தைகளுக்கு சிறிய கிண்ணத்தில் அடுப்பிலிருந்து சாம்பல் பொடியையும், சிறு துணியையும் தருவார். நாங்கள் கிண்ணத்தில் துணியை கட்டி அதன்மீது சாம்பல் பொடியை வைத்து நன்றாகத் தேய்ப்போம். பெரிய அளவிலான சாம்பல் துகள்களால் குழந்தைகள் துன்பமடைய கூடாது என்று என் அம்மா கூறுவார்.

இன்னொரு நிகழ்வும் என் நினைவுக்கு வருகிறது. என் அப்பா நர்மதாவில் நடத்திய ஒரு பூஜைக்கு நாங்கள் சென்றிருந்தோம். கடுமையான வெயிலை தவிர்ப்பதற்காக, அதிகாலையிலேயே நாங்கள் கிளம்பி நான்கு மணிநேர பயணம் சென்றோம். பேருந்தில் இருந்து இறங்கிய பிறகும், சிறிது தூரம் நடந்தே செல்ல வேண்டியிருந்தது. வெம்மை அதிகமாக இருந்ததால், நாங்கள் ஆற்றங்கரையோரம் தண்ணீரில் நடந்து சென்றோம். ஆனால், தண்ணீரில் நடப்பது எளிதல்ல. சீக்கிரம் நாங்கள் சோர்வடைந்து விட்டோம். எங்கள் சிரமத்தை பார்த்த அம்மா, சிறிது நேரம் அனைவரும் ஓய்வெடுப்போம் என்று சொன்னதுடன், அனைவருக்கும் வெல்லமும், தண்ணீரும் வாங்கி வந்து தரக் கூறினார். அப்பா அவற்றை வாங்கி வந்தபோது,

அம்மா வேகமாக ஓடி சென்று அதனை வாங்கி வந்து எங்களிடம் கொடுத்தார். அந்த வெல்லமும், தண்ணீரும் எங்களுக்கு சிறிது ஆற்றலை கொடுத்தது. நாங்களும் தொடர்ந்து நடந்தோம். கடும் வெயிலில் நாங்கள் பூஜைக்கு சென்றபோது, எங்கள் அம்மா எங்களுக்காக அக்கறையுடன் எங்கள் அப்பாவை துரிதப்படுத்தியது எனக்கு இன்னமும் நன்றாக நினைவில் இருக்கிறது.

குழந்தை பருவத்திலிருந்தே எனது தாயார் பிறரது தேர்வுகளுக்கு மரியாதை அளிப்பதையும் தன்னுடைய விருப்பங்களை திணிப்பதை தவிர்ப்பதையும் கண்டிருக்கிறேன் என்னுடைய விஷயத்தில் கூட அவர் எனது முடிவுகளுக்கு மதிப்பளிப்பதையும் எந்த விதமான தடையையும் ஏற்படுத்தாமல் இருப்பதையும் எனக்கு ஊக்கமளிப்பதையும் நினைவு கூர்கிறேன். எனது குழந்தை பருவத்தில் எனக்குள் வேறொரு விதமான மனநிலை உருவாகி வருவதை அவர் உணர்ந்தே இருந்தார். எனது சகோதர சகோதரிகளோடு ஒப்பிடுகையில் நான் சற்றே மாறுபட்டவனாக இருந்திருக்கிறேன்.

எனது வித்தியாசமான பழக்க வழக்கங்களுக்கும் வழக்கத்திற்கு மாறான எனது முயற்சிகளுக்கும் தேவைப்படும் சிறப்பு கவனத்தையும், சிறப்பு முயற்சிகளையும் அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவர் எப்போதும் இதை ஒரு சுமையாக கருதியதும் இல்லை. அதற்காக அவர் எரிச்சலடைந்ததும் இல்லை. உதாரணத்திற்கு சில மாதங்களில் உணவில் நான் உப்பு சேர்த்துக்கொள்வதில்லை, சில வாரங்களுக்கு தானிய வகை உணவுகள் எதையும் எடுத்துக்கொள்ளாமல் பால் மட்டுமே அருந்துவேன். சில சமயங்களில் 6 மாத காலம் வரை இனிப்பு வகைகளை தவிர்த்து விடுவேன். குளிர்காலத்தில் வெட்டவெளியில் உறங்குவதோடு குளிர்ந்த மண் பானை தண்ணீரில் குளிக்கும் பழக்கமும் இருந்தது. என்னை நானே பரிசோதனைகளுக்கு உட்படுத்திக்கொள்கிறேன் என்று என் அன்னைக்கு தெரியும். அதனால் அவர்கள் இதற்கு மறுப்பு தெரிவிக்க மாட்டார்கள். அவர்கள் "பரவாயில்லை உனக்கு எது விருப்பமாக இருக்கிறதோ அதைச் செய்" என்று கூறிவிடுவார்கள்.

நான் மாற்றுப் பாதையில் பயணம் செய்ய இருக்கிறேன் என்பதை அவர்களால் உணர முடிந்திருந்தது. ஒருமுறை எங்கள் வீட்டிற்கு அருகிலிருந்த கிரி மகாதேவ் கோவிலுக்கு ஒரு மகான் வந்திருந்தார். மிகுந்த பயபக்தியுடன் அவருக்கு நான் சேவைகள் செய்து வந்தேன். அந்த சமயத்தில் எனது தாயார் தனது சகோதரியின் திருமணம் நடைபெறவிருப்பது குறித்து மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார்கள். கூடவே தனது சகோதரரின் இல்லத்திற்கு செல்லும் வாய்ப்பு கிடைத்திருப்பது குறித்தும் அவர்கள் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். ஒட்டுமொத்த குடும்பமுமே திருமணத்திற்காக தயாராகி வந்த நிலையில் நான் எனது அன்னையிடம் சென்று எனக்கு அங்கு வர விருப்பமில்லை என்று கூறினேன். அவர் காரணம் கேட்டபோது மகானுக்கு செய்ய வேண்டிய சேவைகள் பற்றி எடுத்துரைத்தேன்.

என் தாயாரின் சகோதரியின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்பதில் அவர்களுக்கு வருத்தம்

> "மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய விரும்பினால், ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும், தனிப்பட்ட வாழ்வில் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று என் அம்மா எனக்கு அறிவுரை கூறுவார்"

இருந்தது இயல்புதான். ஆனால் அவர்கள் எனது முடிவை மதித்தார்கள். அப்போதும் "பரவாயில்லை உனக்கு எது விருப்பமாக இருக்கிறதோ அதைச் செய்" என்றார்கள். ஆனால் தனியே நான் வீட்டில் எப்படி சமாளிப்பேன் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. அதனால் நான் பசியில் வாடிவிடக்கூடாது என்பதற்காக சில நாட்களுக்கான உணவையும் சிறு தீனியையும் அவர்கள் எனக்காக சமைத்து வைத்துவிட்டு சென்றார்கள்.

நான் வீட்டை விட்டுச் செல்வது என்று முடிவெடுத்தபோது அதை அவரிடம் சொல்வதற்கு முன்னதாகவே முடிவு அவருக்கு தெரிந்திருந்தது. வெளி உலகிற்கு சென்று இந்த உலகம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று எனது பெற்றோரிடம் நான் அடிக்கடி கூறி வந்ததுண்டு. சுவாமி விவேகானந்தரைப் பற்றி அவர்களிடம் அடிக்கடி கூறி ராமகிருஷ்ணா மிஷன் மடத்திற்குச் செல்ல வேண்டுமென்ற என் விருப்பத்தை தெரிவித்து இருந்தேன். இது பல நாட்கள் நீடித்தது. இறுதியாக ஒரு நாள் நான் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்து பெற்றோரின் ஆசியை வேண்டினேன். மனம் வெதும்பி எனது தந்தையார் என்னிடம் கூறினார் "உன் விருப்பம்". அவர்களது ஆசி இன்றி வீட்டை விட்டு வெளியேற மாட்டேன் என்று நான் அவர்களிடம் தெளிவாக கூறினேன். அப்போது எனது தாயார் உனது மனம் என்ன சொல்கிறதோ அதுபோல் செய் என்று கூறினார். அப்போதைக்கு எனது தந்தையை சமாளிப்பதற்காக ஒரு நல்ல ஜோசியரிடம் எனது ஜாதகத்தை காட்ட வேண்டும் என்று கோரினார். எனது தந்தையாரும், உறவினரான மற்றொரு ஜோசியரிடம் எனது ஜாதகத்தை காண்பித்து ஆலோசனை பெற்றார். எனது ஜாதகத்தைப் பார்த்த அந்த உறவினரான ஜோசியக்காரர் இவனது வழி வித்தியாசமானது கடவுள் இவனுக்காக வைத்திருக்கும் வழியில் மட்டுமே இந்த பையன் செல்வான் என்று கூறினார்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு நான் வீட்டை விட்டு வெளியேறினேன். இந்த சமயத்தில் எனது தந்தையாரும் எனது முடிவை ஏற்றுக் கொண்டு எனக்கு ஆசிர்வாதங்களை வழங்கினார். மிகச் சிறப்பான ஒரு தொடக்கம் அமைய வேண்டும் என்று வாழ்த்தி எனது தாயார் எனக்கு தயிரும் வெல்லமும் கலந்து வழங்கினார்கள். எனது வாழ்க்கை முற்றிலுமாக மாறிவிடும் என்று எனது தாயார் அறிந்திருந்தார்.

அன்னையர் அனைவருமே எப்போதுமே தங்களது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த தெரிந்தவர்கள்

சாதுக்களை அழைத்து குழந்தைகளான எங்களை ஆசிர்வதிக்க சொல்வாரே தவிர, அவருக்காக எதையும் கேட்டதில்லை. "எனது குழந்தைகள் மற்றவர்கள் மகிழ்வதை கண்டு மகிழும் விதமாகவும், மற்றவர்களின் துன்பங்களை போக்கும் விதமாகவும் இருக்க ஆசிர்வதியுங்கள். குழந்தைகள் பக்தியுடனும், சேவை மனப்பான்மையுடனும் இருக்க ஆசிர்வதியுங்கள்" என்றுதான் அம்மா சாதுக்களிடம் கேட்டுக் கொள்வார்

என்றபோதிலும் தனது குழந்தை வீட்டை விட்டு வெளியேறுகிறது என்னும் போது உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாமல் சிரமப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். கண்களில் நீர் தளும்ப எனது எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு மனம் நிறைந்த ஆசிகளை வழங்கி அவர் அனுப்பி வைத்தார்.

வீட்டை விட்டு வெளியேறிய பிறகு நான் எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் என்னுடைய அன்னையின் ஆசி எப்போதும் என்னை பின்தொடர்ந்தது. அம்மா எப்போதும் என்னுடன் குஜராத்தி மொழியில் தான் பேசுவார். தம்மைவிட வயதில் குறைந்தவராக அல்லது சமய வயதினராக இருந்தாலும் குஜராத்தி மொழியில் நீ என்று அழைப்பதற்கு 'து' என்று சொல்வார்கள். ஆனால் அதே சமயம் தம்மைவிட மூத்தவர்களை அவ்வாறு அழைக்கும்போது நீங்கள் என்று பொருள்படும் வகையில் 'தமே' என்று கூறுவார்கள். குழந்தையாக இருந்தபோது என்னை துங்கு என்று அழைத்து வந்த எனது தாயார், வீட்டை விட்டு வெளியேறி நான் எனது சொந்த பாதையைத் தேர்ந்தெடுத்த பிறகு எனது தாயார் என்னை 'து'என்று எப்போதும் அழைத்ததில்லை. அதற்குப் பிறகு அவர்கள் என்னை 'தமே' என்றோ அல்லது 'ஆப்' (நீங்கள்)என்றோ தான் விளித்தார்கள்.

உறுதியான முடிவுகளை எடுப்பதற்கு எனது தாயார் என்னை எப்போதும் ஊக்குவித்து வந்தார்கள். அதே நேரத்தில் ஏழைகள் நலன் குறித்தும் அக்கறை கொள்ளும் வகையில் அவர்களது வளர்ப்புமுறை அமைந்திருந்தது. குஜராத்தின் முதலமைச்சராக நான் ஆவது என்று முடிவெடுக்கப்பட்ட போது நான் மாநிலத்திலேயே இல்லை. குஜராத்திற்கு திரும்பியதும் நேராக எனது தாயாரை சந்திக்க சென்றேன். அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. என்னிடம் மீண்டும் நான் அவருடன் தங்கப்போகிறேனா என்று ஆர்வத்துடன் விசாரித்தார்கள். ஆனால் அவர்களுக்கு நான் என்ன பதில் கூறப்போகிறேன் என்பது நன்றாகவே தெரியும். அதனால் அரசில் உனது பணி குறித்து எனக்கு தெரியாது. ஆனாலும் எந்த காரணத்தை கொண்டும் லஞ்சம் மட்டும் வாங்காதே என்று கூறினார்.

தில்லிக்கு புலம்பெயர்ந்த பிறகு என் அன்னையுடனான சந்திப்பு முன்பிருந்ததை விட மிகவும் குறைந்தது. சில நேரங்களில் நான் காந்திநகர் செல்லும் போது சில மணித்துளிகள் அவரை சந்திப்பேன். முன்பு அவரை அடிக்கடி சந்தித்ததை போல இப்போதெல்லாம் சந்திக்க முடிவதில்லை. ஆனாலும் என்னை சந்திக்க முடியவில்லை என்ற குறை அவரிடம் இருப்பது போலவும் நான் உணர்வதில்லை. அவரது அன்பும், பாசமும் மாறாமல் நிலைத்திருக்கின்றன. அவரது ஆசிர்வாதங்களைப் போல. என் தாயார் அடிக்கடி கேட்பதுண்டு. தில்லியில் நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா, உனக்குப் பிடித்திருக்கிறதா என்று.

அவருக்கு நான் அவரைப் பற்றி கவலைப்பட்டுக்கொண்டு, எனக்கிருக்கும் பெரும் பொறுப்புகள் மீதான அக்கறையை நழுவவிட்டுவிடக்கூடாது என்ற கவலை. அவரிடம் எப்போது தொலைபேசியில் பேசினாலும் எந்த தப்பையும் செய்துவிடாதே, யாருக்கும் எந்ததீங்கும் செய்துவிடாதே, ஏழைகளுக்காக பணியாற்று என்று கூறிக்கொண்டே இருப்பார்.

எனது பெற்றோர்களின் வாழ்க்கையை திரும்பிப்பார்க்கும் போது அவர்களது நேர்மையும், சுயமரியாதையும் அவர்களின் மிகப்பெரும் பண்புகளாக இருந்திருக்கின்றன என்பதை உணரமுடிகிறது. ஏழ்மையும், அதைத் தொடர்ந்த சவால்களும் இருந்தபோதிலும் எனது பெற்றோர்கள் கண்ணியத்தை கைவிடவில்லை, சுயமரியாதையை விட்டுத்தரவில்லை என்பதை உணரலாம். எந்த சவாலையும் எதிர்கொள்ள அவர்கள் கற்றுவைத்திருந்த ஒரே மந்திரம் கடினஉழைப்பு, தொடர் கடினஉழைப்பு.

எனது தந்தை எப்போதும் யாருக்கும் சுமையாக மாறவே இல்லை. எனது தாயாரும் அப்படியே. தனது பணிகளை முடிந்தவரை அவரே செய்துகொள்ள முயற்சிக்கிறார்.

இப்போதெல்லாம் எனது அன்னையை சந்திக்கும் போது அவர் என்னிடம் "எனக்கு வேறுயாரும் சேவைப்புரிவதை நான் விரும்பவில்லை, எனது உடல் இயக்கங்கள் தடைபடாமல் இருக்கவே விரும்புகிறேன்" கூறுகிறார்.

என் அன்னையின் வாழ்க்கையை காணும் போது அவரது தவ வாழ்க்கை, தியாகங்கள் மற்றும் இந்தியாவின் தாய்மை குணம் ஆகியவற்றை நான் உணர்கிறேன். எப்போதெல்லாம் என் அன்னையையும், கோடிக்கணக்கான அவரைப்போன்ற பெண்மணிகளையும் காணும்போது, இந்திய மகளிரால் ஆகாதது என்று எதுவுமில்லை என்று உணரத்தோன்றுகிறது.

ஒவ்வொரு வறுமைக்கதைக்கு பின்னாலும், ஒரு அன்னையின் அற்புதம் நிறைந்த தியாகம் ஒளிந்திருக்கிறது.

ஒவ்வொரு சவாலுக்கும் பின்னே ஒரு அன்னையின் உறுதியான முடிவு ஒளிந்திருக்கிறது.

அம்மா உங்களுக்கு மிக மகிழ்ச்சியான பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

நூறாவது பிறந்தநாளை கொண்டாடும் உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

உங்களைப்பற்றி விரிவாக பொதுவெளியில் எழுதும் துணிச்சல் இதுவரை எனக்கு ஏற்பட்டதில்லை.

அம்மா உங்களது ஆரோக்கியமும், நலனும் சிறந்திருக்க நான் ஆண்டவனிடம் வேண்டிக்கொள்கிறேன்.

எங்களது அனைவருக்கும் உங்களது ஆசிர்வாதங்களை வேண்டி நிற்கிறேன்.

உங்கள் காலடியில் தலைவணங்குகிறேன்.

■

PMO India @PMOIndia ·
दुनिया में हमारे IT professionals की स्किल और इनोवेशन को लेकर Trust नई ऊंचाई पर है।

यही Trust, यही Reputation, इस दशक में भारत के Biotech sector, भारत के bio प्रोफेशनल्स के लिए होते हम देख रहे हैं: PM @narendramodi



Rajnath Singh @rajnathsingh ·
The 'Agnipath' scheme approved by the CCS chaired by Prime Minister Shri @narendramodi is a truly transformative reform which will enhance the combat potential of the Armed Forces, with younger profile and technologically adept soldiers. #BharatKeAgniveer

Amit Shah @AmitShah ·
आज भी 70% भारत गांवों में बसता है, सुविधाओं के अभाव के कारण यह देश के बिकास में अपना योगदान देने से वंचित रह जाता है।

अगर इसी 70% टैलेंट को हमने देश के अर्थतंत्र को गति देने के काम से जोड़ दिया तो $5 ट्रिलियन की अर्थव्यवस्था का मोदी जी का सपना 5 सालों में पूरा होते हुए देखेंगे।

Nitin Gadkari @nitin_gadkari ·
The Union Cabinet chaired by Prime Minister Shri @narendramodi Ji has approved the development of the first phase of the new Greenfield Airport at Dholera, Gujarat at an estimated cost of ₹1305 crore. Plan for the year 2025-26 for operation of this airport has been created.

Piyush Goyal @PiyushGoyal
India stands with its fishermen!

At the WTO MC12, urged that the outcomes of the fisheries subsidies negotiations provide level-playing field, equity and thrust to the artisanal and small-scale fishers, who are the backbone of global fisheries.

Dharmendra Pradhan @dpr...
PM @narendramodi ji's government has taken numerous steps to harness the Yuva Shakti.

NEP 2020, @AIMtoInnovate, #StartUpIndia & other path-breaking initiatives are helping the youth realise their potential. We have resolved to empower 100% youth.
#8SaalYuvaShaktiKeNaam

Development and heritage must go ahead together: PM

Sarang Dastane & Bhavika Jain | TNN

Pune/Mumbai: Prime Minister Narendra Modi on Tuesday said that it was the responsibility of everyone to keep India's ancient identity and traditions alive as it will help strengthen national unity.

"When modern technology and infrastructure are becoming synonymous with a country's development, we are making sure that both development and heritage move forward together," he said while inaugurating the renovated shila (rock) temple at the Sant Tukaram Maharaj Mandir in Dehu, around 40km from Pune, on Tuesday.

Deputy chief minister Ajit Pawar, leader of opposition Devendra Fadnavis and state BJP unit chief Chandrakant Patil were present for the event which was attended by a large number of warkaris (devotees) and the temple trustees. Modi said that saints have always come ahead to guide society.

Prime Minister Narendra Modi visits the Jagatguru Shrisant Tukaram Maharaj temple at Dehu in Pune on Tuesday

PM security tells Aaditya to not travel in CM car: PM Modi's security on Tuesday asked Maharashtra minister Aaditya Thackeray, who was travelling with chief minister Uddhav Thackeray, to get into another car, saying his name was mentioned against the other vehicle on their list.

"The CM was visibly upset and told them he is a cabinet minister too," said a source. He was then allowed to travel in the CM's car. Uddhav and Aaditya welcomed Modi at INS Shikra after which they were to travel as part of Modi's convoy to the Raj Bhavan. TNN

PM: Media's role is to bring to the fore govt, society's shortcomings

HT Correspondent
letters@hindustantimes.com

MUMBAI: The role of media is to bring to fore shortcomings in society and government and also highlight positive news, Prime Minister Narendra Modi said on Tuesday and praised the efforts of journalists during the Covid-19 pandemic.

"The positive contribution of India's media helped the country a lot in dealing with the biggest crisis in 100 years," Modi said at an event to commemorate 200 years of Mumbai Samachar, a Gujarati daily published from Maharashtra's capital city.

Narendra Modi SATISH BATE/HT

media in the country's independence, Modi said conducting healthy discussions is part of Indian tradition.

"The role of media is to educate people. If there are some shortcomings in society and government, then the role of media

PM said. "As much as the media has the right to criticise, it has the same responsibility to bring positive news to the fore."

Maharashtra chief minister Uddhav Thackeray was also present during the bicentennial anniversary of the Gujarati daily. While Modi called Mumbai and Maharashtra "maternal home" of Gujarati language, Thackeray hoped that "ties between Gujarati and Marathis continue to grow stronger in future as well." "Both Gujarati and Marathi have mixed in Maharashtra like sugar in milk. I hope that ties between Gujarati and Marathi continue to grow stronger in future as

10 lakh persons to get govt. jobs in 18 months, announces Modi

Recruitment likely to focus on vacancies in Railways, armed forces and GST dept.

SPECIAL CORRESPONDENT
NEW DELHI

Prime Minister Narendra Modi on Tuesday announced that his government would be recruiting 10 lakh personnel within the next 18 months, "in a mission mode", a major drive after recruitment to government jobs was derailed following the COVID-19 pandemic.

In a tweet from his official handle @PMOIndia, early on Tuesday morning, Mr. Modi said: "PM @narendramodi reviewed the status of Human Resources in all departments and ministries and instructed that recruitment of 10 lakh people be done by the government in mission mode in the next 1.5 years."

The announcement came on a day when Defence Minister Rajnath Singh and the three Service Chiefs announced the 'Agnipath' scheme of recruiting youth between the ages of 17.5 and 21 for a four-year stint in the armed forces with a provision of voluntary retention after this period, based on merit.

Unemployment has emerged as one of the major challenges before the Modi government after two years of the pandemic and its attendant economic woes.

An additional problem with regard to recruitment to government jobs has been the frequent leak of examination papers both for departments such as the Railways and for teacher recruitment as well. During the recently concluded Uttar Pradesh election in fact, police lathi-charged protesting students in Prayagraj and in Patna, Bihar, who had been preparing to appear for Railway Recruitment Board exams but were told that because the question paper leaked, the exam had to be cancelled.

While not sharing figures of which department would be recruiting how many, a senior government official shared that much of the recruitment would be in the Railways, armed forces (Agnipath) and regular recruitment which had been frozen through the pandemic), the Central Paramilitary Forces, Goods and Services Tax (GST) departments, including customs and excise and administrative staff for government-owned banks and insurance companies.

"The recruitment for GST departments, which are revenue generating departments is important, and for posts which were earlier known as State tax inspectors, recruitment will cover customs and excise as GST pertains to them too. In government-owned insurance firms, while field staff have been recruited regularly, administrative recruitment hasn't taken place in any significant way for the last 15 years," the official said.

It is hoped that the setting of a deadline will help recruitments happen fast.

Empty posts | As of March 2020, 8.8 lakh jobs were vacant in the Union government. In 2019, the number of vacant posts was around 9.2 lakh (23% of the sanctioned posts) and in 2018 there were 6.8 lakh such vacancies (17% of sanctioned posts). A look at the group-wise share of vacant posts to the total posts across Union Ministries and departments.

Group	No. of staff in service (in lakh)	No. of vacant posts (in lakh)	Vacancy as a share of sanctioned posts
A	1.14	0.21	15.5%
B (G)	0.80	0.17	17.4%
B (NG)	1.79	0.81	31%
C	28.12	7.67	21.4%
Total	31.91	8.86	21.7%

■ Unemployment has emerged as one of the major challenges before the Union government due to two years of the pandemic and its economic consequences.

Union government employees coming out of North Block after their day's work, in New Delhi.

UNEMPLOYMENT DECREASED: LABOUR SURVEY ▶ PAGE 11

PM lauds unsung heroes of Freedom Struggle

He opens commemorative gallery

'Govt schemes benefit all without discrimination'

Prime Minister Narendra Modi

Have held open talks on difficult social topics: PM

EXPRESS NEWS SERVICE
MUMBAI, PUNE, JUNE 14

AMID GROWING unrest across the country, Prime Minister Narendra Modi on Tuesday said that while open and healthy discussions on most difficult social topics has been a practice in India, it needs to be strengthened.

Speaking at the Dwishatabdi Mahotsav (200th anniversary) of Mumbai Samachar, a Gujarati daily, at Bandra-Kurla Complex in Mumbai, the PM, while lauding the role played by the media during the Covid-19 pandemic, said that while the media has the right to criticise and point out shortcomings of the government, it has an equal responsibility to report positive news.

"For thousands of years, we have conducted healthy debate, healthy criticism and right reasoning as a part of the social system. We have open and healthy discussions on very difficult social topics. This has been the practice in India, which we have to strengthen. This country is a country of rich tradition that is carried forward through the medium of debates and discussions," he added.

On a day-long trip to Maharashtra, the PM also inaugurated the Jal Bhushan Building and Gallery of Revolutionaries at Raj Bhavan in Mumbai.

Maintaining that indifference is shown towards the unsung heroes of the country, he added that this has continued for a very long time. He recited how freedom fighter Shyamji Krishna Varma's ashes had to wait for a long time to reach India, till he brought them back.

The function was attended by Governor Bhagat Singh Koshyari and Chief Minister Uddhav Thackeray among others.

Amid ongoing bitter relation between the Shiv Sena and the BJP in Maharashtra, this is the first time in over four months

Prime Minister Narendra Modi at Jagatguru Shrisant Tukaram Maharaj temple in Pune on Tuesday. Rajesh Stephen

with Modi. The CM had skipped some of the PM's previous visits to the city and the state.

Addressing the inauguration function, the PM said that Maharashtra has inspired the country in many fields and there is a very rich legacy of social reformers from Sant Tukaram Maharaj to Babasaheb Ambedkar.

The PM recalled the contribution of Lokmanya Bal Gangadhar Tilak, the Chapekar brothers, Vasudev Balwant Phadke and madam Bhikaji Cama. "The role of Veer Savarkar in India's freedom movement was immense. One must go to Andaman and Nicobar Islands to see the struggle and atrocities inflicted in prison. Students should be taken to such places to draw inspiration from our freedom fighters," the PM said.

Earlier in the day, at the inaugurating the shila (rock) temple at the existing Sant Tukaram Maharaj Temple at Dehu near Pune, the PM said that "wari" — the annual pilgrimage undertaken by 'warkaris' or devotees - has inspired the country's forward march. He said his government was ensuring that India's "vikas" (development) and "virasat" (heritage) move

RNI No. :
DELTAM/2020/78809
July: 1-15, 2022

NEW INDIA
SAMACHAR
FORTNIGHTLY

RMHRdgh st d rd d Mn D D LT @M/2020/78809 D d h h Pn st ` Lh b d msd
Mn D L(S)-1/3551/2020-22, WPPMN T (S)-99/2020-22, pn st h mg
` t B PB, Md gh d n n t B h ` w` m, Md w D d h h -110001 N m 2630 d v` mb d
Fn rt mh gh t lx (Pt b lh sh h mg D ` t d Jt md 17/2022 P` gd s-60)

ஸ்ரீ ஜகன்னாதர் ரத யாத்திரை

(1-9 ஜூலை 2022)

இந்து மதத்தில் ஜகன்னாதர் ரத யாத்திரைக்கு அளவிட இயலாத புனிதமயமான முக்கியத்துவம் உண்டு. ஒரிசா மாநிலம் பூரியில் இந்த ரத யாத்திரை ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இந்து மத நாட்காட்டியின் அடிப்படையில் பூரி ரத யாத்திரை ஆஷாத் மாத சுக்ல பட்சத்தின் இரண்டாம் நாளில் (இம்முறை ஜூலை 1) நடத்தப்படுகிறது. இதில், ஜகன்னாதர், அவரது சகோதரர் பால்பத்ரா மற்றும் சகோதரி சுபத்ரா ஆகியோரது மூர்த்திகள் மூன்று ரதங்களில் நகரம் முழுக்க வீதியுலாவாக அழைத்து செல்லப்படுகின்றனர். பூரியில் மட்டுமன்றி ஜகன்னாதரின் ரத யாத்திரை குஜராத், அஸ்ஸாம், ஜம்மு, தில்லி, ஆந்திர பிரதேசம், அமிர்தசரஸ், போபால், வாரணாசி மற்றும் லக்னோ ஆகிய பகுதிகளிலும் வங்க தேசம், சான் பிரான்சிஸ்கோ ம்ற்றும் லண்டன் ஆகிய இடங்களிலும் நடத்தப்படுகின்றன.

“

பகவான் ஜெகநாதரின் ரத யாத்திரை என்ற நன்னாளை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள். பெருமதிப்பும் பயபக்தியும் நிறைந்த இந்தப் பயணம், நாட்டு மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி, வளம், நல்ல அதிர்ஷ்டம் மற்றும் ஆரோக்கியத்தை அளிக்க விழைகிறேன். ஜெய் ஜெகநாத்!

-நரேந்திர மோடி, பிரதமர்

Editor
Jaideep Bhatnagar,
Principal Director General,
Press Information Bureau, New Delhi

Published & Printed by:
Satyendra Prakash, Principal Director General, on behalf of **Central Bureau Of Communication**

Published from:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

Printed at Infinity Advertising Services Pvt.Ltd. FBD-One Corporate Park, 10th floor, New Delhi-Faridabad border, NH-1,Faridabad-121003

Tamil Vol.3
Issue 01